சித்தர்நூல் பதிப்புக் கழகத்தின்வெளியீடு. முதல்புத்தகம்.

தமிழ் நாட்டுச் சித்தர் தலைவராகிய

திருமூலர் வைத்தியம்

(கருக்கிடை, ௩௱.)

இஃது

சென்னை - சமரசஞான சங்கத் தலைவரும் - சித்தர் நூல்
பதிப்புக்கழகத்துக்கும் சித்தவைத்திய சங்கத்துக்கும்
அமைச்சராகிய - உயர்திரு.

சண்முகானந்தசுவாமிகளால்

குறிப்புரையும்முன்னுரையும்எழுதி அச்சிடப்பட்டது

சித்தர் அச்சுக்கூடம்.
வண்ணாரப்பேட்டை
சென்னை.

1924. ஜூலை மீ
விலை ரூ. 1.

காபிரைட் ரிஜிஸ்டர்.

SHIYALI.

ஓம்

தேவிதுணை

முன்னுரை

சித்தத்திலகுஞ் செவ்வேளருளாற்
சித்தர்திறங்களிற் செப்புவன்சிறிதே

சித்தர்களால் திருவாய்மலர்ந்தருளிய நூற்களைப்படிக்கப் புகுமுன், அவர்கள் இத்தகையரென்பது அறியவேண்டியது கடனாதலால் சித்தர் என்பது முதலியவற்றிற் சிலகூறுவன்.

சித்தர்

(1) சித்தத்தில் சிந்தித்தபடியே உடலும் உண்பனவும் அடைந்து அனுபவிக்கின்றவர்களேசித்தர். ஏனையோர்களோவென்றால் நினைத்தவைகள் சேர்ந்திருந்துந் தங்களனுபவத்துக்கு நினைவில்லாமல் வருவனவற்றையனுபவிப்பர், இவைகளை ஆகாமியம். சஞ்சிதம். பிராரத்தம் என்று நூற்கள் நுவலும். அதாவது, உயிர்களால் நினைத்தவைகளே-தங்கியிருந்தும், இறைவனால் * வகுத்துக்கொடுத்து உயிர்கள் அனுபவிப்பது என்று கூறுவதுமரபு. அன்றியும், இறைவன் எண்ணியவாறு உலகம்நடைபெறுமென்றும்- உயிர்களோ அங்ஙனம் நடத்துவதற்கு இயற்கையில் வலியற்றவர்களென்றுபெறுவதால், விடாமுயற்சியின்வலியால் செயற்கையில் உடலையும் உண்பொருட்களையும் தாம் † கருதுமாறு அடைந்து அனுபவிக்கும்பெரியோரே சித்தர். இவர்களைக்கருதியேசங்கற்பசித்தரென்று‡கூறினர் போலும்.

---

*வகுத்தான் வகுத்தவகையன்றிக் கோடி தொகுத்தார்க்குந் துய்த்தலரிது. என்பதுகுறள். அன்றியும் உயிர்நினைவுடன் தெய்வநினைவும் கூடியதால் ஊழிற்குதெய்வமென்ற பெயருமுண்டு.

† எண்ணிய எண்ணியாங் கெய்துப எண்ணியர் திண்ணியராகப் பெறின். குறள்.

‡ சங்கற்பசித்தரவருள்ளக் கருத்திலுறைசாட்சிநீ - என்றார் தாயுமானார்- பிராரத்தமுள்ள அளவும் நினைத்தவாறு எவையுங் கைகூடாதாகையால் (பிராரத்தமுடையோர் அருகரேயன்றாம்) எனக் குமாரதேவருங் கூறுவாருமினர்.

(2) உயிர்கள்சிற்றறிவும் சிறுவிளக்கமுஞ்சிறுசத்தியும் சிறுசெயலும் வாய்க்கப்பெற்றமையால், சிற்றின்பமனுபவித்து மாண்டு பிரக்குஞ்செயலில் மாறுதிவறுந்துவதை உற்றுற்றுணர்ந்தும் பலரும் பலகால்முயன்றுஞ் சிலருங்கருதுமாறு கைகூடுதற்குப் பேரறிவும் பெருவிளக்கமும்- பெருஞ்சத்தியும் பெருஞ்செயலும் பேரின்பமும் உடைமையால் இறவாது பிறவாத இயற்கையின்பமயமான கடவுள்நிலையோர்ந்தும் தனக்கும் இறைவற்குமுள்ள சிறுமைபெருமைகளையும் - ஒற்றுமை வேற்றுமைகளையும் ஊகித்துணர்ந்தும் இடைவிடாதுஉள்ளங்கசிந்துருகிச் சித்தவிகாரமற்றுத் தாணுவிற்கூறிய * எண்குணங்களையும் பெற்று எக்காலும் எவ்விடத்தும் எவ்விதத்தும் எவராலும் தடைப்படாதபேரின்பத்தில் உடலோடு வாழ்ந்தவர்களேசித்தர்கள்.

(3) சகலதீமையுமிலராய்ச் சகலநன்மைகளையும்இயற்கையாகப் பெற்றுள்ள கடவுட்டன்மையைச் செயற்கையாலடைந்து அனுபவித்தும், காற்றிற் கற்பூரங்கரைந்து வெளியாதல் போல, உருவுடம்பாகிய அநித்தியதேகம் நித்தியவுருவமாகவும்- அருவமாகவும்- உருவருவமாகவும் அதாவது சுத்தம்- பிரணவம்- அருள்என்ற மூவிதவுடற்சித்தியும் † தற்போதவொழிவால் பேரின்ப சித்தியாகிய ‡ சீவன்முத்தியும் அடைந்துவாழ்ந்து உலகினருக்கு அருளியவர்களே பழந்தமிழ் நாட்டறிஞர்களென்னுஞ் சித்தர்கள்.

(4) கால்பிடித்துமூலக்கனலை யெழுப்பி- மணிமருந்து மந்திரங்களின் துணையால் மாறுத மதியமுதமுண்டு நரைமரண மூப்பறியா நல்லவுடம்புபெற்றோரே சித்தர்.

(5) காரணகாரியவகையால் உடலைச் சோதனைசெய்து எவ்வெவ்வகைப்பொருட்களின் பெருக்கால் வளர்ந்து வளம்பெறுகின்றது, எவ்வெவ்வகைப்பொருட்கழிவால் தேய்ந்துமாய்ந்து சிதைகின்றதென்பதைப் பலகாலமுயற்சியாலும் கடவுள்கருணையாலும்

---

* "நாவாரநம்பனையேபாடப்பெற்றோம்" **** "எண்குணத்துளோமே" என்றார் **வாகீசர்.**

† தற்போதமற்ற விடந்தற்பரங் காணம்மானை - என்றார் **மணிவாசகர்.**

‡ சீவன்முத்தி - உயிருடன் வாழும்போதே உயிரற்ற பிணம்போலிருப்பதால் (பிணம்போற்கிடந்து) எனவும் (செத்தாரைப்போலேதிரி) எனவும் கூறினர் **பட்டினத்தடிகள்.** சொருபமுத்திக்கடையாளமே தென்றாக்கால் சுடர்போலத் தோணுமடா அலதேகம். என்றார் — **உரோமேசர்.**

உரைப்பெற்றுப்பொய்யென்னுமுட்டம்பினை மெய்மியுன்னுஞ்சொற்குப்பொருண்மைகண்டவர்களே சித்தர்கள்.

* அணிமாதியட்டசித்திகளையும் பெற்றவர்களே. செய்யவேண்டுவனவற்றைச் செய்துமுடித்தவர்களே. எண்வகைக் † கன்மங்களையுஞ்சயித்தவர்களே. சித்தர்கள்	சிலப் பதி காரத்தில் கண்டபடி

சித்தர்வகை

1 இரசேசுரதரிசனமென்னும் நூல்வழியாகக்காய சித்திபெற்றவர்களை நவநாதசித்தர்களெனவும் கயிலாச வருக்கத்தவர்கள் என்றும் 2 - தமிழ்நாட்டுச் சித்தர்களெனவும் ‡ மூலவருக்கச் சித்தர்களென்றும் 3 - சமணபுத்தமதங்களின் சித்தர்களென்றும் மூன்று பிரிவுண்டு- மேற்கூறிய இரண்டுகூட்டத்தார்களுக்குள் பலவகைப் பேதங்களிருப்பினும், பொதுவாகச் சிவவழிபாடொன்றினைக்கருதி இரண்டுகூட்டத்தார்களும்கலந்துகொண்டதாக அறியப்படுகின்றது அதாவது, காமிகாகமம்- பூர்வபாகம்- ஸ்னானவிதிப்படலத்தில்- பதினெண்சித்தர்களின் பெயர்கள்காணப்படுகின்றது. அதுவருமாறு மனிதர், சனகர், சனந்தனர், சனற்குமரர், கபிலர், பிருகு, பஞ்சசிகர், சிவன், உருத்திரன், பவானி, பிரமன், விஷ்ணு, அக்கினி; வாயு, எமன், சூரியன், சந்திரன், என்பவர்களே. தமிழ்நாட்டுச்சித்தர்களும் பதினெண்மராக அறியப்படினும் இருகூட்டத்தார்களும் வேறுவேறென்றே அறியவேண்டும். காரணம் காயசித்திக்குறிய பொருட்களில் வடநூலாருக்குச்சூதமும் அப்பிரகமுமே. தமிழர்களுக்கு முப்புவென்றபொருளே. இதனால் இரசேசுரதரிசனக் கூட்டத்தாரோடுதமிழ்நாட்டுச் சித்தர்களைச்சேர்த்தல் ஒருவகையிலும் பொருந்தாது, பின்னால்கலந்துகொண்டதாகவே காணப்படுகின்றது.

---

* அணிமா - மகிமா- கரிமா- இலகிமா- பிராத்தி- பிராகாமியம் ஈசத்துவம்- வசித்துவம் என்பவை.

† ஞானவரணீயம் - தரிசனவரணீயம் வேதநீயம் மோகநீயம் ஆயுஷ்யம் நாமம் கோத்திரம் அந்தராய மென்னும் எட்டுந்தீக்குணங்கள். அவைநீங்கியவுடனே நற்குணங்கள்தோன்றும் அவைஎட்டும்வருமாறு: அனந்தவீரியம், அனந்ததரிசனம், அனந்தசுகம், நிர்நாமம், நிர்க்கோத்திரம், நிரந்தராயம், என்பர் சிலப்பதி காரவுரையாசிரியர்.

‡ வடமொழியில் மந்திரமாலிகைசெய்த ஸ்ரீமூலர்வேறு தமிழ்த்திருமூலர் வேறு என்பதையோர்க.

சித்தர்கலப்பு

சமணபுத்தமதங்களின் வழிவந்த சித்தர்கள் வேறாயினும்தென்னாட்டில் புத்தசமணமதங்கள் பரவிய, அசோகமன்னன் காலத்தில் தமிழ்நாட்டில் தோன்றிய * நாகார்ச்சுனசித்தரென்னும் புத்த பிட்சுவால் தமிழ் நூல்கருத்துக்களை வடமொழியில் எழுதியதாகவும் * வாக்படாச்சாரியென்னும் மற்றொருவரால் செய்ததே அஷ்டாங்க இருதயம். அஷ்டாங்கசங்கிரகம். இரசரத்தின சமுச்சயம் என்றநூற்களும்என்று, அறியப்படுவதால், புத்தமதத்துக்குப் பாலிமொழியேசிறந்ததானதால் - அதுகாலை தமிழ்நாட்டில் கடற்கோளால்நேர்ந்தகுறைவை நீக்கவே நிகண்டுகளும் - பஞ்சகாவியங்களும் பிறநூற்களும்செய்துஉதவிபுரிந்தார்கள். அப்போதேகலப்பு மிகுதியும் நேர்ந்திருக்கவேண்டு மென்றறியப்படுகின்றது. ஆனால் பாலிமொழியானது வடமொழிக்குத்தாய்மொழிபோல் அறியப்படுவதால் பாலிமொழியினால் தமிழுக்குச்செய்த உதவியினைப்பாலியும் புத்தமதமும் ஒடுங்கியதால், ஆரியசகோதரர்கள் தாங்களே தமிழுக்கு உதவிசெய்தோமென்பது, ஆராய்ச்சியுடையார்களுக்குப் புலனாகாமற்போகாது. நிற்க சமணர்கள் சித்தர்களைத் தங்களுக்குத்தேவனாகவும் .தலைவனாகவும் மதித்துள்ளார்களென்பதை அவர்கள்மந்திரமே தெரிவிக்கும் (நமோஅரகந்தானும் நமோசித்தானும்) என்று, கூறுவதால் தெளிக.

சித்தர்சமயம்

சமயம் என்பது, கடவுள். உயிர். உலகம். உடம்பு. பிறவித்துன்பம். முத்திஇன்பம். அடையும்வழி. முதலியவற்றைக் கூறுவதே. இவைகளின்பேதத்தால் பலசமயங்கள் காணப்படுகின்றன. இன்னும் பலகாணும்போலும். சித்தர்களோ சத்தியைச்சிறுபெண் வடிவாக வாலையென்றபெயருடன் ஆத்தாள்,தாய்அருள்,இயற்சத்தி அம்மை என்று கூறிவழிபடினும் சிவநெறியும் பிறகு உடன்பாடே. சிவநிலை இன்பநிலை அப்பால் பூரணம் மோனம். ஊமை பேசாநிலை

---

* இவ்விருவர்களும்தமிழ் நாட்டாரெ (மலையாளமெ) ன்றே அறியப்படுகின்றது.

வத்து சோதி என்று கூறுவார்கள். காரியகாரணங்களைச்சத்திய மென்பர். அன்றியும், முருகனைக்கடவுளாகவும் சித்தனுகவும்-வீரனுகவும் கூறுவதுடன் மலைகளில்யோகிகளும் வேடர்களும், ஏனைய தலங்களில்மற்றையோரும் வழிபட்டுவந்ததாகவே அறியப்படுகின்றன, முருகனுக்கே சித்தனென்ற பெயருமுண்டு, அதற்கேற்பத் †திருவாவினன்குடிக்குச்சித்தன் வாழ்வென்றபெயருமுண்டு, அன்றியும் பதினெண்சித்தர்களில் ஒருவராகிய போகர்சமாதி யெனவும், புலிக்கையர்தவவிருக்கையெனவும் பழநிமலையைக் கூறிவருகிறார்கள். மலையடிவாரத்திலுள்ளமடம் போகர்வருக்கம் தண்டாயுதபாணி சுவாமிகள் என்றபெயருடன் குருமடமாகவேநடைபெற்று வருகின்றது. அன்றிதமிழ்நாட்டில் பலவூர்களில் சித்தர்களுக்கு மடமும் கோவிலும் இருந்துவந்ததாகவும் அறியப்படுகின்றது. இப்பொழுதும்சிலது இருப்பதாகவும் கேள்வி. கன்னியாகுமரிக்குப் பக்கத்திலுள்ள மருந்துவாழ்மலை பாலசித்தக்குகையில் சித்தர் அடிச்சுவடு யாவருங்கண்டுவருவதும்சிலபுண்ணியசிலருக்குத்தரிசனமுங்கிடைக்கின்றது. இதனல் மலை இருப்பு முருகனுக்கும் சித்தருக்கு மென்று ஏற்படுவதால் சித்தனே முருகன் முருகனே சித்தன் என்று கூறுவதும் பொருத்தமுடையதே. அன்றியும்தாந்திரீகமதத்தலைவராகிய சிவனுருக்கும், வைதீகமதத்*தலைவராகிய அகத்தியனுருக்கும். இளம்பூரணனுகியமுருகனே குருவாகலான் இவ்விருமதங்களுக்கும் முன்னமுள்ளது சித்தசமயமென்றுஅறிவுடையோர்களால்யூகித்தறியப்படுகின்றது. திருவாவடுதுறைக்கு நவகோடி சித்தபுரமென்ற பெயரும்

---

* நல்லம்பர் நல்லகுடியுடைத்து சித்தன்வாழ்வு
என்ற ஔவையார் தனிப்பாட்டானுமறிக.

†வேதமதமேவைதீகமானதால்அதற்குத்தலைவர்கள்இருடிகள் இவர்பலருள்ளும் எழுஇருடிகளே இந்திரனை அரசிலிருத்துவோர்கள். அவர்களில் ஒருவர் அகத்தியரானதாலும் லோபாமுத்திரையுடன் கூறுகின்ற அகத்தியரைக்கூறுதநூல், வடமொழியில் குறைவென்றேகூறலாம். சிவனுரும், திபேத்து அல்லது காஷ்மீரத்திலிருந்துதாந்திரீகமதக் கூட்டத்தாருடன் வந்ததாகவும்அவர்களின் கால்வழிகளே தில்லைவாழந்தணர்களாதலாலும் மூவாயிரவரில் ஒருவரேசிவனுரென்றும் சிவனுக்குந்தங்களுக்கும் பேதமில்லையென்றுங் கூறுவர், இவர்களுக்குத்துறவு கிடையாது. மலையாளத்திலுள்ள நம்பூரிகளைத்தந்திரிகளென்றழைப்பதும், சாக்கியாரால் நடிக்கும் மத்தவிலாசக் கூத்தின்கருத்தை (நாளவட்டத் தளிமன்) என்றமீனுட்சியம்மன் பிள்ளைத்தமிழ்க்கவியும் கூறும்.

தருமபுரமடத்தில், சித்தக்கட்டென்ற தனி இடம் இருப்பதும், சித்தக்காடு என்றபெயர் பலவிடங்களில் இருப்பதும் - சிவலோகமாகிய கைலாசத்தில் அகச்சந்தானகுரவர் நால்வரும் - கருவூரார்-இடைக்காடர் -சிவவாக்கியர் - * தில்லைத்திருமூலர் - துரைசைத்திரு-மூலர்-ஆதியோர்களுஞ் சித்தர்களே. வைணவமதத்திலும் பெரியாழ்வாரை விஷ்ணுசித்தரெனவும், திருமழிசையாழ்வாரைச் சித்தரென்றேகூறி வருவதுமரபு †சிவன்சித்தனாக வந்தகதைகள் திருவிளையாடலிலும் கூறுகின்றன. அன்றியும்மணிமருந்து மந்திரங்களைத் தேவாரமாதிய நூற்களும்கூறுகின்றன. மற்றும் தமிழர்கள்மரத்தடியில்‡குறிகட்டு வழிபாடுசெய்ததாக இருப்பதால் தென்னாட்டில் ஒவ்வொருகோவிலுக்குந் தலவிருக்ஷமென்பதொன்றுண்டு அதில் நந்தியையைவைத்து வணங்கினதுண்டு என்பதையுணர்த்தவே, தருமபுரமடத்தில் சமாதிக்கு வில்வமரம்வைத்தலும் திருவடிவைத்துத்தொழுவதும் திருவாவடுதுறையில்நந்திவைப்பதும் நந்திமரபுஎன்று கூறுவதும்கொண்டு யூகித்தால் இதுகாலை,சுத்தாத்துவிதசைவம்,வைதீகசைவம், தாந்திரீகசைவம், என்றபெயர்களுடன் வழங்குவனவெல்லாம் ஆதியில் சித்தசமயமாகவே இருந்திருக்கவேண்டுமென்று அறிவுடையோர்களால் கருதப்படுகின்றது. தில்லையிலுள்ள அம்பலம்(சபை)சித்தஅம்பலம் என்றபெயர் பிற்காலத்தில்மாறிச்சிற்றம்பலம் என்றுவந்திருக்கலாம் போலும். இக்காரணங்களினாலேயே 1ஆரியர்தமிழர்எனவும் 2இருடிகள் சித்தர்கள் எனவும் பொதுமக்களுக்கும் பெரியோர்களுக்கும் முறையேபெயர், அல்லாமல். மனிதனுக்கு மனிதன்அடிமை என்ற சாதிசமயச்சண்டை கிடையாதுஎன்றுணரவேண்டும்.

---

* ஆதிகாலத்திலே தில்லையில் திருமூலர் என்றவாக்கியத்தால் பிறகுவந்தவர் பெரியபுராணத்திருமூலரென்று பொருளாகின்றது.

† சித்தாசித்தித்திறங்காட்டுஞ்சிவனேதேவர் சிங்கமே—எனத்தேவாரமும். திண்டிறற் சித்தர்களே கடைக் கூழைசெல்மின் என்று — திருவாசகமும். மந்திரமுந்தந்திரமும் மருந்துமாகி எனத்தேவாரமும். மணியாகிப்பிணிதீர்க்கும் அணியானை, யாரூர்க்காளாய் நானுய்ந்தேனே எனத்தேவாரமும். அருளான குளிகைகொடு, எனத்தாயுமானவரும். மந்திரத்தால் மருந்துகளால் மணியிரதக் குளிகையினால், எனச்சிவஞானசித்தியும். 1ஆரியன்கண்டாய் தமிழன்கண்டாய் எனத்தேவாரமும். 2 இந்தியநாட்டுள்ள இருடியருஞ் சித்தர்களும் என்றுவீரமாமுனிவரும், பவமொழிக்கு, மிருடியருஞ், சித்தரும் என்று தயிலவருக்கச்சுருக்கமும் கூறிச்செல்கின்றன.

‡ இக்கருத்துப் புறப்பொருள்வெண்பாமாலையிற்காண்க.

சித்தர்முடிவு

வடமொழியிலுள்ள - மீமாஞ்சை நியாயம் வைசேடிகம் சாங்கியம் யோகம் வேதாந்தம் என்னும் * ஆறுதரிசனங்களுக்கும் உடல் காலவசத்தால் பிணமாகவிழவும் உயிர் முத்தியடையுமென்ற கொள்கையே முடிவாதலால், இக்கொள்கையினைத் தமிழர்கள் ஒருபோதும் 1 ஒப்பமாட்டார்கள் மற்றென்னையெனின் 2 அன்பாலும் 3 யோகமாகிய 4வளிநிலையாலும், மணி மருந்து மந்திரங்களின் துணையாலும் குருவருளாலும் அமிர்தசித்தியாகிய இறவாதநிலையென்னும் உருவசித்தியும், அருவசித்தியும், உருவருவசித்தியும், முறையாகப்பெற்று அருளொளியென்னும்இயற்கைவிளக்கம், அதாவது உள்ளும்புறம்பும் ஊடுருவிச்செல்லும்பூரணவிளக்கத்தால், தன்இழப்பென்னும், முன்னிலைச் சுட்டொழிந்துண்டாமெஞ்ஞானத்தால் உயிர்முத்தியும் (உடல்சித்தியும்) பெறுவதாகிய பேரின்ப சித்திப் பெருவாழ்வடைதும் மக்கள்யாவரும் பெற்றுய்வான் வெளியிட்ட பெருங்கருணை வள்ளல்கள் தென்றமிழ்நாட்டுப் பழங்குடிமக்களின் தலைவர்களாகிய சித்தர்களே.

---

* இதுசருவதரிசனசங்கிரகத்தில் **வித்தியாரண்ணியரால்**கூறப்பட்டுள்ளது அன்றியும் யோகசிகோபநிஷத்தில் "அஜராமர பிண்டேயோ சீவன்முத்தஸ் ஸயோவஹி" (மூப்புச்சாக்காடில்லாதசரீரத்தையுடையவனே சீவன்முத்தியையனுபவிப்பன்) என்றுகூறுவது தமிழர்கொள்கை யென்றுணர்க.

1 மண்மேல்யாக்கை விழுமாறும் வந்துன்கழற்கே புகுமாறும் அண்ணு எண்ணக்கடவேனோ, எனவும்
தெருளார் கூட்டங் கூட்டாயேல், செத்தேபோனால் சிரியாரோ - என்று **மணிவாசகரும்.**
தேகம்யாதானுமொருசித்தியுறச் சீவன் முத்தியாகும்நெறி நல்லநெறி - **எனத்தாயுமானரும்.**
நரைமரணமூப்பறியா நல்லவுடம்பினரே நற்குலத்தாரெனவறிமின் - எனவும், செத்திறந்துபோய்க்கதியைப்பெறநினைந்தயேமாந்தபேதையர்போலெனைநினையேல் என**இராமலிங்கசுவாமிகளும்.**

2 மண்ணதனில் பிறந்தெய்த்து மாண்டுவிழக்கடவேனை எண்ணமிலா அன்பருளி, எனவும்

3 செய்தபிழையறியேன் சேவடியேகைதொழுதேன் உய்யும்வகையிலுயிர்ப்பறியேன், என**த்திருவாசகமும்**

4 உந்தியொடுபுணர்ந்த இருவகைவளியும் தந்தமியக்கந்தடுப்பதுவளிநிலை- என**த் தொல்காப்பியவுரைமேற்கோளும்.**
கூற்றங் குமைத்தலுங் கைகூடும் நோற்றலின்
ஆற்றல் தலைப்பட்டவர்க்கு. **திருக்குறளும்**, புகல்கின்றன.

சித்தர்சமயச்சிறப்பு.

சமயங்கள் பலவும், ஆன்றோர் பலரும் 5 மக்களுடம்பு பெறுவது மிகவும் அரிதெனவும், பெற்றமண்ணுடம்பாலன்றி 6 வேறு எவ்வகையுடம்பாலும் பிறப்பறுக்குஞ் சீரியஞானம் பெறுவது கூடாதெனவும், இவ்வுடம்பு நீங்கினால் 7 மீண்டும் இவ்வுடலே கிடைக்குமென்பதும் துணியப்படா திருத்தலால் காலமுள்ளபோதே அரிதில் முயன்று வீடுபேற்றிற்குறிய மெய்ப்புணர்வு பெற்றுய்வாய்.

அதுவாய்க்காதாயின் - யோகமுயற்சியாலும் மணிமருந்து மந்திரங்களின் உதவியாலும் *அமுதசித்திபெற்று அநித்தியதேகத்தினை நித்தியதேகமாய்ச்செய்து †காலங்கடந்துகொள். இதுவும் கூடாதேல் மூப்புவினால் முடித்தகற்பமாகிய மருந்தும் மணியும் பெற்று நரைமூப்பற்ற வுடம்பாகச்செய்து தவமுனாற்றிச் சாகாவுடம்பேனும் மூப்பில்லாத மகாவிந்து(சூத) நாதம். (அப்பிரகம் கெந்தகம். காந்தம்) கலந்து செய்யுமருந்துக்களாலும். சோதிமரப்பாலாதிய மகாமூலிகைகளாலும் மூப்புஞ்சாக்காடுந் தடுத்துக்கொண்டு செய்வன செய். இதுவும் இயலாவிடில் ‡ கூடுவிட்டுக் கூடுபாய்தல் என்னும் தொழிலைக்கற்றும் பெற்றவுடல்நீங்குமுன்வேறுடலில்சேர்ந்துவாழ்ந்து மாமோனம் பெற்று உயிருக்குமாறாது தொடர்ந்து வருகின்ற பிரப்பிறப்பென்னும் பெரியநோயினை எப்படியும் மாற்றிக் கொள்வதற்கே சித்தமார்க்கத்தில் இவ்வளவு உயர்வுதாழ்வுகளாகிய படிநிலைகள் அமைந்துகிடக்கின்றன. ஆயினும், இவர்களுடையகருத்து நூற்கள்வாயிலாக அறிவதுமிகவும் அரிது, மற்றே கதிரவனொளி

---

5 எண்ணரியபிறவிதனில் மானிடப்பிறவிதான் யாதினும் அரிதரிதுகாண் எனத் தாயுமானாரும்.

6 போகபூமியினிற் போகதனுவினாற் பொருந்தலாகாது ஏகமாமின்பசித்தி எனப் பிரபுலிங்கலீலையும்.

7 தேகமோநழுவில் நானுமோநழுவில் பின்னைஉய்யும் வகையுள்ளதோ, எனத்தாயுமானாரும்.

* அமிர்தப்பிரவாகசித்திதடருளினை. எனவும், உருகிவருமமிர்தத்தையுண்டுண்டு. எனத்தாயுமானாரும்.

காயத்துள்ளமுதூறவூறநீகண்டுகொள் - எனவும், கள்ளுறுக்கை யளித்தனன், எனத்திருவாசகமும்.

அற்பவுடல்கற்பங்கடோறு நிலைநிற்க வீறுசித்திசெய்தும், எனவும்.

† கொல்லாமை மேற்கொண்டொழுகு வான் வாழ்நாள்மேற் செல்லாது உயிருண்ணுங் கூற்று என்பதுதுறள்.

நோயின்றியன்ற யாக்கையர். முருகாற்றுப்படை

‡ மற்றொருசரீரத்தினும் புகுதலாம் எனத்தாயுமானாரும்.

கொண்டு பலவுங்காண்பதுபோலக் குருவருள் என்னும் ஒளியடைந்தார்க்கு மிகவும் எளிதே. யாவருக்குஞ்சொந்தமே.

குறைந்தகாரணம்

இத்தகையசித்தர் நெறியானது தமிழ்நாடுமூன்று முறைகடற்கோட்பட்டதனாலும் புறமதங்களின் கூட்டுறவாலும். அன்னியர் அடக்குமுறைச்செயல்களாலும் படையெடுப்புக்களாலும் பொதுமக்களுக்குள் சமயக்கல்வி குறைந்து மனம்போனவாறு தாங்களே மதித்துக் கொண்டும் சாதிசமய ஆசாரங்கள் நூல்வழியில்லாமலும்வீண்வாதச்சண்டைமலிந்தும் தமிழ்நாட்டிற்கிருகண்போன்ற சைவ வயிணவ சமயத் தலைவர்களாகிய மடாதிபதிகள் வடமொழி கற்றுத் தன்மதிப்புக்கொண்டு தமிழ்நாட்டு நாகரீகத்துக்குத் தலைவர்கள் சித்தர்கள் என்பதையும், தூயதனித்தமிழையும், மறந்து கைச்சாத்துங்கூட வடமொழியிலிட்டும், பொதுமக்கள் பலரும் சித்தர்களையும் அவர்கள்நெறியினையும், பிறர் மயக்குறையினால் அபிமானமற்று வருங்காரணங்களே என்று அறியப்படுகின்றது.

மீட்சி நிலை

தண்டமிழ்நாடு மீண்டும் பழைய நிலையினையடைய வேண்டுமாயின் சித்தர்கள் என்றால் சாலவித்தைக்காரர்கள் என்ற அறியாமையொழிந்து சித்திமுத்திவல்ல திருவாளர்களெனவும் தமிழ்மக்களின் உண்மைத்தலைவர்கள் எனவும் அவர்கள் திருவடியையோ திருவுருவங்களையோ அடிக்கடி மனத்தில்பாவித்தும் அவர்களுடைய செயற்கருஞ்செயலை அன்புடன்சிந்தித்தும் அவர்களுக்கு விழாக் கொண்டாடியும் இரவும்பகலும் இடைவிடாது நினைத்தும் புகழ்ந்தும் ஒவ்வொரு ஆண்மகனும் பெண்மகளும் தவமுஞற்றிவந்தால் எல்லாம் வல்லமுழுமுதற்செழும் பொருளின் பெருங்கருணையால் சித்தர்நெறியிற்பயிலுங்குணமுள்ள பிள்ளைகள்பலர் பிறந்து பழகிப் பலபெரியார் வாழையடிவாழையிற்றோன்றி தாயுமானவர் இராமலிங்கசுவாமிகள் போல் விளங்கினால் தமிழ்நாடு பழையநிலையினை அடையும் என்பது திண்ணம்.

மூலர்

இந்தநூல் செய்தவர்மூலர் ஆனதால் மூலரைப்பற்றிச் சிறிதுகூறுவேன். மூலமென்றால் காரணம் காரணமிருந்தாலன்றிக் காரியம் நிகழாது. காரியமாவன. அண்டமும் பிண்டமுமே. இவ்

விரும்பொருட்களும் தத்தம் நிலைமாறுபடாமலும் தொழிலும் நடக்க வேண்டுமாயின் இவற்றின்காரணம் நல்லநிலைமையிலிருக்கவேண்டும் காரணமாவன தீயும்நீரும்காலும் ஆம் இவைகளின் தலைமைத்தேவர்களோ அம்புலியும் செங்கதிரும் அங்கியும் ஆவர் இவர்களின் தூண்டுதலினால் முப்பொருட்களும் கலந்து தொழிற்படுகின்றன *தொழில்களோ - மனத்தினால் எண்ணவியலாது. நினைத்தால் மனம் வியப்படையும். அதாவது இழுப்புக்கவர்ச்சி. ஓட்டக்கவர்ச்சி யென்னும் இரண்டுவகையான இயக்கத்தினால் அண்டபிண்டங்களில் பற்பலவித மாறுதல்களும் காணப்படுகின்றன இந்தமூன்றுகாரணங்களிலும் தீயேமுதன்மையுடையது. உடம்பின் அடிப்பாகத்தில்அக்கினிமண்டிலமிருப்பதுபோலவே அண்டத்தின் கீழ்ப்பாகத்திலும் தீக்கடல் என்னும் வடவாமுகாக்கினி இருந்தே தொழில் செய்விக்கின்றது தரையில்மலைகள் வெளிப்படுவதும் பல வெந்நீரூற்றுக்களும் கெந்தகம் வெளிப்படுகின்ற புகைப்போக்குவாய்களும், பூகம்பமென்னுந்தரை நடுக்கமும், கடல்திடலாதலும், திடல்கடலாதலும், நேருகின்றன - கீழுள்ளஅக்கினியின் ஒளித்தொடரானது கதிர்மண்டிலம் † மதிமண்டிலம் அண்டமுகட்டின் நடுவிடத்தில்கோத்து நிற்பதே மேரு, இதனை (இடைபின்கலையிமவானோடிலங்கை நடுநின்றமேரு நடுவாஞ்சுழினை)என்னும் திருமூலர்வாக்காலறிக-அண்டத்தின் நடுவிலுள்ள ஒளித் தொடர்பினைச் சுழிமுனை, மேருவென்று கூறுவதுபோலவே, பிண்டத்தின்நடுவிலுள்ள சுழிமுனைநாடியினையே மேருவென்றுகூறுவர். ஒவ்வொருமனிதருக்கும் உடலின் நடுவேயுள்ள ஒளித்தொடர் இயற்கையில் மூன்றுமண்டிலங்களிலும் கலந்தேநிற்கும், இதையுணராது காலங்கழிப்பவர்களேபோகிகள். தன்முயற்சியாலும் குருவருளாலும் மணி மருந்து மந்திரங்களின் உதவியாலும்

---

* எண்டருநல் அகிலவண்டகோடியைத்தன் அருள்வெளியில் இலகவைத்துக்கொண்டு நின்றஅற்புதத்தை எனவும். அந்தரத்தகிலகோடி தாழாமல் நிலைநிற்கவில்லையோ எனவும்தாயுமானார் கூறியுள்ளார். அன்றியும் செங்கதிர்வாரி தீ யமன் தத்தம் செய்தொழில்களில் ஒருகாலும் பங்கிடாதொழுகும் பரிசது பரனைப்பற்றியுண்டாகிய பயத்தால். என்று பிரமகீதை கூறுகின்றது.

* பிண்டத்தின் மேற்பாகத்தில் சந்திரமண்டிலமிருப்பதுகொண்டு அண்டத்திலும்அப்படியே இருக்குமென்றது நமதுகொள்கை. இதற்குமாறாகஆங்கில வானசாஸ்திரிகள் சனி - செவ்வாயாதிய கிரகங்களைச் சூழ்ந்துஞ் சிலசந்திர்கள் இருப்பதாகவும் சூரியமண்டிலமேமேலிருப்பதாகவும் கூறுகின்றார்கள் ஆயினும் முடிந்த ஆராய்ச்சியின்மையால் நம்பவியலவில்லை.

சுழிமுனை திறந்து மாறுதிருப்பவர்களே யோகிகள். இவர்களால் அருந்துவதே *மதிய முதம். இவர்களால் அனுக்கிரகப்பது தேவ போகங்கள் இவர்களுக்குச் சொந்தமாகவுள்ளது அணிமாதி யட்ட சித்திகள். இவர்கள் பெயர் யோகீந்திரர். இதனைப் பத்திரகிரியார் (மூலமறியேன் முடியும் முடிபறியேன்) என்று கூறுவாராயினர். இதனால்அண்டத்தின் சுழிமுனை இடமானது சிதம்பரம் திருமூலத் தானமாம். அவணிருந்து முதலில் பிண்டச் சுழிமுனை திறந்து மதிய முதமுண்டு சாகாத்தன்மை பெற்று முதலில் சித்தரானமையால் இவருக்கு மூலரெனவும் திருமூலரெனவும் பெயருற்றது. இவரையே தமிழ்நாட்டுச் சித்தர்களுக்குத் தலைவரென்று கருதப்படுகின்றது. இந்தக்காரணத்தினால் யோகமும் சித்தர் மார்க்கமும் தமிழ்நாட்டிலிருந்து முதலில் வெளியாயிருக்கலாமென்று யூகிக்கப்படுகின்றது. அன்றியும் அக்கினிக் கொடியென்னும் அண்டச் சுழிமுனையாகிய மேருவிலிருந்து யோகங் கைவரப்பெற்றதனால் இத்தகையமேனைக்கும் இயற்கைச்சத்தி மலைகளிலும் இருப்பதாகவுணர்ந்து தங்களுக்கு இருப்பிடம் மலைக்குகையே யென்றுகருதி விட்டார்கள். இவர்வழி வந்தசித்தர்களுக்கு மூலவர்க்கமென்றும். சிவனார் வழிவந்த நவநாத சித்தர்களுக்குக் கயிலாசவர்க்கமெனவும்†அகத்தியர் வருக்கத்திற்குப் பாலவருக்கமெனவும்பெயருண்டு-அண்டச் சுழிமுனையிலிருந்து எளிதாகப்பிண்டச் சுழிமுனைதிறந்து மதியமுதமுண்டு சாகாத தன்மை பெற்றவாறே விந்துநாதங்களால் ஆக்கப்பட்டு விருத்தியாகி நாளடைவில் குறைந்து கெடுகின்றவுடல் குறையாமலும் கெடாமலுமிருப்பதற்கு அதாவது நரைதிரைமூப்புச் சாக்காடுகள் ஒருநாளுமணுகாதுவாழ அண்டத்தின்விந்துநாதங்களாகிய - பூநீரு - அண்டக்கல் உப்புஇவைகளின் இயல்புணர்ந்தும் எடுக்கும் முறையிலெடுத்து முறையில் சுத்தித்து நீற்றிக் கலந்துங் காரமேற்றி முப்புச் சுன்ன மென்னுங் குரு முடித்து அதுகொண்டு உப்புக்கள் தாதுக்

---

* அண்ணைக்குத் தன்னையடைத்தங் கமுதுண்ணில் விண்ணோர்க்கு வேந்தனுமாம்-ஒளவைகுறள்- அன்றியும் ஆரியர் யாகத்தாலும் தமிழர்யோகத்தாலும் இந்திரபதவியும் பெற்றவர்களென்று கருதலாம்.

* அகத்தியர் வடமொழியிலும் - தென்மொழியிலும் இருவருளர். முதற் சங்கநூலாகிய செங்கோன்தரைச்செலவு என்னும் நூலில் முத்தூரகத்தியன் என்றபெயர்வருவதால்தமிழ்ச்சித்தராகிய அகத்தியர்வேறென்றேகருதவேண்டும். இதனைமுடிவாகச் சொல்லவியலாது. ஆராய்ச்சியிலுள்ளது. பாலிவர்க்கமென்றுகூறிச் சமணமதச்சித்தர்கள் என்று பகரினும்பொருந்தும்.

கள். இயற்கை செயற்கைப் பாஷாணங்கள், உலோகங்கள் சத்துக்கள் மணிகள் சாரணை கட்டுவகை நீற்றுவகைகளும், செய்து முடித்துக்குருவருளால் பத்தியப் படியுண்டு சுத்தம். பிரணவம், அருள் என்ற உருவம் அருவம் உருவருவம். என்னும் மூவகையான உடற்சித்திகளும் பெற்றுத்தான் நினைத்தவாறு உடலை வெளியாக்கிக் கொள்வதே சித்தசமய வுண்மையின்கற்பம். இதிலும் மூன்றுபிறிவுண்டு. முறையிலுணர்க.

(வைத்தியம்)

பலவாறு மாறுதலடைந்து கெடுகின்றவுடலை மாறுதல் அணுகாமலும் ஓரேதன்மையாக நிலைக்கும்படிசெய்தும் அதனாலாஞ்செயலைக் குறைவின்றி நடக்கச் செய்வதெததுவோ அதுவே வைத்தியம். இதனை - (வைத்தியலச்செயல் வைத்தியமாமே) மூலரெண்ணாயிரம் கூறிச்செல்கின்றது - இதனால் தமிழ்வைத்தியமென்னும் சித்தமருத்துவமானது மக்களுடம்பில் பிணிமூப்புச்சாக்காடுகள் எப்போதுமணுகாமல் தடுத்துக்கொள்வதே முதற்கொள்கையென்க. அன்றியும் காப்பு -நீக்கம்- நிறைப்பு- என்றவகையாகக் கூறப்பட்டுள்ளது. அதாவது: மக்களுடம்பின் தன்மைகளும்வெப்பதட்பங்களும் காலமும் உண்பொருட்குணங்களும் தொழில் முயற்சிகளும் அறிந்தளந்து பொருந்தாதனவற்றைநீக்கிப்பொருத்தமானவற்றையுண்டும் (ஏற்றதொழில்களைச்) செய்தும், தவறுதல் நேரில் மாற்றுணர்ந்து மாற்றியும் வந்தால் ஒருகாலும் நோயணுகாது இதனைக்காப்பென்னும்*நோயணுகாவிதியென்பர். நூல்வழியேநடந்தும் நோய்வருமானால் அவற்றைக் (உற்றானளவும்பிணியளவும்காலமுங் கற்றான் கருதிச்செயல்) குறட்பாவின்படி † பத்துவகையாகிய நீக்குமுபாயங்களை முறையிற்செய்து நோய்களைப் போக்குவதேநீக்கமாம். பிணியுற்ற காலத்தில் உடலின் மெய்த்தாதுக்கள் ஏழினுள் எதெதினின்றும் எவ்வகைச்சத்துக்கள் கழிந்தனவென்பதையுணர்ந்தும்அவ்வச்சத்துப்பொருட்களால் மருந்துமுடித்துண்டுபிணியாற் கழிந்தசத்துக்களை ஒப்புச்செய்வதே நிறைப்பு.

---

*பாலுண்போம் எண்ணைபெறின் வெந்நீரிற் குளிப்போம்***நமனார்க்கிங் கேதுகவை நாமிருக்குமிடத்தே -தேரையர்வாக்காலும் பிறவற்றாலும் அறிக.

† மன்மூலிகைவகை வல்லுப்புத்தீநீர், பன்றாதுடற்பொருட் பாடாணம் லோகம், இன்னியற்சத்து ரசமணியோகம், ஒன்றற்கொன்றுயர் விலக்காம் நோய்க்கே. என்றுகூறிற்று மூலர் 8000

இதனில் (நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்) என்ற சொற்பொருளைத் தமிழர்கள் அனுபவித்து வந்தார்களென்று அறியப்படுகின்றது. அன்றியும் தமிழ்ச்சங்கப் புலவர்களில் ஒருவருக்கு மாமூலனார் என்று பெயர்இருத்தலால் முற்காலத்தில் மூலரென்ற பெயரைப்பொது மக்களும்பிள்ளைகளுக்குவைத்திருந்தனர்போலும்.

மருந்து

மருத்தல்‡மருந்தாதலால் வந்தநோய்களைமறுத்தல். தங்கியுள்ள நோய்களை, மறுத்தல் என்றும் நோய்வராது மறுத்தல், சாவைமறுத்தல். என்றுநான்கு வகையாகப்பொருள் செய்து ரகாறகர அதாவது வல்லினத்துக்கும் மெல்லினத்துக்கும் அபேதம் வழங்கிய காலத்தில் உள்ளமுறைமையை விளக்குகின்றது. வடமொழியில் ஓஷதி (மூலிகை) களைக்கொண்டு முடிவதை அவுஷதமென்று கூறுவர் மருந்து என்றபெயர் வடமொழியிற் கிடையாது. நிற்க மருந்தில் நான்கு வகைப் பேதங்களிருப்பதால் அவைகளையுள்ளடக்கிக் கொண்டே திருக்குறளில் மருந்து என்று ஒரு அதிகாரமும் வைத்திருத்தல் தமிழ்நாட்டுப் பழைய சித்தர் முறைபற்றி யென்றுணர்க.

இந்த நூலைத்திருத்த முயன்றகாலத்து ஓலைச்சுவடியும் அச்சிட்டபுத்தகமும் உதவியஅன்பர்களுக்கு நன்றிபாராட்டுகின்றேன். நிற்கமகமதியர்களும் ஆரியர்களும் தங்கள் தங்கள் வைத்தியங்களைப்போற்றுதல் போலவே தமிழர்கள் தங்கள் முன்னோர்தேடிக் கொடுத்த கருவூலமாகிய சித்தவயித்தியத்தினை ஆதரிக்காது விடுத்திருப்பது பாவமன்றோ; இனியாவது ஆதரவுண்டாகத் தமிழ்மக்களுள்ளந்தோறுந் தோன்றாத்துணையாக இருந்து திருவருள் சுரக்குமாறுவாலைச் சிறுபெண்மலரடிகளை வாழ்த்தி வணங்கி தவறுகளுளதேலுலகம் பொறுத்து அறிவிக்க விரும்பும் சித்தாடிப் பொடியாகிம்.

அமைச்சர்.

சண்முகானந்தசுவாமி
சித்தர் நூல்பதிப்புக்கழகம்
யோகானந்தாச்சிரமம்
வண்ணை p. o. சென்னை.

---

‡ மருப்பதுடல்நோய் மருந்தெனல்சாலும் - மருப்பதுளநோய்மருந்தெனலாகும். மருப்பதினி நோய்வாராதிருப்ப. மருப்பது சாவைமருந்தெனலாமே. மூலர் 8000

ஒரு வேண்டுகோள்.

அருந்தமிழ் நாட்டிற் பிரந்த பெருந்தகைபீர்:—

நமது நாடும் மொழியும் படைப்புக்காலமுதல்தொடர்ந்துவரும் பழயனவென்று ஆராயச்சி வல்லுனர்களால் துருவிக்காண்பதும். மருத்துவ நூற்களில் புதிய நாகரீகப் புலவர்களும் வியப்படையுமாறு ஆய்ந்தறிந்தனுபவித்த முடிவுகளே காணப்படுவதும் நமது பெருமக்களாகிய சித்தர்களுடைய செயற் கருஞ்செயலன்றோ? நமது பண்டைய நாகரீகத்துக்கு அடிப்படையாகவுள்ளது சித்தர்களால் திருவாய்மலர்ந்தருளிய நூற்களே - அந்நூற்களைச் செப்பஞ்செய்து உலகிற்பரப்பாத வரையிலும் நமது நாகரீகம் குடத்து விளக்கெனவே இருக்குமன்றி வெளிப்படாது. ஆனதால் இத்திருப்பணியைப்புரியுமாறு இறைவனருளால் தொடங்கியுள்ள சித்தர்நூற்பதிப்புக்கழகத்தின் ஆக்கத்தினைக்கருதி ஒவ்வொருதமிழ்மக்களும்உடனே ஓருரூபாய்அனுப்பி உறுப்பினராகச்சேர்ந்து நண்பர்களையும் சேரச்செய்து ஆதரவுசெய்வதுகடனாதலால் அதனையேவேண்டுகோளாக நினைவூட்டுகின்றேன்.

அமைச்சர். சி. நூ. ப. கழகம்





அறிவிப்பு.

சித்தர் நூற்கள் திருத்தமான பதிப்பின்மையால் மொழியும் சமயமும் உணர்ந்தவர்கள் அருவெறுக்கின்றார்கள் அதனைஒழிக்கவே இக்கழகம் வேலைசெய்வதால்இதினின்றுவெளிவரும் புத்தகங்களைக் கழகச்சம்மதமின்றிஒருபகுதியோ முழுதுமோ வேறு எவரும்அச்சிடக்கூடாது என்பதாக அரசாங்கத்தில்பதிவும் (ரிஜிஸ்டரும்) செய்துள்ளது மீறி அச்சிட்டால் நஷ்டஈடுசெட்டபடி வாங்கநேருமென்பதைஇதனால் அறிவிக்கின்றேன்.

யோகானந்தாச்சிரமம்
சென்னை.

இப்படிக்கு, அமைச்சர்
சண்முகானந்தசுவாமி.

சிவமயம்.

நவநாதர் துணை.

---

* திருமூலநாதர்

† கருக்கிடை வைத்தியம் ௬௱.

காப்பு.

விநாயகர் துதி.

அந்தி நிறத்தனை யானை முகத்தனை
இந்தி னிளம்பிறை போலு மெயிற்றனை
நந்தி மகன்றனை ஞானக் கொழுந்தினைப்
புந்தியில் வைத்தடி போற்றுகின் றேனே. (௧)

தேவி துதி.

தாதாவைப் போலே தயவு கொடுப்பவள்
‡ வேதாக மத்தின் மெய்ஞ்ஞான மெய்ப்பொருள்
ஆதார சத்தி யரிய மனோன்மணி
மாதாவின் பாதம் வைத்தேனென் சென்னியே. (௨)

நூல்.

கருப்பக்கோள்.

சென்னியில் வைத்தே திருநந்தி தாளிணை
மன்னிய காயம் வந்த வகைதன்னைக்
கன்னி வகுத்த கருப்பத்திரு மந்திரம்
உன்னி யுரைத்தே னுயர்வா மறுநூறே. (௧)

---

* நாதர் என்பவர்கள் நவநாதர் எனப்படுவார். நாதர் - நாத தத்துவத்தில் நிலைத்தவர் அல்லது அப்பாற் பட்டவர், இவர்களே சித்தர்கள்-

† கருக்கிடை. ஆழ்ந்தகருத்துடையது. நிலையாவுடம் பிணைநிலைக்கவைத்து அதன் தொழிலைச்செவ்வனே நடக்கச்செய்வது. வைத்தியம் இதனை(வைத்திய லச்செயல்வைத்தியமாமே) என்றார். அ000 த்தில்

‡ வேதாகமம் - தமிழ் மறை, ஆகமங்களை யென்க. வேய்தல். மறைத்தல். என்னும் பொருளால். மறைபொருளுடையது வேதமென்றாயிற்று.

உடலுற்ற வாறும் உயிருற்ற வாறும்
மடைவுற்ற வொன்பது வாசலின் வாறும்
திடமுற்ற தத்துவஞ் சீவன் புலன்களும்
கடலுற்ற நீர்போற் கண்ட கருவிதே. (௨)

கருவை யொழிந்தவர் கண்டநன் *மூவேழும்
புருட னுடலிற் பொழிந்தது மற்றென்றும்
தெரிவை கருக்குழி தேய்வு புகுந்து
உருவ மிரண்டா யோடி விழுந்ததே. (௩)

விழுந்ததுலிங்கம் விரிந்ததுயோனி
ஒழிந்தமுதலைந் துயிரோடுமேறித்
தெழிந்தது அப்புத் தேற்றுங்குணமும்
பொழிந்து புகுந்தது புணர்கின்றபோதே. (௪)

போகின்ற†தெட்டும் புகுகின்றபத்தெட்டும்
ஆகின்றமூன்றினும் அணியொன்பான் வாசலும்
நாகனுமெட்டும் நான்கிரவிமதிப்
‡பாகன்விடாவிடிற் படர்ந்தனலர்மே. (௫)

சாதிகள்.

ஏறவெதிர்க்கில் இனலயுன்தானுகுந்
நேரொக்கவாகில் நிகர்போதன் தானுகும்
மாறவெதிர்க்கில் மறையவன் றுனுகும்
பேரெருத்த மைந்தனும் போராசாளுமே. (௬)

ஆண் பேண் அலி.

ஆண்மிகிலாணும் பெண்மிகிற்பெண்ணுகும்
பூணூம் இரண்டொன்றிப் பொருந்திலலியாகுந்
தாண்மிகவாயில் தரணிமுழுதாளும்
பாண்மை மிகுந்திடிற் பாய்ந்தது மில்லையே. (௭)

---

* மூவேழு - சூக்கும வுடம்பின் தத்துவங்கள்.

† புரியட்டகசரீரம். சூக்கும வுடம்பு.

‡ பாகன், நடத்துவோன், அதாவது யாவையும் இயக்கு மிறைவன்.

வயதுண்டாங்காரணம்.

பாய்ந்துமுன் னேங்கோடிற் பாராயுளுநாறும்
பாய்ந்துபின்னேங்கோடிற் பார்வயதைம்பதாம்
பாய்ந்திடுமேவாயு பகுத்தறிந்திவ்வகை
பாய்ந்திடும் யோகிக்குப் பாய்ச்சலுமாமே. (அ)

உடற்குறை.

பாய்கின்றவாயு குறுகிற்குறளனும்
பாய்கின்றவாயு வளையின்முடமாகும்
பாய்கின்றவாயு நடுப்படிற்கூனாகும்
பாய்கின்றவாயுமா தர்க்கில்லைபார்க்கிலே. (கூ)

மந்தன், ஊமை, குருடன்.

மாதாவுதரம் மலமிகில்மந்தனும்
மாதர்வுதரஞ் சலமிகி லூமையாம்
மாதாவுதரத் திரண் டொக்கிற்கண்ணில்லை
மாதாவுதரத்தில் வந்தகுழவிக்கே. (ய)

ஆண் பெண் அலி இரட்டைப்பேறு.

குழவியும் ஆணும் வலத்தாதுவாகில்
குழவியும் பெண்ணும் இடத்தாதுவாகில்
குழவிஇரண்டாம் அபானனெதுக்கில்
குழவிஅலியாங் கொண்டகாலொக்கிலே. (யக)

கொண்டநல்வாயு இருவர்க்கு மொன்றிடில்
கொண்டகுழவியும் கோமளமாய்விடும்
கொண்டஇவ்வாயு குறிப்பறிந்திவ்வகை
கொண்டதுமில்லை கோலம்* உன்னுதே. (யஉ)

பஞ்சபூத பிண்டோற்பத்தி.

உன்னியகர்ப்பக் குழியாம் வெளியிலே
பன்னிய நாதம் பகர்ந்த பிருதுவி
வன்னியும்வாயுவு மாயுறுஞ்சுக்கிலம்
மன்னிச்சமனுய் வளர்க்கும் உதகமே. (யஙு)

* உன்னுதே-நினைக்காதே. நினைத்த வண்ணமாதலால்.

உதகம் உதிரம் உறுங்கனல் வாயுவால்
சிதகுறு மங்கங்கள் செய்து முடித்திடும்
பதகுறுமுரோமம் பகர்தசை அத்தி
நிதகுறுமொன்பது வாசலும் நீளுமே. (௰௪)

நீங்கிட நீங்கிட நிமிர்ந்து வளர்ந்தோங்கும்
ஓங்கிட ஓங்கிட உறுதியாம் வாயுவும்
வாங்கிட வாங்கிட வன்னிதலைக்கொளும்
பாங்கிடப் பாங்கிடப் பத்தாகுந்திங்களே. (௰௫)

பிறக்கும்போதே நோயும் பிறந்தது.

திங்கள்பத்தாகிற் தேய்வொடு வாயுசேர்ந்
தங்கிமலர்த்தி யமளியாய்க் கீழ்நோக்கிப்
பொங்கிப் பிறந்த நாள் புகழ்வார் வெறுவீணர்
*தங்கிச்செனிக்கையிற் றுநோயு முற்றதே. (௰௬)

நாடி—எஉ௲—த்தில் பத்து முக்கியம்.

உற்றவிபரம் உறுதியாமெங்கந்தி
பற்றியமூலம் பகர்த்திடும் நாடிதான்
எற்றியே எண்ணிடில் எழுபத்தீராயிரம்
மற்றதிற்பத்து வளமான நாடியே. (௰௭)

{நாடிகளே - வாயுக்கள் - முக்கியம் மூன்று ஆறுதாரம் - மும்மண்டலம்.}

வளமானபத்தில் வழங்குந்தசவாயு
உளமாம் இடைபின் சுழியென மூன்றுண்டு
களமான சக்கரங் காட்டியதாறுண்டு
தளமானமண்டலந் தான்மூன்றும் பாருமே. (௰அ)

பாரும் இடைகலை பின்கலை மாறியே
தாரும் பெருவிரற் காலொடுதானேறிக்
காருங்கழுத்திற் கபாலவரை நின்று
வாரும் இடமாய் வலக்கரஞ் சாருமே. (௰௯)

---

* பேறிளமை யின்பம் பிணி மூப்புச் சாக்காடிவ் வாறுங் கருவிலமைப்பு.

வலக்கரந்தன்னில் வளமானபின்கலை
நிலைக்க இடக்கரம் நின்றதிடைகலை
துலக்கநடுமையஞ் சுழிமுனையோடிடும்
பிலக்குமி வைமூன்றூற் பிறந்தது தாதுவே. (உ0)

நாடிகளே தாதுக்கள்.

தாதுமுறையே தனிஇடைவாதமாம்
போதுறுபின்கலை புகன்றது பித்தமாம்
மாதுசுழிமுனை வழங்குவதை யமாம்
ஓதுமுறைபார்த் துணர்ந்தவர் சித்தரே. (உக)

மூவகைவாயுநாடி.

உணர்ந்த அபானன் உறும் அந்தவாதத்தில்
புணர்ந்த பிராணன் புகும் அந்தப்பித்தத்தில்
அணைந்தசமானன் அடங்குங்கபத்தொடு
இணைந்திடுமூன்றுக் கெடுத்தகுறியொன்றே. (உஉ)

மூவகைநாடி யறிய.

குறியாம் வலக்கரங் குவிந்த பெருவிரல்
மறிவாயதன்கீழ் வைத்திடுமூவிரல்
பிறிவாய் மேலேறிப் பிலத்ததுவாதமாம்
அறிவாய்நடுவிரல் அமர்ந்தது பித்தமே. (உங)

பித்தத்தின்கீழே பிரண்டது ஐயமாம்
உற்றுற்றுப்பார்க்க ஓர்நரம்பேயோடும்
பத்தித்தமூவரும் பாய்கின்றவேகத்தால்
மத்தித்த* நாளம் போல் வழங்கும் நரம்பிதே (உச)

நாடிகளுக்கு மாத்திரையளவு.

வழங்கிய வாதம்† மாத்திரை யொன்றாகில்
தழங்கிய பித்தந் தன்னிலரைவாசி
அழங்குங்கபந்தான் அடங்கியே காலோடில்
பிழங்கிய சீவற்குப் பிசகொன்று மில்லையே. (உரு)

---

* நாளம். துளை.   † மாத்திரை - கண்ணிமைப்பொழுது.

நாடி நடைக் குவமானம்.

இல்லையேவாதம் எழில்நடை கோழியாம்
எல்லையே பித்தம் எழும்புந்தவளைபோல்
ஒல்லையே ஐயம் ஊர்ந்திடும் பாம்புபோல்
அல்லையேகண்டு அறிந்தவர் சித்தரே (உசு)

நாடி இடம்.

அறிந்திடும் வாதம் அடங்கும் மலத்தினில்
பிறிந்திடும் பித்தம் பெருஞ் சலத்தினில்
மறிந்திடும் ஐயம் *வாசிக்கும் விந்துவில்
உறைந்திடும் மூன்றுக் குறவாந்தலமிதே. (உஎ)

நாடி நிறம்.

உறவாங்கறுப்புஞ் சிவப்புறும் நல்வாதம்
குறைவான பச்சைப் பசுமை கொடும் பித்தம்
நிறைவான வெண்மைய்யாய் நின்றது நல்லையம்
அறைவான வர்ணம தாகுந்தலமதே. (உஅ)

உடலைம்பூதம்.

தலங்காட்டி யிந்தச் சடமான தைம்பூதம்
நிலங்காட்டி நீர்காட்டி நின்றிடுந் தீகாட்டி
வலங்காட்டி வாயுவால் வளர்ந்தே மனிதக்
குலங்காட்டி வானிற் குடியாயிருந்ததே. (உகூ)

இருந்தவிவ்வைந்தா லெடுத்த சடமிது
பிரிந்திடு மாமிசம் பிருதிவின் மயமாகும்
சொரிந்திடு மிரத்தநீர் சொற்குறியப்புவாம்
வருந்திய வன்னி வளமாய் வெதுப்பமே (௩௰)

வெதுப்பத்துடனே விடுபட்டு நாசியில்
எதுப்புற்று நிற்கு மிதுகாணும் வாயுவாம்
கதுப்பொத்து யாவுங் கபளித்திட மிட்டு
மதுப்பொத்து நிற்கும் வானின் வளப்பமே (௩க)

* வசிக்கு மென்பது - வாசிக்கும் என்பது நீட்டல் விகாரம்.

பொறிகளிலும் பூதம்.

வளப்பங் கேள்பூமி வாசிக்கும் நாசியில்
தளப்பமாந் வன்னி தானுறுங் கண்ணினில்
அளப்பமாம் அப்பு அடங்கிடும் நாவினில்
பளப்பல வாயு பரிசிக்கும்எங்குமே. (௧௨)

எங்கிய காதில் இருந்துறும் ஆகாசம்
பொங்கிய தைந்துக்குட் பொல்லா திம்*மூன்றுதான்
தங்கிய வாயு சமத்தன் மகாவாதம்
பங்கிய வன்னியாற் பகுந்தது பித்தமே (௧௩)

பகுந்த சலத்திற் பரிசிக்கும் நல்லையம்
†வகுந்த இம்மூன்றுமல் வளர்ந்தது நோயெல்லாம்
அகுந்தது தானறிந் தளவிட்ட யோகிகள்
மகிழ்ந்தே யிதில்நின்ற மயக்கம் அறிவரே. (௧௪)

வாதக்குணம்.

அறிய இம்மூன்றின் தாண்மை சொன்னர் நந்தி
எறியநல்வாத மெறிக்குங் குணங்கேளு
குறியெனக்கைகால் குளைச்சு விலாச்சந்து
பறியென நொந்துடற் பச்சைப்புண்ணுகுமே. (௧௫)

புண்ணுய் வலிக்கும் பொருமுங் குடலோடித்
தண்ணு மலத்தைத் தம்பிக்கும் போக்காது
ஒண்ணுன ஆசனம் உறவே சுருக்கிடும்
டண்ணுர் குளிர் சீதம் பகுத்திடும் வாதமே (௧௬)

பித்தக் குணம்.

பகுத்திடிற் பித்தம் பலபல சிந்தையாம்
வகுத்திடும் வாந்தியும் வாய்நீர் மிகவூறும்
மகுத்திடுமேனியில் மாட்டி யெரிப்பேறும்
மிகுத்துத் தவனிக்கும் மிக்கவிடாய்க்குமே. (௧௭)

* தீர்- தீ- கால்.
† வகுத்த—என்னும் சொல் எதுமை நயத்தால் மெலிந்தது.

ஐயச்குணம்.

விடங்கிய ஐயம் மேலிரைப் பேற்றிடுங்
தடங்கி யிருமிடுந் தனிவிலா ரெண்டுநோம்
அடங்கிச் சுரங்காயும் அளவற்ற கோழை நீர்
இடங்கியுடல் வற்றி யிரத்தமுங் கக்குமே. (௩௮)

வாயுவின் சிறப்பு.

கக்கிய மூவர் களிற் பெலன்தான்கேளு
ஒக்கிய*வாயு தான் வுடல்கூடிடிற் பெலன்
தக்கிய வாயு சகலத்துக் காதாரம்
சிக்கிய நோயைச் சிறக்க விளக்குமே. (௩௯)

தாபச்சுரமும் சீதச்சுரமும்.

விளக்கிய வன்னியும் வாயுவு மேற் கொண்டால்
தளக்கிய தாபச் சுரங்காணுந் தோஷமாம்
வளக்கிய அப்புவும் வன்னியும் மேற்கொண்டால்
இளக்கியசீதச் சுரங்காணிதன்பேரே. (௪௰)

தோஷ நிறக்குறி.

போரான தோஷம் பிறக்கு முறைகேளு
வாரான வாதமும் வன்னிக்குந் தோஷமாம்
தாரான பித்தமுஞ் சமூலாடில் வெண்மையாம்
சேரான ஐயஞ் சிவப்பேறும் வாய்விலே. (௪௧)
வாயுவடங்கினால் வளமான தோஷம்போம்
வாயுவெழும்கினால் மண்ணும் நீரொன்றாகும்
வாயுவு நீரால் வழங்கிய வன்னிசாம்
வாயுவு மாகாசம் மண்டல வோலைசயே (௪௨)

ஐம்பூதங்களின் குணம் இடம்.

†ஓசையிலைந்தும் ஒளியினிலோர் மூன்றும்
நாசியில் நான்கும் நாவினிலிரண்டும்
தேசியுந்தேசனுஞ் சேர்ந்து பிரிந்திடம்
மாசிலா நந்தி மகிழ்ந்துரைத்தாரே. (௪௩)

---

* வரயு வினியக்கத்தால் அசைகின்ற வுயிர்களைச் சரவுயி ரெனவும், மனம் வாயுவின் கூறாகவும் மனமடங்கினால் மாசற்ற நிலைவாய்க்கு மென்பதால் வாயுமுதன்மை யுடையது இதனாலன்றோ காற்றினை அரசனாகவும். தீயினை அமைச்சனாகவும் கூறும்.

† வெளியில் 5 வளியில் 4 ஒளியில் 3 நீரில் 2 மண்ணில் 1 இவைகுணம்.

ஓராண்டிலு மீராண்டிலும் சாகுங்குறி.

உரைத்தது வாசிக் குறுதிக் குறிகேளு
விரைத்திடப்பின்கலை விடாதோடில் மூன்று நாள்
இரைத்தசடம் ஆண்டில் எய்திடுமாகாசம்
*பரத்திலிரண்டுநாட் பாயி†லிரண்டெண்ணே. (சச)

மூவாண்டிலும் ஆறுதிங்களிலும் சாகுங்குறி

எண்ணி யோருநா ளியங்கிடிற்பின்கலை
தண்ணிய மூவாண்டிற் றப்பாது மாரணம்
ஒண்ணி யுபயத்தில் ஓடிடிற் பத்துநாள்
மண்ணில் மதியாறில் மரிப்பான் குறியிதே. (சரு)

நாள்மூன்றிலும்பதினைந்திலும்சாகுங்குறி.

குறிகேளு மூக்கன்றிக் குலவிவாய் வழியோடில்
மறிகேளு மூன்றுநாள் மரித்திடுவன் தப்பாது
தெறிகேளு மும்மலமுந் திரண்டுமிகக் குறைந்துவரில்
பிரிவாகும் பட்சமதிற் பாருயிர்தான் தப்பாதே. (சசு)

ஆறுதிங்களிலும்உடனேயும்சாகுங்குறி.

தப்பாது வாய் நீர்தான் தாக்கிற்றன் மேல்விழிலே
ஒப்பாகத் தனுமறைய வொழிந்திடுவன் மதியாறில்
செப்பாகத்தானிருக்கத்-தேகநிழ லலைந்திடினும்
அப்பா கேள்சாவுநிச ‡மறிந்து கற்பங்கொண்டிடே. (சஎ)

ஆறுநாளில் சாகும்.

கொண்டிடுங்தொஷக் குறிசொன்னெரெங்நந்தி
கண்டும் உதடுந் தனிப்பல்லும் நாக்கோடு
மண்டிடுந்தாது வளமாய்க் கருப்பேறில்
ஒண்டிடும் ஆறுநாளுறுதியாய்ச் சாவானே. (சஅ)

---

* பரத்தில் - இடைகலையில்.

† இரண்டு - இரண்டுவருடம்

‡ இந்தகுறிப்பினால்தமிழ்வைத்தியத்துக்குச்சாவைமாற்றுவதேமுதற்கருத்தென்க. இதனால். தமிழ்நாட்டின் முற்காலத்துச் சமயமாகியசித்தர் களுடைய கொள்கையே சைவமாகவும் சித்தாந்தமாகவும் நிலவுவதால் சமயத்துக்கு அடிபபடையாகவுள்ளது தமிழ்வைத்தியமென்றுணர்க.

ஒரு மாதத்தில் சாகுங்குறி.

உறுதியாம் பித்தம் உடம்பு மிளைப்பாகும்
பொறுதிப் பெருத்தால் போவான்மதியொன்றில்
அறுதியாம்ஐயம் அஸ்த்தியுலர்த்திடில்
உறுதியோர்மதியி லொடுங்கிடுஞ்சிவனே. (சகூ)

சாகுங்குறி சாகாக்குறி,

சிவகளையாய்ச் சேர்ந்திடும்நாடியில்
ஆவக்கரம்வைத் தழுத்திடின்மேலேறும்
தாவொத்துமேல்நோக்கிற் சாகாதொருநாளும்
பாவொத்துக்கீழ்நோக்கிற் பதையாமற்சாவனே (ருய)

பதைக்கின்றமூவரிற் பக்குவந்தப்பியே
பிதைக்கின்றவாதமும் பித்தமும்நீங்கிடில்
*சுதைக்கொண்டிருந்தாலுந் தோற்றமுயிர்விடும்
பிதைக்கொண்டவாத பித்தம்பெலனுமே (ருக)

வைத்தியர்க்குறுதி.

பித்தம் அடங்கினாற் பேசாதேபோய்விடு
எத்தியவையம் எழும்பிடிற்கிட்டாதே
எத்தியவாதம் எழும்பில்மருந்துசெய்
எத்தியிம்மூன்றின் இயல்†புக்கறிந்திடே (ருஉ)

மகாதோஷக்குறி.

புக்கியுந்தியிற்கை பொருந்தவொருவிரல்
எக்கியுயரம் எழும்பில்மகாதோஷம்
அக்கியவுந்திதா னுதாரம்வாய்விற்கு
வைக்குந்தலமென வகுத்தனர்சித்தரே. (ருங)

பத்திடங்களில்நாடிகாண.

தாதுமுறைகேள் தனித்தகுதிச்சந்து
ஓதுறுகாமியம் உந்திநடுமார்பு
காதுநடுமூக்குக் கண்டங்கரம்புருவம்
போதுறுமுச்சி புகல்பத்தும்பார்த்திடே (ருச)

---

* கற்பம்—: அமுதசித்தி. இதுஉடலில் பாவுகின்ற இரத்த ஓட்டம்மாறி அமிர்த ஓட்டம் ஓடப்பெறுதலாம்.

† புக்குஅறிதல் - மனதை ஆழ்ந்து சிந்தித்துணர்தல்.

*சாகாக்குறி-சாகுங்குறி.

பார்க்கின்றநாடி பதைப்புண்டாய்நின்றிடில்
ஏர்க்கிற்பலநாளிருப்பானிறதிடான்
காக்கிடுங்காமியம் கழன்றுசுழித்தோடில்
ஆர்க்கிலெமனுல கடைவதுமுண்மையே (ருரு)

உமிநீர்க்குறியாற்சாவு,

உண்மைகேளிள்னு மமிழ்ந்திடநோயுள்ளோன்
தன்மையாய்த்தூரத்தே தாக்கிடிற்சாவில்லை
கண்மையாம்வாயு கழன்றிடிற்கிட்டிடும்
வண்மையாய்ப்பார்க்க வகுத்தனர்நந்தியே (ருசா)

நோய்கள்வருங்காரணம்.

வகுத்தமுறைப்பாடு மந்தத்தால்வாயுவாம்
மிகுத்தநல்வாயுவால் விளைந்திடும்நோயெலாம்
பகுத்திவையிரண்டாற் பாரச்சுரமுறும்
முகுத்திவைமுன்றல் †முத்தோடங்காணுமே. (ருஎ)

மந்தம்வருதல்.

காணுமேமந்தம் கவளிக்குமன்னத்தால்
காணுமேமந்தம் கடுமாமிசம்மீறில்
காணுமேமந்தம் கலந்தமாப்பண்டத்தால்
காணுமேமந்தம் கடுமேதிப்பாலுக்கே. (ருஅ)

அன்னமே சாவிக்கும் பிழைப்பிக்கு மேனல்

மேவியஅன்னத்தால் விளங்கியதிச்சடம்
பாவியேகொன்று பழியுறுமன்னந்தான்
ஆவில்மிதந்தப்பில் ஐயுற்றுநோயாகும்
காவிலிவையெலாம் கண்டுகொ‡ள்ளன்னமே. (ருகூ)

---

*ஒரேபொருளை இரண்டுமுறைகூறியதும் சிறுபேதங்கண்டென்க.
†முத்தோடமென்பனவாதபித்தகபங்கள்தத்தம்நிலைமாறிநிற்றலையென்க.
‡ தீயளவன்றித் தெரியான் பெரிதுண்ணின் நோயளவின்றிப்படும். (என்பது குறள்)

அன்னம்பிறந்தது அனைத்துவிதையிலும்
மன்னியவெட்டை மகாசிதம்ரெண்டினல்
பன்னிப்பதிந்திதைப் பார்ப்பார்பெரியோர்கள்
கன்னிமயக்கத்தாற் கண்டிடும்மேகமே (சுய)

மேகமுண்டாகும் விதம்.

மேகம்பிறந்த விதஞ்சொன்னோரென்னந்தி
ஆகமிளந்தைப் பருவத்தில்மோகித்துப்
போகந்தினஞ்செய்யில் புகல்மந்தத்தேகூடில்
வாகப்பசியால் வழங்குஞ்சையோகமே (சுக)

சையோகஞ்செய்யத் தனித்தசுழியோடும்
ஐயாஅமிர்தம் அடக்கிக்கனலேறும்
மெய்யாகவிந்து விழவிழப்புண்ணாகும்
மையானமேகம் வளருங்கிரந்தியே (சுஉ)

சீழ்மேகம்வாயுசூலைபலமேகம்.

கிரந்தியிரணம் கிளர்ந்திடுஞ்சீழ்மேகம்
உரைந்திவையிரண்டா லுறுவாய்வுசூலையாம்
பரந்திவைமூன்றாற் பற்பலமேகங்கள்
துரந்திவைதொட்டுச் சூழ்நோய்களுற்றதே (சுங)

*இலங்கணமிடுதல்.

உற்றசுரத்துக்கு முறுதியாம்வாய்வுக்கும்
அற்றேவருமட்டு மன்னத்தைக்காட்டாதே
உற்றக்கனல்ராகன் உன்வழியேவரில்
ஒற்றேநிறைந்தோடி லொன்றுக்குமஞ்சாதே (சுச)

காயசித்தி.

அஞ்சியுகத்தி லழியாமற்காயம்தான்
மிஞ்சியகற்பம் விளம்பினேம்நூற்றெட்டடில்
தஞ்சமுறவே தான்தின்னவல்லோர்க்குப்
பஞ்சுகரைபோய்ப் பதிந்தோங்கிவாழ்வாரே (சுரு)

---

* இலங்கணம் - பட்டினி - இதுவிலங்கினங்கள் கண்டவுபாயம். இம்முறையினைத் தெலுங்கர் கையாள்வதுமிகுதி.

சுரத்துடன்வாயு(பிளே*)

வளமானபித்தத்தில் மருவிக்கபங்கட்டில்
தளமானவாயுவாற் ருனேவெதுப்பேறிக்
களமானகன்னத்திற் கட்டியேமூலமாம்
உளமாஞ்சுரத்தி லுறுகின்றவாயுவே (சுசு)

வாயுவேசகலத்துக்கும்மூலமெனல்

வாயுவினலே மலசலம்கட்டிடும்
வாயுவினலே வாங்கிடும்மேல்மூச்சு
வாயுவினலே மலருமிரணங்கள்
வாயுவினலே வரும்ருத்திர ரோகமே (சுஎ)

பேசிகோண் டிருக்கையிற்சாகுதல்.

மேகமிருபதில் மிகுந்தேறிவாயுதான்
வாகுற்றநெஞ்சில் வலித்தேமயக்கிடும்
போகுற்றபித்தத்தைப் போகாமற்றம்பித்தால்
பாகுற்றுப்பேசையிற் பதையாமற்கொல்லுமே (சுஅ)

சுகசன்னிவருங்காரணம்.

பதமாஞ்சுகசன்னி பாயும்விதம்கேளு
நிதமாகமூழ்கி நிறையவேசாப்பிட்டுக்
குதமாகமந்தத்திற் கூடிடவாயுவால்
அதமாமனுபேக மணைந்திடிற்சன்னியே (சுகூ)

மாதோஷம் காயமழிதல்.

சன்னிசுகத்திஞற் ருக்கும்வியர்வைதான்
கன்னிசுகத்திஞற் கண்கள்சிவப்பேறும்
வன்னிசுகத்திஞல் வழங்குமகாதோஷம்
அன்னசுகத்தினு லழிந்திடும்காயமே. (எഠ)

மூலம்வரும்காரணம்.

காயத்தில்மூலம் கண்டவிதங்கேளு
பாயொத்த† தீபனம் பரிந்தேயடக்கினும்
மாயைமயக்க மலத்தையடக்கினும்
ஓயுற்றகுண்டலிக் குட்புகும்வாயுவே. (எக)

---

* கட்டிக்காச்சலென்வும், நெறிக்காச்சலெனவும் கூறுவர்.
† தீபனம் - பசி.

முளைமூலம்.

வாயுபுகுந்து மலத்தோடபானத்தைத்
தேயுவைக்கூட்டித் திரட்டிக்கருக்கிடும்
தோயும்மலம்வரிற் சுருக்கிமுன்னேநின்று
ஆயுமுளைபோ லபானனிருக்குமே. (எ௨)

இரத்தமூலம்.

இறுக்குஞ்சிலமூல மெழுமண்டலம்போல
மறுக்கரணம்கொண்டு வருகுஞ்சிலமூலம்
உறுக்கியவாயுவா லுதிரமும்தான்கூடித்
தறுக்கிவிழுக்காட்டும் தான்ரெத்தமூலமே. (எ௩)

மூலத்தின்பயன்.

மூலமெழுந்திடில் முன்னேபசிபோகும்
மூலமெழுந்திடில் முனைவிந்துநாசமாம்
மூலமெழுந்திடில் முழங்குமிரைச்சல்தான்
மூலமெழுந்திடில் *முகியாக்கழிச்சலே. (எ௪)

கிராணியின்குறி.

கழிச்சல்கிராணி காணும்விதம்கேளு
அழிச்சியபித்த மனல்வாதமையமாம்
செழுச்சியவாயு சேர்ந்திவைமூன்றுலே
பழிச்செனப்பேதிக்கும் பார்பெலம்போகுமே. (எ௫)

பெலமானமேகத்திற் பிறந்ததொருபேதி
குலமானமூலத்திற் கொடியதொருபேதி
சலமானவாயுவாற் சங்கித்தொருபேதி
வலமானதாறும் வகுத்தமுறையாமே. (எ௬)

மேகம். உல்க ல் பித்தமேகநிறம்.

முறையானமேகம் முழங்கிருபத்தொன்றின்
துறையானதெல்லாஞ் சொல்லினரெண்ணந்தி
கறையாகுஞ்சிலையிற் கண்டிடில்மஞ்சள்போல்
பறையானபித்தாற் படுகின்றமேகமே (எஎ)

---

* முகியா- முடியாத. மூலரோகம் என்னுமிருபதங்களையும் முன்பின்னாக மாற்றினால் ரோகமூலமென்று வருவதால் சகலரோகமும் தோன்றக்காரணமாகவுள்ளது.

கப. வாத. மேகநிறம்.

படுகின்றசிலேதான் வாங்காய்வெளுப்பாகில்
அடுகின்றவையத்தா லாகுங்காணம்மேகம்
மடுகுங்கபீனத்தில் மயில்நிறம்போற்பட்டால்
விடுகின்றவாதத்தால் விழுகின்றமேகமே. (எஅ)

தமரேரி மேகம் நீர்த்துளி மேகம்

மேகமிம்மூன்றில் வெவ்வேறுகுணங்களு
வாகியபித்தமும் வாயுவும்கூடிடில்
தாகியநாளத் தமரிலெரிந்திடும்
போகும்நீர்கட்டிப் பொசிந்துளித்தேவிழும். (எகூ)

சிக்குநீர்மேகம் கல்லடைப்புமேகம்

விழுகுஞ்சிலநேரம் விடுபட்டுநீரோடும்
ஒழுகியவாயுவு மொதுங்கினல்போகாது
வழுகியமந்தத்தால் வாயுவந்தேபுகில்
கழுகிமுதிர்ந்திடும் கல்லடைப்பாகுமே. (அம)

மேகத்தா லுடல் நிறம்

ஆகியவாதமும் வாயுவும்கூடிடில்
தாகியவெள்ளை தடைய்ற்றுமெத்தவாய்ப்
போகியமேனி பொருமிக்கறுப்பேறும்
வாகியதாது வழங்காதுநஷ்டமே (அக)

வெளிக்காணு தேலும்புருக்கு மேகம்

வழங்கியஐயமும் வாயுவும்கூடிடில்
பிழங்கிப்பசியாது பிறவெள்ளைகாணுது
தழங்கியிளைத்துத் தானென்புபோலாவான்
இழங்கும்புகைந்தே யிருமிடும்மேகமே. (அஉ)

நீரிழிவு மதுமேகம்

இருமியபித்தமும் வாதமும்கூடிடில்
மருவச்சலமேகம் வாரிதிபோலோடும்
உருவமும் வேறுகு முண்டவுடற்காயும்
உருகியுமூளை யுறிஞ்சி யினிக்குமே. (அங)

ஐயமது மேககுணம்

இனிக்கின்றவாதத் திடைச்சேரிலேயந்தான்
பனிக்கின்ற கள்ளுப் பதனிபோல்நீரோடும்
கனிக்கின்றமேனி கரைந்துவெளுப்பேறும்
தனிக்குமதுமேகம் தப்பாமலேயிமே. (அச)

இரத்தமேகம்

ஐயமும்பித்தமு மணைந்திடும்காலத்தில்
கொய்யுமிரத்தம் கொப்புளிக்குந்தண்டில்
மைபுறும்கண்ணட்கு மகத்தாம்பெரும்பாடாம்
வைபுறும்மேகம் வரிசைமுறைகேளே. (அரு)

பரம்பரைமேகம்

முறைகேட்கிலொன்பதும் முயற்சியால்வந்தது
துறைகேட்கில்கர்ப்பத்தில் துவக்கியமேகங்கள்
நறைபூத்தகொங்கையாள் நாயகன்மோகத்தால்
மறைபொற்றும்கர்ப்பத்தில் வளர்ந்ததுமேகமே (அசு)

ஐவகை மேகம்

வளர்ந்ததுகர்ப்பத்தில் வகுத்தமுறையஞ்சு
உளந்தியவுந்தியி லுற்பத்தியாமேகம்
அளுந்திப்படும்வெள்ளை யாகாச்சுரமேகம்
தளர்ந்தியஅஸ்த்தியைத் தணலாயுருக்குமே. (அஎ)

தணற்காயும்மேகம்* தண்ணீர்ப்பகைமேகம்
உணக்கால்முழுக்கற்று லுருகுஞ்சிலமேகம்
பிணக்காற்பசிகெட்டாற் பெற்றபெருமேகம்
வணக்காற்சையோகத்தால் வரும்கடுமேகமே. (அஅ)

கடும்பசிதோன்றிடிற் காணுஞ்சிலமேகம்
அடுவுற்றபாஷாணத் தாலாஞ்சிலமேகம்
அடுவுற்றிவையேழு மஞ்சும்முன்னென்பதும்
எடுவுற்றிருபத்தொன் றேற்றினர்மேகமே. (அகூ)

---

* தண்ணீரில் கால் கைபட்டவுடனேயும் குளிர்ந்தநிலத்தில் கால் பட்டவுடனும், நீர்வீழ்ச்சியினையணுகிய காலத்தும்ஒழுகுவது.

குன்மம் வருவிதம்

ஏற்றியகுன்ம மெழுந்தவி தங்கேளு
தோற்றியபித்தமும் வாயுவும்தொந்திக்கில்
சேற்றியவன்னஞ் செரிக்கில்வலிப்பேறும்
மாற்றியநீரூறி வாந்தியாம்பாருமே. (கூய)

வாத குன்மம்

பாருமேவாதமும் வாயுவும்கூடிடில்
ஒருமே*கும்பியி லுழன்றுமிகநோகும்
கோருமேகுத்தும் குடலைமுறுக்கிடும்
வாருமேவாதத்தில் வழங்கியகுன்மமே. (கூக)

ஐய குன்மம்

வழங்கியஐயமும் வாயுவும்கூடிடில்
தழங்கியஅன்னத்தைச் சந்திக்கவொட்டாது
புழங்கிய அன்னம் புளிப்புக்கொடுத்தேறி
உழங்கிமுறுக்கி யுடலும்வலிக்குமே. (கூஉ)

மேக குன்மம்

வலிக்கின்றமேகமும் வாயுவும் கூடிடில்
பலிக்கிமலசலம் பதையாமற்கட்டிடும்
இலிக்கியிடப்புறம் இயல்பாம்வலப்புறம்
வலிக்கும் முறுக்கும் வருஞ்சூலைகுன்மமே. (கூங)

குன்மமிவைநாலிற் கூறிஞரெண்விதம்
வன்மையாம் நோய்க்குள் மகாநோய்காண்பொல்லாது
கன்மமேசெய்த கசடர்க்கிதுவெய்தும்
நன்மையாந் தர்மஞ்செய் நாட்டோர்க்குவாராதே. (கூச)

சூலையின் வகை

நாட்டியபித்தமாஞ் சூலைமுறைகேளு
மாட்டியஅன்னம் ருசிகெட்டுவாந்தியாம்
ஆட்டியகைகா லதன்சந்துபின்தண்டு
நீட்டிவலித்து நிலையாயெரிக்குமே (கூரு)

---

* கும்பி - வயறு. இந்நோயினைக் குடற்சூலையெனவும் கூறுவர்.

வாத சூலை

நிலையானவாதத்தில் நின்றிடுஞ் சூலை நான்
குலையோடுகைகால் குழைச்செல்லாம்புண்போலக்
கலையாய் வலித்துக் கனத்திடுங்கீழ்வயிறு
தலையோடுமேனி தானிளைத்தாடுமே. (கூரு)

ஐயசூலை

இளைத்திடும்மேனி யிருமிவறண்டிடும்
குளைத்திடும்கைகால் குத்திமிகநோகும்
தளைத்திடும்மார்பிற் சளிமிகத்தங்கிடும்
அளைத்திடுமையத்தா லாகின்றசூலையே. (கூஎ)

வாத பித்த சூலை

ஆகாதவாதமும் பித்தமுஞ்சூலையாய்
வாகானகைகால் வலியாய்க்*கரடேறும்
தாகானமேனி தனில்வெடிப்புண்டாகும்
போகாமல்நின்று புணர்ச்சியாய்க்கொல்லுமே (கூஅ)

ஐயபித்த சூலை

சொல்லிய ஐயமும் பித்தமும் கூடிடில்
மல்லியெலும்பில் வள்மாய்த்துளைத்துநோம்
அல்லிச்சுரம்காயு மதிகவெப்பங்காணும்
எல்லியிருமிடு மிதுகாணுஞ்சூலையே. (கூகூ)

ஐயவாத சூலை

காணுமேஐயத்திற் கனவாதசூலைகேள்
பூணுங்கபாலம் புடைத்துவெடித்திடும்
ஆணிமுளையாம் அடங்காக்குளிர்சுரம்
பேணியெலும்பெலாம் பெலன்கெட்டுமாறுமே. (௱)

ஆறுவகையி லறுமூன்று பேர்சொல்வார்
வேறும்இதையல்லால் வெவ்வேறுமொன்றில்லை
கூறுமிதனுமம் கோடிக்குமேற்சொல்வார்
பேறுமறுசூலைப்பேர் சொன்னார்நந்தியே. (௱க)

---

*கரடு -மூட்டுக்களில் வீங்கிநிற்றல், இதனைநரித்தலைவாதமெனவும்கூறுவர். இதுஎலும்பு வளருங்கொடிய நோய்.

மலடுஅறுவகை

நந்தியுரைத்தது நல்மானகர்ப்பத்தில்
அந்தியநோய்தா னறுவகையாகுங்கேள்
புந்தியில்வாயுவும் தேயுவும்கூடிடில்
மந்திமலடாவாள் மரணம்வரையெண்ணே. (௱உ)

புழுவால்மலடு

வரையானகர்ப்பத்தில் மலட்டுப்புழுப்புகில்
விரையானவிந்துவை விரைந்ததுவுண்டிடும்
கரையாமலடியாம் காணதைப்போக்கிடில்
துரையானபிள்ளை சுகமாய்ச்செனிக்குமே. (௱௩)

சீழ்மலடு

செனிக்கின்றபிள்ளை திறமானபையினில்
கனிக்கின்றசீழ்நீர் கலந்துள்ளேசிக்கிடில்
பனிக்கின்*றரைகால் பாவியேகுத்திடும்
தனிக்கும்பசிபோகும் தான்வயிறுபாரிப்பே. (௱௪)

வாய்வுமலடு

பாரியவாய்வு பரிந்துகுழிப்புகில்
தாரிக்கழிந்து சதாநித்தம்†கூப்பிடும்
வாரியுடம்பெலாம் வலிக்குமிடைநோகும்
ஆருமறிய அரைந்தவர்சித்தரே. (௱௫)

இரத்தமலடு

சித்தானகர்ப்பத்திற் சேருமிரத்தந்தான்
மத்தாயுருண்டு வாயுப்போலோடிடும்
உற்றபசிபோகு முழுன்றேயிரைந்திடும்
வற்றுக்கழிச்சலாம் வன்சூதவாயுவே. (௱௬)

சதைமலடு

சூதானமாமிசஞ் சுழித்திடிற்கர்ப்பத்தில்
வாதானமேசுத்தால் வழங்கிச்செனிப்பிக்கும்

---

* அரை - துடையின் சந்து.

† கூப்பிடும் – போகவிருப்பம் அதிகமென்க.

‡ ஒருபிள்ளை பெற்றதை வாழைமலடெனவும் இருபிள்ளை யொன்றாகப் பெற்றதைக் காக்கைமலடெனவுங் கூறுவர்.

*போதாமுடம்பெலாம் புண்போல்மிகநோகும்
நீதாமயக்கமாய் நிர்ச்சீவனுக்குமே. (௱எ)

ஆகின்றநோய்க ளறுவிதம்கர்ப்பத்தில்
பாகொன்றிநின்றுற் பலியாதுகர்ப்பந்தான்
வாகின்றதைப்போக்கில் மலடிபெறும்பிள்ளை
ஆகின்றநோய்க்கெலா மறைந்தமுறைபாரே. (௱அ)

கருப்பச்சன்னி

அறைந்திடுஞ்சன்னிக ளாகாதுகர்ப்பத்தில்
இறைந்திடுஞ்சிமூட னிற்புகும்வாயுவால்
விறைந்துவியர்க்கும் மெய்யில்மயக்கமாம்
துறைந்திடும்பற்கிட்டுஞ் சோம்பிக்கும்பாருமே (௱கூ)

பாருமேபெண்தான் பச்சுடம்பாங்காலம்
தாருமனுபோகம் தனிக்காடியுண்ணுதல்
ஆருக்குமாப்பண்ட மாகாபலாச்சுளை
கோருமேகொண்டிடிற் கூடிடுஞ்சன்னியே. (௱ய)

கொண்டமலடிக்குங் கூடிடுஞ்சன்னிதான்
மண்டியிருக்கையில் மாத்தின்பாள்மோருண்பாள்
தண்டியணைவாள் தனிச்†சூதக்காய்தின்பாள்
ஒண்டியபெண்களுக் கோரெட்டுஞ்சன்னியே. (௱யக)

ஓரெட்டுச்சன்னி யுழன்றதுபெண்ணுக்கும்
வாரெட்டுஆணுக்கும்.மகத்தாஞ்சுகசன்னி
நேரிட்டுப்பார்க்கில் நிகழ்ந்ததுவெவ்வேறு
பாரெட்டுமெச்சப் பகர்ந்தமுறைபாரே. (௱யஉ)

கண்ணோய்வருங்காரணம்

பாரேபொடிச்சுடல் பருவெய்யல்மேற்படல்
வாரேறுகொங்கையாள் மாயைமிகச்செய்யல்
காரேமுழுக்கறல் கண்ணுலனல்பார்த்தல்
சீரேறுபாஷாணம் தின்றதாற்கண்ணோயே (௱யங)

---

*போது - பூ அதாவது நொய்தாக இருப்பது.
† சூதக்காய் - மாங்காய்.

கண்ணோய்வருகின்ற காரணமின்னுங்கேள்
பண்ணுனமேகத்தாற் புருவெட்டைவாயுவால்
தண்ணும்மலக்கட்டால் தண்ணீரின்கட்டினுல்
புண்ணுமிர்ணத்திற் போடுங்காரத்தாலே. (௱௰௪)

காரச்சுறுக்கால் கடுரசத்தூமத்தால்
நேரொத்தசீரம் நிறைமூக்கின்வாசத்தால்
பாரொத்தபேதியால் பலபலதண்ணீரால்
சீரொத்தகண்ணிற் சிறக்கும்வியாதியே. (௱௰௫)

கண்ணோய்தீருமருந்து

இந்துப்புத்திப்பிலி *யியல்பீதரோகணி
நந்திப்பூச்சாற்றில் நயந்துஅரைத்திட
அந்தகன்கண்ணுக் கருந்ததிதோன்றிடும்
நந்திக்குநாதன் நயந்துமுரைத்ததே (௱௰௬)

குட்டநோய் பதினேட்டின் விபரம்

வியாதியுண்மூவாறு விளங்கியகுட்டங்கேள்
சுயாதிக்கிரந்தி சுழல்மேகத்தாலாறும்
பயாதிய†மண்ணுணிப் பல்வண்டினுலெட்டும்
நியாதிப்புழுநாலாய் நின்றிடுங்குட்டமே (௱௰௭)

சுரம்–தோஷம்–சன்னிவாயுகர்ப்பசூலைதீர

உரைத்தசுரம்போ முறவானதோஷம்போம்
விரைத்திடுசன்னிபோம் மேலானவாயுபோம்
பரத்தியகர்ப்பத்திற் பாய்கின்றசூலைபோம்
குரைத்தநற்‡சூதக் குருகூட்டிப்பார்த்திடே. (௱௰௮)

மேகநோயிருபத்தோன்றும்தீர

பார்த்திடும்மேகம் பகிருபத்தொன்றும்
போற்றிடுமெப்பிரகப் பொலிவானசெந்தூரம்

---

* இயல் - என்றலைத. ஈ யெனமாற்றி - முதற்குறைப்பதமாக்கி வெள்ளி யென்று பொருள்கூறுவர்.

† மண்ணுணி - ஒருவகைப்பாம்பு.

‡ சூதக்குருவென்றது ரசங்கட்டியபின் காரத்துடன் நீறுசெய்தது.

சேர்த்திடுசேர்த்திற் செவ்வையாஞ்சர்க்கரை
மாற்றிடுவெண்ணெயில் மாமேகம்போகுமே. (௱௰௯)

குன்மம் குட்டம் கிராணி மூலங்களுக்கு

போகுமேகுன்மம் புகட்டத்தனியுப்பு
போகுமேகுட்டம் புகட்டச்செய்கெந்தி
போகுமேகிராணி புகட்டநற்பூநாகம்
போகுமேமூலம் புகழ்சுத்தச்சேம்புக்கே (௱௨௰)

சங்கைகேள்நோய்தான் தனித்தநாலாயிரம்
சங்கைகேள்நானூற்று நாற்பத்தெட்டென்பார்கள்
சங்கைகேளியாவும் தன்னுடலிற்கண்டால்
சங்கைகேளெல்லாம் தவிடுபொடியாமே. (௱௨௧)

சகலநோய்களுந்தீரக்குருச்செந்தூரம்

பொடியாநோய்போகப் புகன்றிட்டாரென்னந்தி
மடிவான*சூதம் மகத்தானதங்கமும்
பிடிவானகெந்தியின் பேரானசத்துங்
குடியாய்ச்செந்தூரித்துக் கூட்டியேதின்றிடே. (௱௨௨)

தின்றிடநோயெல்லாம் திசைகெட்டேயோடிடும்
பன்றிடவாயுவும் பக்கத்திற்சேராது
தன்றிடலோகர்க்குத் தானாகாதிம்முறை
மன்றிடச்†சித்தர்க்காய் மாவியாதிபோகவே (௱௨௩)

வியாதிகள்போக வெகுநாட்சடமுறப்
பயாதித்திரைநரை பாங்காய்த்தவிர்ந்திடக்
கயாதிக்கவனம் கலந்தெங்குஞ்சுற்றிட
அயாதியஞான மஞ்சாகுஞ்சித்தியே (௱௨௪)

---

* ரசமுங்கெந்தகமும் கட்டிக்கடுங்காரச் செய்நீரால் சித்தருக்கும் இரண்டில் ஒன்றாவதுகட்டி அல்லது அரைப்பு நீரின் வேகத்தாலும் ஆகும் இம்மருந்து. பூர்ணச்சந்திரோதயமென்று பெயர்பெறும் வடநூலார் மகரத்துவசமென்று கூறுவர் ஆயினும் கட்டியரசகெந்தியே மேலானது.

† சித்தர்க்காகஎன்றதால் அமுதசித்தியினை விரும்பிச்செய்யும் வாயுமுதலியதாரணைகளால் பலநோய்கள் தோன்றுவதைமாற்ற வேண்டியென்க.

அஞ்சியுளத்தி!லழியாமல்காயந்தான்
மிஞ்சியேகற்பம் விளம்பினேங்கண்டதைத்
தஞ்சமென்றெண்ணித் தான் தின்னவல்லோர்க்குக்
கஞ்சன்மறலிகலங்காது வாழ்வரே. (௱௨௫)

வாழ்வதொன்றல்ல மகாசித்தியெட்டுமாம்
கேழ்வதென்றெண்ணிக் கொடுக்காதேமாண்பரே
தாழ்வதொன்றில்லைச் சதாகோடிமார்க்கமாம்
ஆழ்வதேவேதை யதுகாணுங்கற்பமே. (௱௨௬)

கற்பமேதென்று கசடரேயெண்ணுதே
யற்பமுமல்ல வகண்டமகாசித்தி
சொற்பமுமல்ல தொடுமு னவலோகம்
மற்படும்தங்க மாற்றுப்பதினறே. (௱௨௭)

பதினறுமாற்றுப்போல் பாலனுமுன்தேகம்
விதிநாலுகையோன் மெய்யெழுத்தைப்*பொய்யா
மதிநாறுமீசன் வகுத்தமுறைப்பாடு
கெதிநாறவுண்டு கிட்டாய்சமாதியே. (௱௨௮)

சமாதிக்குமுன்செய்யுஞ் சங்கைவகைகே
ளமாதித†வம்பிகை யாலேமலம்போம்
புமாதிக்‡கரிசாலை போக்குவழலையை
தமாதித்தகும்பகம் தம்பிராணுயமே. (௱௨௯)

ஆமேயிதுமுன். னடைவாகத்தீர்ந்தபின்
போமேயுடற்**பூரம் புகட்டியதீபமாய்
ஒமேபரத்தி லுறவாய்மனஞ்சேரும்
தாமேசிவமாம் தனிச்சீவனில்லையே. (௱௩௰)

---

*காலத்தினல் சாவதைமாற்று மென்க.

†அம்பிகை - குமரி அதாவது சோத்துக்கததாளை இதனல்மூலசுத்தியாம்.

‡கரிசாலை- என்றது கரிசலாங்காணி.இதனல்மேல்மூலசுத்தியாம்

** பூரம் - கற்பூரம். இதனை. சித்தம் நிருவிகற்பஞ் சேர்ந்தாருடல் தீபம் வைத்தகற்பூரததில் வயங்கும். என்றார் தாயுமானர்.

யோகம்

இல்லை*யிதத்தே யிருக்கியேபாராதே
மல்லல†லயத்தில் மதித்துமேமாயாதே
‡தில்லையே**முத்தினைச் சேர்த்திடுமாயோகம்
வல்லையார்††சாவாவழிமார்க்கமூக்கெண்ணே. (௱௧௧)

மூக்குநுனியிலே மூட்டுமனத்தைநீ
மூக்கினிடையே முழங்குமசபைதான்
மூக்கினிடைவிட்டு முன்னேடிப்போகாது
மூக்கினொளியோடி முட்டும் ‡‡ பிர்மாண்டமே. (௱௧௨)

பிர்மாண்டமுட்டிப் பேசுமேமுன்னின்று
கர்மாண்டகாண்டம் கடுகுபொடியாச்சு
தர்மாண்டமோட்சம் தனியாம்பரத்துள்ளே
நிர்மாண்டசித்தாய் நிலைத்திடுமூலியே. (௱௧௩)

நோய் வரலாறு
முற்றுப் பெற்றது.

*** மூலிகைக்கற்பம்

மூலிகைக்கற்ப முயன்றதறுபதும்
பாலியுபாசம் பாங்காயறுபதும்
வாலியசூதம் தங்கமிரண்டும்
ஒலியொருநூற் றிருபத்திரண்டே (௱௧௪)

ஒன்றுனகற்பத்தை யுண்ணுதேமாண்பர்கள்
கண்ணுனவேதைக்குக் கலங்கியழுவார்கள்
பண்ணுனகற்பம் பதிந்திடுமேனியில்
தண்ணுய்நவலோகஞ் சாரப்பசும்பொன்னே. (௱௧௫)

---

*இதத்தை.யென்றதுஇருதயத்தை- இருதயம் இரு - தயம் இரண்டசைவுள்ளவிடம்இதுதமிழ்ச்சொல். † லயம் - சுழுத்தி. ‡ தில்லை - இருதயவெளி.

** முத்தினை - கண்ணுள் மணி

†† சாவாவழி - அமுதசித்திநெறி.

‡‡பிர்மாண்டமென்றது - உச்சந்தலை.

*** மூலிகைக்கற்பம்என்றது-கற்பமாகியசுன்னம்செந்தூரங்களுக்குஅனுபானமாகிய மூலிகைச் சூரணம் கியாழம் முதலிய என்க.

பொன்தான்பிறந்தது புகழானகற்பத்தில்
பொன்தான்பிறந்தது போராம்துரிசினில்
பொன்தான்பிறந்தது புகழானசூதத்தில்
பொன்தானுபரசப் போக்கில்பிறந்ததே. (௱௩௬)

கற்பமுண்ணும்போதுண்டாமவத்தை.

பிறந்திடுங்கற்பந்தான் பேருகத்தின்கையில்
கறந்திடும்*வாமமும் கடுமலமேபோக்கும்
முறந்து†வழலையு முன்பித்தமும்நீக்கித்
திறந்துபுளியுப்பைத் தின்றிடாத்தியானியே. (௱௩௭)

கற்பத்துக் கனுபானம்

ஆனியாடிக்கு ளத்திலங்குந்திரு
மூனிவேராறுக் கன்னியுமுப்பதாம்
கானியவைப்பசி கார்த்திகைசர்க்கரை
மேனியாங்‡கடுக் கனுபானஞ்சொல்வதே. (௱௩௮)

சொல்லுமேமார்கழி தையுமேதோன்றிடும்
மல்லுமேமாசியும் பங்குனிதிப்பிலி
மெல்லுமேசித்திரை மேலாம்வைகாசியும்
நல்லதேன்‡கடுக் கனுபானமாகுமே. (௱௩௯)

அனுபானத்தோடே யந்தந்தமாதத்தில்
கனுவாகக்கொண்டிடும் காணரைமண்டிலம்
பனுவாய்மலமறும் பாங்காய்வழலைபோம்
இனிப்பாரிதைவிட்டு எண்ணுங்குமரியே. (௱௪௰)

குமரிக்கற்பம்.

குமரியுங் கள்ளிக்காய் கூறுகக்கூட்டியே
அமுரியுடன்கொள்ள அண்டமலமறும்
உமுரியாம்பிஞ்சு உள்ளேவிசிறிடும்
அமுரியாங்காய மழியாதுதானுமே. (௱௪௧)

---

* வாமம் - விந்து. நீர். † வழலை - கபம்.
‡ கடு - திரிகடு. அதாவது சுக்கு மிளகுதிப்பிலி. அன்றியும். கடுக்காய்.

தானுமிக்கற்பம் தனியொரு*மண்டிலம்
மானுமலமு மளவற்றவாமமும்
ஆனுதிழிந்து அறுதிப்படும்தேகம்
தானுமிதைத்தாண்டித் தனியாமொருநாறே. (௱சஉ)

மிளகுகற்பம்.

நூறுமிளகு நுகருமமுரியில்
வேறுமருந்தென்ன விக்காயசித்திக்குத்
தேறியிதனைச் செலுத்தவல்லாருக்கு
மாறிமயிரு மறுமயிராகுமே. (௱சங)

ஆகுமிக்கற்ப மடைவாகமண்டிலம்
வாகுடன்தின்று வளமாகத்தீர்ந்தபின்
பாகும்பெறுக்கும் பலகற்பம்தானேக்கும்
†காதங்கறுத்த கரிசாலைதின்றிடே. (௱சச)

கருங்கரிசாலை.

தின்றகரிசாலை தேகந்திரைபோக்கும்
தின்றகரிசாலை சிறந்தநரைபோக்கும்
தின்றகரிசாலை தேகஞ்சிறுபிள்ளை
தின்றகரிசாலை சிதையாதிவ்வாக்கையே. (௱சரு)

பொற்றலைவல்லாரை.

ஆக்கையிரண்டுக்கு மமுதமாம்பொற்றலை
வாக்குக்குரிய வல்லாரையோடைந்தும்
பாக்களவாகிலும் பாலிற்குழைத்துண்ண
ஆக்கையழியாது ஆயிரத்தாண்டாமே. (௱சசூ)

ஆண்டாயிரந்தான் அளந்துமேகோண்டாலுந்
தீண்டாதே பெண்ணைத் தேகங்கொடுபோகும்
பூண்டவிதஞ்சும் பொலியக்கறுப்பாகில்
யூண்டியேகொள்ள வுறுதியாஞ்சங்கையேன். (௱சஎ)

---

* மண்டிலம் - 48நாள்

† காதம் - ஏழு, அதாவது ஏழுமுறைசேராங்கொட்டை குழியில்வைத்து வளர்ந்தது.

பஞ்சமூலிகைக்கற்பம்.

சங்கேலம்பத்திரி தக்கோலஞ்சாதிக்காய்
செங்கோலவித்துடன் சீர்வன்னிப்பேர்கொண்ட
முன்கோலவேருடன் முளக்கோலநெய்கலந்
தைங்கோலம்கொண்டவர் தன்கோலங்*கொண்டாரே. ()

†சத்துச்சேந்தூரம்.

கொண்டபினேழாந் தரங்கற்பமேகேளும்
தண்டியதங்கம் தனிச்சூதமப்ரேகம்
ஓண்டியுருக்கி யுணர்வாய்ச்செந்தூரித்துத்
தண்டும்பணவெடை தான்தினம்தின்னுமே. (ாசகூ)

தின்னவேமேனி சிறுகதிர்போலாகு
மன்னியகாயந்தான் வாங்கும்கெவனமாம்
உன்னிடில்மேலே யொளிக்கு‡மனோன்மனி
பன்னியலாவயிற் பார்க்கலாம்பாருமே. (ாருய)

வேறுசேந்தூரம்.

பாருமேமற்றுமோர் பாங்கானகற்பத்தைத்
தாருமேகந்தகச் சத்தோடுதங்கத்தைச்
சேருமேசூதஞ் சிறக்கவுருக்கிட்டு
ஏருமேகூட்டி யியல்பாச்செந்தூரியே. (ாருக)

செந்தூரந்தன்னையே தின்னப்பணவிடை
கந்தூருமேனி களங்கத்துப்பொன்போலாம்
எந்தூரும்போகலா மெங்குமிருக்கலாம்
கெந்தூரக்கெவனங் கேட்டிடாய்நீலமே. (ாருஉ)

நீலஞ்சேரதில் நேரிடைகெந்தகம்
ஏலங்காலுடன் இரதமுமவ்விடை
கோலநீலியின்சாற்றில் குழைத்துண்ணப்
பாலனுமாவார் பார்நந்தியாணையே. (ாருந)

---

* கொண்டார் - உடம்பழியாதிருக்கும் நிலைபெற்றார் என்பதாம்.

† இதனை அவமிருத்துச் செந்தூரமெனவும் கூறுவர். அன்றியும். அயம். காந்தம் கெந்தகம் சத்துக்கூட்டியதும் ஒருமுறையாக நூற்கள்கூறும்.

‡ மனம் உன்மனி. என்பதுசிந்தைதுரியவெளியில்கலந்துநிற்றலென்க.

ஆணை*மலசல மடைவானபாண்டத்தில்
பூணவேவிட்டுப் பொலிவாகமண்டிலம்
காணக்கரைத்துக் கலந்துற்றசூதத்தை
யூணவே†காத்தில் உறவாயுருக்கிடே. (௫௪)

உருக்கியெடுத்து யுறவிடுசாரணை
செருக்கியபாலுடன் செய்வாய்கனபுடம்
பெருக்குங்கவனந்தான் பேரண்டஞ்சுற்றிடும்
‡வருக்கியசித்தரில் **வாசிப்பார்பாருமே. (௫௫)

பத்தியம்.

பாருமேகற்பம் பலபலவேதென்னில்
ஆருமேகொல்ல வசையாதுகற்றேகம்
வாருமேனென்பார் மகத்தானசித்தர்கள்
காருமேபத்தியம் காட்டினார்பாலென்றே. (௫௬)

பாலுடன்வேல்லம் பயறுமரிசிநெய்
போலுகைத்தின்பன பொற்கனிதேனுடன்
மேலப்பணியார மிளகுபொன்னாங்காணி
††சீல்பெரும்யோகிகள் சித்தர்கள்பூசையே. (௫௭)

புளிங்கறிகைப்புப் புலாலாட்டிறைச்சியும்
களிம்புசுண்ணும்பு கடுகுள்ளிக்காரெண்ணெய்
‡‡யளிம்பு லவண மாகாதிவையொன்று
முளம்பெறுசித்திக்கும் யோகிக்குமொவ்வாதே. (௫௮)

யோகிகணேரிழை யுறவாடல்நீராடல்
பாகியநெய்யாம் பலபலசித்தர்க்குத்
தாகித்ததாகம் தனிப்பாலும்வெந்நீரு
மாகிமுழுக வகுத்தவழகென்னே. (௫௯)

---

* மலசலம் - என்பது பரிபாஷை.

† காத்தில் - என்றது திருத்தியில் வருங்காற்றில்.

‡ வருக்கம் - வழி மூன்று அதாவது கயிலாசவருக்கம் மூலவருக்கம் பாலவருக்கமென்பன.

** வாசிப்பார் - கூடயிருப்பார்.

†† சீலம் என் சீல்பதிஎனநின்றது. ‡‡யளிம்பு - பேண்போகம்.

பஞ்சகற்பம்.

அழகுநுதலி யதிசயமேகேளாய்
களவுகாயுங்கலந்தவன்*நீரிலே
மிளகுமஞ்சள்†கடு நெல்லியும்வேம்பிடில்
இளகுங்காய மிறுகுங்கபாலமே. (௱சுய)

கபசோதனையின்பலன்.

கபாலமிறுகுங் கண்ணுந்துலக்கமாம்
அபாலமிந்தனி அதுவண்டுபோலாகும்
விபாலத்திசைவாய்வு வேதனைசெய்யாது
இபாலத்தினுள்ளே யெளிதாகமத்தியே. (௱சுக)

மத்தித்தசித்தர்கள் மாள்வரோமாளாரே
உத்தகருவை யுரைத்திட்டாரென்னந்தி
பத்தித்தபூரணம் பார்த்தவர்மாளார்காண்
முத்தித்தகற்ப முன்னுண்டார்கேட்டிடே. (௱சுஉ)

மூலிகை கருப்பாக

கேட்டிடுமஞ்சள்கெடியானமூலிகை
நாட்டிற்கரிசாலை நலமாய்க்கருப்பேற
ஆட்டுங்குழிவெட்டி யதிலேநன்மண்ணிட்டுப்
பூட்டிடுசெங்கொட்டை புகழாகவெட்டியே. (௱சுஙு)

வெட்டிப்பரப்பி மேலேமுன்மண்போட்டு
ஓட்டிவிரையிட் டுறவாருநல்லநீர்
விட்டிமுதலத்தான் வளமாமரைவாசி
கட்டிவிரையைக் களர்மண்ணிற்கொட்டையே. (௱சுச)

கொட்டைதனைப்போட்டுக் கொட்டிப்பரப்பிட்டு
சட்டையாமுன்விரை தானே தனியிட்டு
அட்டியநீர்விட் டடைவாயருத்துநீ
இட்டமாய்மூன்றுந்தரமிப்படிப்பண்ணே. (௱சுரு)

மூணுந்தரத்தில் முழுக்கறுப்பாமேலாம்
‡ஆணுசித்தர்க ளங்கங்கு செய்வது

---

* கடு - கடுக்காய் இதுசோரமலும் பஞ்சகற்பமுண்டு.
† ஆண் - ஆளுந்தன்மை.
‡ நீர் - பேயன் வாழைநீர்.

வேணசெடிகள் வெளுப்புக்கறுப்பாகும்
ஊணவேசெய்தார் உத்தமர்தான்கேளே. (௱௬௬)

நூல்தொகை.

கேளுசதாசிவன் கெடியேழுலட்சந்தான்
நாளுமயேச்சுரன் நன்மூன்றுலட்சந்தான்
ஊழியவீசனு முயன்றிருலட்சந்தான்
வாழியான்கண்டது மைம்பதாயிரமென்னே. (௱௬௭)

என்னப்பிரமன்று னெழுமுப்பத்தாயிரம்
பன்னமுனிவர் பகர்ந்ததிலாயிரம்
மன்னியசித்தர்கள் மற்றுள்ளோர் கொண்டார்கள்
தன்னிகர்மூலன் சாவுபொய்யானதே. (௱௬௮)

பொய்யாச்சுசாவென்றார் போனார்பிரமன்மால்
மெய்யாயடைந்தார்கள் விளங்கியமூவரும்
ஐயாவிதுவென்ன ஆச்சரியஞ்சொல்லாய்
மையானகண்ணிகள் மாயத்தால்மாண்டதே. (௱௬௯)

ஆறுதாரம்.

மாண்டதினாலோ மாத்துண்டோவென்னந்தி
பூண்டதிவர்கள் புகழ்வாழ்ந்ததெவ்விடம்
வாண்டது*மேரு வடியிற்கணேசன்கேள்
தாண்டவதின்மேலே தான்பிரமாதியே. (௱௭௰)

பிரமாதிமேலே பிறந்தமால்பட்டினம்
அறமாதிமேலே யரனுடபட்டினம்
நிறமாயதின்மேலே நின்றமயேச்சுரன்
தறமாயதின்மேல் சதாசிவன்வாழ்ந்ததே. (௱௭௧)

அண்டபிண்டவுற்பனம்.

வாழ்ந்தவிதஞ்சொல்வேன் வாசலிற்சிற்பரி
ஆழ்ந்தவதின்மே லனுகும்பராபரம்
வீழ்ந்தவசபை விடுநாளோடெங்குமாய்ச்
சூழ்ந்தவைகுண்டங் துலையாப்பிரமமே. (௱௭௨)

---

* மேரு - வீணாத்தண்டு இதுஒளிவடிவாகியது.

பிரமாமுதலாய்ப் பிறந்ததுமிவ்வகை
மரமாண்டபிண்டத்தி லப்படியேகண்டேன்
தரமாண்டலோகத்தோர் தாக்கியுநோக்கியும்
ஊரமாகக்காணு துழல்வதென்னந்தியே. (௱௭௩)

நந்தியைநோக்கார் நடுவணைநோக்குவார்
பந்தியைநோக்கிடார் பார்ப்பாரசபையை
அந்தியையேறையி லாகாக்குரங்குதான்
வந்திடவேகனம் வாசனைபூணுமே. (௱௭௪)

பூணிடில்வாசம் பொறியில்மனமோடி
யூணிடிலட்சிய முழன்றுசுழன்றிடும்
கோணிக்குரங்கால் குறிநாறுக்கெய்யாது
பேணிப்பிடித்துப் பிதற்றுவார்பேயரே. (௱௭௫)

பிதத்தாமல்நோக்கிற் *பிரமவழிகாணும்
மதத்த†மதுவுண்டு மனதெண்ணப்பூரணம்
அதைத்தானேயான்காணு வதுவென்னையுட்கொள்ள
எதிர்த்தாலேயாகு மென்னீசனந்தியே (௱௭௬)

ஈசனைக்காண வெளிதல்லவோங்கார
வாசலைத்தாண்டி யகண்டமயங்காண
வாசனவாசல் மனோன்மணிபேசிடும்
யோசனைசூதமு முயர்ஞானமொக்குமே. (௱௭௭)

ஒக்குமேசூதமு மொப்பற்றஞானமுஞ்
சிக்குமேபூரணந் தெவிட்டாதேகாணுமோ
மக்குமோவாசனை மனக்குரங்கேகுமோ
தக்குமுபதேசஞ் சாத்திடாயென்னந்தி. (௱௭௮)

சாற்றுங்குளிகையைத் தான்வாயிலேவைத்து
ஏற்றியேநீபா ரேழு‡சபைகாணும்

---

* பிரமவழி - பததாவதுநெறிஇது உச்சிவழி நெற்றிநடுவொளி.
† மது - அமுதம். இதுஐந்துபிறிவு இதனையமுதசித்தியென்பர்.
‡ ஏழுதிறையும் - ஏழுஒளியும் மேசபையிலுள்ளது.

போற்றுமனோன்மணி புகழுங்கடந்தபின்
தீற்றியபூரணம் தெளிவாகக் காணுமே. (௱எகூ)

உருவசித்தி.

நிர்மலமாகும் நீண்டவுடல்கோணார்
நிர்மலமாகுமே நின்னுடல்பூரணம்
நின்மலமாகுமே நின்சாய்கையேபொய்யாம்
நிர்மலமாகவே நின்றிடிற்காணுமே. (௱அ0)

உபதேசம்.

காணும்வழியேது காரணையென்னந்தி
பூணும்*விளக்கி லொருதீபங்கீழ்நோக்கி
லாணிவிளக்கி லொருதீபங்கீழ்நோக்கிப்
பூணியேதீபம் பொரிந்தங்குபத்துமே. (௱அக)

பத்தியதீபம்போல் பராபரங்கீழ்நோக்கி
எத்தியெடுக்கு மிதுகாண்மாகாசித்தி
அத்திக்குளிகையு மப்படியேகாணு
முத்தியுமாமேதான் முன்னின்றுகாணுமே (௱அஉ)

அருவசித்தி.

காணுமேதேகந்தான் கத்திநடுவோடும்
பூணுமேதேகம் பிடித்தவிடம்பொய்யாம்
கோணுமோமேனி கொழுந்தாகுஞ்சோதிபோல்
ஆணுமேநாளு மையாமறையுமே (௱அங)

மறையும்பூரணம் வளர்ந்தமுடியேது
மறையும்பூரணம் வாழாதடியேது
மறையும்பூரணம் வளர்ந்தபனிரெண்டில்
மறையும்பூரணம் வளமாகநாலெட்டே (௱அச)

நாலேதுயெட்டேது நாட்டிடாயென்னந்தி
காலோடுமூலங் கலந்தோடிமையத்தில்

---

* விளக்கினுவமை மிகவும் பொருத்தமானது.

*பாலோடுமுட்டிப் பறிந்தபனிரெண்டும்
பூலோடுமெட்டுந்தான் புக்கிற்றுபாருமே. (௱அரு)

பாரிதுவெட்டும் பறிபட்டதுநாலும்
ஆருமறியார்களண்டிடும்பூரணம்
வேருமுதலும் விளக்கினேன்கேள்மூலன்
சேருமிதனில் சேர்ந்தவர்சித்தரே. (௱அசு)

சித்தர்க்கு†நாலே தெவிட்டாதபூரணம்
மத்தித்தவெட்டின் வகைசொல்லாயெனந்தி
ஒத்தித்தொருவிர லுயர்ந்தபரமாகு
மத்திரண்டாந்தான மகத்தாஞ்சிவமென்னே. (௱அஎ)

மகத்தானமூவிரல் மாயாகாசத்திற்
பகத்தானநாலும் பரிவானநாதங்கள்
அகத்தானவைவிர லாதிமகாவிந்து
சகத்தானமாறுஞ் சதாசிவம்பாருமே. (௱அஅ)

மூவிரல்பார்க்கில் மயேச்சுரம்வேறும்
மேருதட்டாம லுயர்ந்திடும்ருத்திரன்
சேருமிதெட்டால் சிவனங்கேசஞ்சாரம்
ஆருமறியாரிந்து கொளுண்மையே. (௱அகூ)

பஞ்சபூத வொடுக்கம்.

உண்மைதானிவை யொடுங்கும் வகைகேள்
வண்மைப்பிரமன்முன் மாலொடுசேருவான்
தண்மையாய்மாலுக் தனிருத்திரன்சேரும்
மண்மயருத்திர னுக்குமயேசனே. (௱கூ0)

மயேசுரன்சென்னியில் வாழுஞ்சதாசிவம்
பயேசுரவிந்துவிற் பாய்ந்துமொடுங்கிடும்
அயேசுரவிந்து வடங்குமேநாதத்தில்
தயேசுரநாதத்தைத் தான்கொள்ளுஞ்சத்தியே. (௱கூக)

---

* பால் - மேல்பக்கம், ஓடு - தலையோடு.

† நாலு - அக்கினிக் கலையென்க.

சத்தியோடுக்குந் தனித்தசிவத்துள்ளே
ஒத்திச்சிவந்தா னுயர்ந்தவராட்டினில்
நத்திவராட்டியை நடத்துவாள்சிற்பரி
கொத்துடன்சிற்பரை கூடியேநிற்குமே (௫௯௨)

நிற்குமப்பூரணம் நீண்டமுகசாலை
தக்குந்தாள்வாசல் தனிக்குமனோன்மனி
ஒக்குநெருப்பாறு மோடேமயிர்ப்பாலம்
சிக்குமோசிக்காதோ திறந்துநீபார்த்திடே. (௫௯௩)

பார்த்திடப்பார்த்திடப் பாழாகும்பேய்மனம்
ஏர்த்திடயேர்த்திட யெழுந்திடும்வாசனை
கோர்த்திடக்கோர்த்திடக் குரங்குகுலைந்தோடும்
சேர்த்திடமார்க்கந் தெளிவிப்பாய்நந்தியே. (௫௯௪)

தெளிந்தாயேமைந்தாநீ சேரவேயொவ்வொன்றாய்
யழிந்தேகடந்தே யகண்டத்தில்புக்கினல்
கழிந்*தாயிரத்தெட்டுங் கடுகுபொடியாகும்
ஒழிந்தவராட்டிய னைக்கனுமாண்டதே. (௫௯௫)

மாண்டவருன்னுள்ளே வந்தவழிசொல்லாய்
எண்டியசத்தர்க ளெல்லாரும்போனரே
†ஆண்டனேமூல மறிவிப்பாயென்னந்தி
ஊண்டனேயுற்பன முறைத்திடாய்போதமே. (௫௯௬)

உப தேசம்.

போதமேயென்று புலம்பினமாணாக்கன்
மாதாமனோன்மணி வந்தாளவ்வாசலில்
ஓதநினைத்தா ‡ளுண்டாளீசனை
காதையவீசனுக் கச்சத்தியானதே. (௫௯௭)

---

* க00அ - தத்துவங்களையென்க, இதுமிகப்பழயனவாகலின், இப்போதுள்ள தத்துவக்கட்டளைகளில் கிடையா. அண்டங்களெனவும் பொருளாகும்.

† ஆண்டவனே என்றசொல் குறுகி ஆண்டனே என்று வந்தது.

‡ உண்டானள் - உண்டாக்கினள்.

சத்தியில்நாதம் தனிநாதம்விந்துவாய்
ஒத்திச்சதாசிவம் ஊட்டிமயேச்சுரன்
கொத்திய ருத்திரன் குலாவியமால்கஞ்சன்
பத்திமுறைகேள் பலபல*சீவனே. (௱௯௮)

இருக்கின்றசிவன்கெல்லாத்திற்பூரணம்
மருக்கியிருக்கு மதைக்காணவில்லோர்கள்
தெருக்கியேதிண்டாடுந் தேர்விந்துநாதந்தான்
சொருக்கியேவைத்திடஞ் †சுருதிமுடிந்ததே. (௱௯௯)

முடிந்தமுடிவேது முற்றும்படியேது
கடிந்த‡கதலிப்பூ கண்டாங்கிதயத்தே
படிந்தவிதழ்தான் பதினாறாய்நின்றது
அடிந்தநடுவே யறுகோணம்பார்த்திடே. (௨௱)

பார்த்தாயோமூலம் பரத்தினடியிது
எத்தாயோடன்ன மெடுத்தமலச்சடம்
கூத்தனைக்கூப்பிடுங் கொட்டாவிசோம்பெண்ணல்
காத்தாங்கடிநிற்குங் கண்டாங்கதைப்பாரே. (௨௱௧)

அங்கென்றுவோட்டி லடிவிட்டசையாது
சிங்கென்று கூறச் செலுமெட்டுமுன்னுள்ளே
வங்கென்றுநாலும் மனத்தின்முடியாகும்
நங்கென்றுநாட்டிய நாட்டமதுபாழே. (௨௱௨)

அண்ட நிலை.

பாழென்றுசொன்னிர் பகர்ந்திடுமுப்பாழை
மாழென்றொருவிரல் மலங்காவெளிபாழாங்
தாழென்றிருவிரல் தனியெளியேபாழாம்
வேழொன்றுமூவிரல் வெளியாமொழிப்பாழே. (௨௱௩)

பாழ்மூன்றுந்தாண்டிற் பராபரபூரணம்
நாள்மூன்றுகோடி நாடிலுமெட்டாது.

---

* மூன்று லோகத்தில் உள்ள உயிர்கள் பலவும் யோகத்தாலும் தவத்தாலும் அன்பாலுமே பதவிகளைப் பெற்றாரென்றதால் யாவரையும் சீவரென்றார்.

† சுருதி - கேட்பது அதாவது உபதேசம்.

‡ கதலிப்பூ - இருதயதாமரை, இருதயம் இரண்டசைவு.

தாள்மூன்றுங் கண்டாற் சகலமும்பூரணம்
கேள்மூன்றினாலே கெடியண்டமானதே. (௨௱௪)

அண்டந்தானிம்மட்டோ வப்பாலுமுண்டோதான்
பண்டுமுதற்பாழ் படர்ந்துதீயாச்சென்று
*தண்டும்பணருந் தனிக்கொம்புங்காய்பழம்
ஒண்டும்விரையொன்றி லோரண்டநின்றதே. (௨௱௫)

நின்றாயிரத்தெட்டு நேரொருகாயாச்சு
பண்டானகொம்பும் பணருமதிற்பூவும்
கண்டாருரைப்பர்கண் காணவுங்கிட்டாது
பண்டான†வத்தி பரத்தினடி‡கண்ணே. (௨௱௬)

யோகம்.

கண்பார்க்கக்கிட்டாது காணவரிதென்றீர்
நண்பாகப்பார்க்கவே மார்க்கமுஞ்சொல்நந்தி
வண்பட்டகண்ரெண்டும் வைத்துமுனைமூக்கில்
தெண்பட்டநாலுஞ் சிதையாமல்சேர்த்திடே. (௨௱௭)

சிதைக்குமேநாலொன்றாய்ச் சேரவெறும்பாழாம்
பதைக்குமனோன்மணி பட்டப்பகலாவாள்
உதிக்குமிரவிகோடி யொப்பல்லவொப்பல்ல
கதிக்கின்றபூரணங் கரையில்லைபார்த்திடே. (௨௱௮)

கரையற்றுநின்ற கலிங்கநற்**பூரம்
உரையற்றுநின்ற தொளியாமகாபோதம்
சிரையற்றுநின்ற ††சிறுபிள்ளைகாட்டிடில்
வரையற்றுநிர்க்குணம் வாக்கற்றமோனமே. (௨௱௯)

மோனமறிந்து‡‡முழுதுந்தனையொட்டில்
கானமிருந்தேன் கடுவூரிடைவாழ்ந்தேன்
தானமேன்தவமேன் சாவேன்பிழைத்தலேன்
வானமேனண்டமேன் வாரிதிபொய்யென்பார். (௨௱௰)

---

* தண்டும் - நடுமரமும், பணருங் - கிளைகளும். யென்க.
† அத்தி - யென்றது தலைகிழானமாயாமரம் இதனைவடநூலார் அரசுஎன்பர்.
‡ கண்ணே - கருதுவாயாக.
** பூரம் - கற்பூரம்.
†† சிறுபிள்ளை - வாலை.
‡‡ முழுதும் - அக்கினிக்கலையாவும்.

பொய்யாமோவையா புகலுறக்கண்டது
மையானசங்கத்தால் வார்த்தையால்பொய்யென்பார்
கையாரக்கண்டதுங் காணாதேபோய்விட
வையாசமாதி யடைந்தார்க்குக்காணாதே (உகக)

காணாதேபோய்விடில் காணுநடனந்தான்
வூணாதேவூணிட வோங்குந்தொனிபத்துந்
தோணாதேதோணுஞ் சுருதிமுடிந்திடங்
கோணாதேதம்முட் குறிப்பதுபோதமே (உகஉ)

போதமேநோக்கவும் புக்கவெளிதோதான்
நீதமாய்மெள்ள நிலையுற்றுநீபாராய்
காதமுமல்லகாண் கண்ணுக்கடுக்கக்காண்
*சாதம்முறையோடே தப்பாமற்பார்த்திடே (உகங)

தப்பாமற்பார்க்கவும் †தானஞ்சொல்வானந்தி
ஒப்பாகவுன்செய லூடியொளியாகும்
முப்பாழுந்தாண்டி முடியமட்டுந்தோன்று
மப்பாவுனக்குமேல் ஆதியொன்றில்லையே (உகச)

இல்லையென்றுமெல்லை யெங்கும்பராபரம்
இல்லையென்றுமெல்லை யிருக்குங்குருவருள்
இல்லையென்றுமெல்லை யேகமென்பார்காணார்
இல்லையென்றுமெல்லை யெனக்கெல்லைசொன்னதே(உகரு)

சொன்னவழிகேளுஞ் சூக்கவராட்டியன்
வன்னியகண்டத்தின் வைத்தின்மலரடி
பன்னியவெட்டுள் பரந்தமுடிபார்த்தான்
தன்னையேயான்சொன்னேன் சாதிக்கவல்லோர்க்கே ( )

வல்லோர்கள்பார்ப்பார் ‡ வராட்டியன்தானாக
எல்லோர்க்குமெய்த வெளிதாச்சோமெய்ஞ்ஞானம்

---

* சாதம் - குருபிரசாதம், அதாவது அருள் விளக்கம்.

† தானஞ்சொல் - உண்மைநிலை விளக்கிக் காட்டுதல்.

‡ வராட்டியன் - மேலோன்.

பல்லோர்பரமாகப் பார்ப்பார்வாரட்டியை
சொல்லார்மயிர்ப்பாலஞ் சூக்கங்கனல்தாண்டே. (உகஎ)

தாண்டிடில்வாசனை தவிடுபொடியாச்சு
ஆண்டிடில்மற்கட்டு மழன்றங்கிறுந்தது
தூண்டிடிற்சிற்பரை சுடர்கோடிபானுபோற்
காண்டிடுமாணுக்கா கடந்துவெளிபாரே. (உகஅ)

வெளிக்குமழிவில்லை மென்மேல்முடிவில்லை
ஒளிக்குமுடிவில்லை யூணவடியில்லை
தெளிக்கும்விழியதில் சேர்ந்ததுவுன்மனம்
வளிக்கும்வராட்டி மனமும்வெறும்பொய்யே (உககூ)

மனந்தானேவிந்த மகத்துவமானது
மனந்தானேவிந்த வழிதாண்டிக்கூடிற்று
மனந்தானே பாசத்தில் மருவியலைந்தது
மனந்தானே நீதான் மாறுதபோதமே. (உஉ௦)

மாறுக்கருணைக்குள் வாழ்ந்தாரேசித்தர்கள்
மாறுக்கருணையை வாவென்றழைத்திரே
மாறுக்கருணைதான் வாய்க்கவெளிதாமோ
மாறுதுவிட்ட குறையாலும்வாச்சுதே. (உஉக)

வாய்ச்சபெரியோர் மவுனமடைவார்கள்
வாய்ச்சபெரியோர் மகாசித்தராவார்கள்
வாய்ச்சபெரியோர்க்கு மற்றுந்துறவில்லை
வாய்ச்சபெரியோர் மகத்தான*பிர்மமே. (உஉஉ)

பிர்மவிசாரத்தைப் பேசிடும்வேதாந்தம்
பிர்மவிசாரத்தைப் பேசுமறுநூல்கள்
பிர்மவிசாரத்தைப் பேசும்பதினெட்டு
பிர்மவிசாரத்தின் பேரறியார்களே. (உஉங)

சரக்குகளும் தேவர்களும்.

அறியார்சமயத்து ளாறுறுபேர்களும்
அறியார்கள்மாயத் தழுந்தியபேர்களும்

---

* பிரமம் - பெரியது அதாவது வாக்குமனமணுகாத மாசற்ற பொருள்.

அறியார்களாங்காரத் தவ்வேர்பிடுங்காதார்
அறியாரறியா ரறிவுள்ளோர்காண்பரே. (௨௨௪)

பரிசிக்குஞ்சூதம் பரத்துக்குநேராகும்
திரிசிக்குமொக்குந் துலையாமனேன்மணி
வரிசித்தசாரம் *வராட்டிக்குநேரொக்கும்
தரிசித்தசத்திக்குந் தானேக்குந்தாரமே. (௨௨௫)

தன்னனசூதமுந் தாரநிமிளையும்
பொன்னனவிந்து பொறியுப்புநேராகும்
பன்னச்சதாசிவன் பண்பொக்குங்கர்ப்பூரம்
மன்னமையேச்சுரன் வாழ்சவுக்காரமே. (௨௨௬)

நாகத்தின் பேதம்

வாழ்கின்றருத்திரன் முனைக்கும்பொன்னுமே
வேழ்கின்றமாலின் விழியொக்கும்வெண்ணாகம்
மாழ்கின்றகஞ்சன் மயநாகந்தன்னிறந்
தாழ்கின்றவிந்திரன் முன்கருநாகமே. (௨௨௭)

நாகம் வேதை

கருவாஞ்சரக்குக் கலந்தவறுசுவை
மருவானதேவர் மகாவிந்துகாணிது
உருவாகக்கட்டியே யோட்டினல்வேதைகாண்
திருவார்பெறுவார் சின்னமுமில்லையே. (௨௨௮)

† சின்னமெடுத்திட்டார் சித்தர்கள்நாதாக்கள்
கன்னமேவாதியைக் காணுமற்றாசித்தால்
பன்னரவிகோடி படுவார்நரகத்தில்
தின்னவறுமையால் திகைத்தேங்கிநிற்பரே. (௨௨௯)

‡நரக் சொர்க்கம்

நிற்குநரகமும் நிலையானசொர்க்கமும்
ஒக்கவேசொல்லி யுரைத்திட்டாரென்னந்தி

* வராட்டி - காருண்யசத்தி அதாவது குரு, அல்லது திருவருள்.
† சின்னம் - வெ[illegible]றிக்குறி.
‡ நரகம் - தீவடிவொன்று, சேறுவடி வொன்று.

தக்கமலத்திலே தாழுங்கிருமிகள்
மக்கள்நரகந்தான் மைந்தனேகண்டிடே. (உ௲)

கோபமே பாவம்

மைந்தனேகோபம் வளர்ந்தமுறையாலே
பந்தனச்சென்மம் பலபலவாய்விடும்
செந்தனச்சென்மஞ் செனிப்பதெல்லாம்பாபம்
கந்தனக்கோபங் கடும்பாவங்கண்டிடே. (உ௱க)

நரக சொர்க்கம்

கண்டேனே சொர்க்கத்தைக் காணும்வழியேது
நன்றானமானிடர் நரகஞ்செனித்திட்டுப்
பண்டேகுறையால் பராபரநோக்கினால்
உண்டேதான்சொர்க்க முறைத்தமுறைபாடே. (உ௱உ)

முறைபாடுகேட்டேன் முன்னேமெய்ஞானத்தை
முறைபாடுகேட்டேன் முனிந்திட்டவாதத்தை
முறைபாடுகேட்டேன் முவந்துசந்தோஷித்தேன்
முறைபாடிம்மட்டோ *முனிவர்க்குரைத்ததே. (உ௱௩)

வைத்துக்குளிகையு மகத்தானஞானமும்
ஒத்தேயுரைத்தீ ருவக்கும்பயன்சொன்னீர்
மெத்தக்குளிகைதான் வெவ்வேறுரூட்சமோ
உத்தபடிதா னுரைத்திடாய்நந்தியே. (உ௱௪)

குளிகை எட்டின்பெயர்

உரைத்தபடிகே ளுறுதியாமென்மைந்தா
தரைத்தசொரூபக் குளிகைமுதற்றரம்
விரைத்தவிரண்டாம் விளங்கியசூட்சங்காண்
கரத்தில்மூன்றுந்தரங் கமலினிபார்த்திடே. (உ௱௫)

பார்த்திடுநாலாந் தரமட்டமாசித்தி
கார்த்திடுமஞ்சாகுங் காணக்கமலினி
பேற்றிடுமாறுந் தரங்காணும்யோகினி
ஏற்றிடுமேழாந் தரங்காண்விண்ணேகியே. (உ௱௬)

* முனி - மனனமுற்றோர், அல்லது முனிவு அற்றோர்.

வேகிப்பரிச மிதிறெடுமெட்டாச்சு
வாகித்துயான்சொல் வழியெல்லாநீபாரு
போகத்துமேழிறைற் பொன்றைங்கவனமாஞ்
சோகத்துநின்ற சொரூபமுறைகேளே. (௨௱௭)

குளிகையின் அனுபவம்

முறையாங்குளிகையை முகிழ்ந்தங்குவாயிட்டு
மறையாதபூரண மகத்துவம்நீபாரு
*நிறைவானதுபோல நின்றிடுமுன்தேகம்
கறையான†கண்டிப்புங் காணாதுகாணாதே. (௨௱௮)

காணாதுபூரணங் கவளித்தயோகிக்குக்
காணாதுவிந்தக் கடிதாங்குளிகைக்குக்
காணாதுசாய்கையுங் கண்டமகன்றபேர்
காணாதுநின்மலங் கற்பூரதீபமே. (௨௱௯)

தீபத்தைப்பேலே சிறந்துவெளியாகும்
மாவொத்தபூரணம் வாவாவென்றீர்த்திடும்
பாவொத்தவாசனை யும்பலதுன்பமும்
ஆவத்தும்போக்கு மழியாதுகாயமே. (௨௱௰)

காயமழியாது கவனம்போமாயிரம்
மாயமுமில்லை மகிழ்ந்துமவ்வண்டத்தில்
ஓயவேசித்தர் உறவாடல்‡மெத்துண்டு
பாவவேமார்க்கம் பரிவாகவைத்ததே. (௨௱௰௧)

வைத்ததுகேட்டு மகத்துவங்கைக்கொண்டேன்
உத்ததுசொன்னீ ருவட்டாவுபதேசங்
கைத்தலமேந்துங் கருநெல்லிக்காயென
எத்தன்மைநாயே னெனையாண்டபோதமே. (௨௱௰௨)

---

* நிறைவு - வெளியாகியநிலை.

† கண்டிப்பு - அவன், அவள், அதுஎன்னும் முன்னிலைச்சுட்டாகிய தோற்றங்கள்.

‡ மெத்தவுண்டு - என்ற சொல், மெத்துண்டு எனக்குறைந்து வந்தது

ஆண்டபராபர மருளுந்தொழிற்கெல்லாம்
பூண்டகணேசன் புகலுங்குருவீசன்
நீண்டவென்னந்தி நிகரில்வயிரவன்
காண்டிவையைந்துங் களங்கற்றுப்பூசியே. (உசக)

பூசையின் பலன்

பூசிக்கப்பூசிக்கப் பொன்றுக்குருவாகும்
பூசிக்கப்பூசிக்கப் போகும்வெகுவேதை
பூசிக்கப்பூசிக்கப் பொன்மலையேயாகும்
பூசிக்கப்பூசிக்கப் பூண்பாய்மெய்ஞ்ஞானமே. (உசச)

மெய்யாஞ்சொருபக் குளிகையோடெட்டையும்
பையானநூலிலும் பாடினேம்பாருங்கள்
கையாரக்கண்டு களங்கற்றுக்காண்பார்கள்
மையானமூடர்க்கு வாதம்பலியாதே. (உசரு)

அடக்குவர்

பலியாதுவாதம் பசுவாஞ்சடருக்குப்
பலியாதுவாதம் பலரையேதூஷிக்கில்
பலியாதுவாதந்தான் பாவமாங்கோபிக்குப்
பலியாதுவாதம் பரம்பார்க்காமூடர்க்கே. (உசசா)

மூடருக்கெய்தாது முத்தியும்பத்தியும்
வீடிலென்காடிலென் விட்டகுறையாலே
*தாடரவாதந் தனித்தனியேவந்துங்
கூடுறுஞானங் குலாவியசித்தியே. (உசஎ)

நன் மார்க்கம்

சித்தியைக்கண்டால் சிவன்றனவன்றனும்
பத்தியஞானமும் பட்டப்பகலாகும்
சத்தியங்காயம் †தவறுதொருநாளும்
புத்தியையுன்னியே பூரணம்பார்த்திடே. (உசஅ)

---

* தாடர - தாள், திருவடி, தர, தீக்கை புரிய, அதாவது குருவின் கருணை கிடைத்தால்.

† தவறுது - கீழேபிணமாகவிழாது. அமுதவடிவா மென்க.

பார்த்திடப் பார்த்திடப் பாழிற்படர்ந்ததிக்
கோர்த்திடவண்ணமுங் கோப்பும்வெளியாச்சு
சேர்த்திடத்தாயைத் திரும்பியேயான்பார்க்க
மாத்தியமாச்சு மாயைவெளியாச்சே. (௨௪௯)

வெளியாமுப்பாழில் வேறென்றீராறென்றீர்
ஒளியாமதுவென்று முரைக்கவரிதென்றீர்
நளிவானசித்து நயந்தமாகாசித்துந்
தெளிவாஞ்சிதாகாசஞ் சேர்ந்தவெளிமூன்றே. (௨௫௦)

முனின்முடியின் முகிழ்ந்தமனோன்மணி
பேணிவயிற்றினிற் பேரண்டமாச்சென்றாள்
வாணியாள்வார்த்தை மகாகோடியாச்சென்றும்
ஊணிஉணர்ந்தாலே யொக்கவெறும்பொய்யே. (௨௫௧)

கன்னிப்பெலன்

பொய்யாச்சுதேயென்றால் போச்சுதுபொய்யாக
மெய்யாச்சுதேயென்றால் விரவிச்சுஅண்டங்கள்
கையாச்சரியாமோ *கன்னிப்பெலந்தானே
பையாச்சுபூரணம் பாரீர்விலாசமே. (௨௫௨)

அருளொளி

†விலாசத்தினாலே விரிந்ததுயிர்களும்
விலாசத்தினாலே வெவ்வேறுதாபரம்
விலாசத்தினாலே விரிந்துமனமாச்சு
விலாசத்தையுன்னி விரைந்தேறமுத்தியே. (௨௫௩)

சோதனை

விரைந்தகுளிகைக்கும் வேதைக்குஞ்சித்திக்கும்
அரைந்தகுருவுக்கு மமர்ந்தகளங்குக்கும்
பரந்திடுஞ்செம்பு பகர்ந்தபாகமும்
தரந்தயக்‡கன்மசந் தான்போக்குஞ்சந்துக்கே. (௨௫௪)

---

* கன்னிப்பெலம் - கன்னியாராசியிற் பிரந்தவர்கள்சக்தி.
† விலாசம் - அருளொளி.
‡ கன்மசம் - அழுக்கு

சத்துக்கள் சோதிக்க

சத்துவகைக்குந் தனித்தனிச்செம்புக்கும்
பத்தியாங்கல்மசம் பாங்காகத்தீர்ந்திட
ஒத்துவருகையி லூட்டமுறைகேளு
சுத்தியுமஞ்சுவிதம் பாருசொன்னேமே. (உருரு)

சொன்னவுலகிலிற் சூட்டு *விசைநாலு
பன்னவேகாரமும் பாச்சதில்மூன்றிடை
மன்னயவீர மதிலோரிடைகூட்ட
வன்னப்பொடித்து வளமாகத்தூவிடே. (உருசா)

வேறு

தூவவேயின்னஞ் சூட்டமுறைகேளு
காவியிடைநாலு கட்டுப்புத்தான்மூன்று
ஓவியக்கார முருப்போடிரண்டெடை
தாவியலிங்கந் தானேரிடைப்பூவே. (உருஎ)

வேறு

பூநீறுநாலெடை பொரிக்காரமூன்றெடை
வானே †ரிணங்கன் வளமாயிரண்டெடை
பானேருவீரம் பரிவாகவோரெடை
ஆனீர்ப்பொடித்து மடைவாகத்தூவிடே. (உருஅ)

வேறு

அடவானசெங்கல் லதுகாணுநாலெடை
படவானகாரம் பகர்ந்தவெடைமூன்று
தடவானதாரமுந் தானெரெடையிரண்டு
நடவானலிங்கமும் நாடோரெடைசாம்பே. (உருகூ)

வேறு

சாம்பலெடைநாலு தனியுப்புமூன்றெடை
வாம்பாகக்கார்முகில் மாட்டாயிரண்டெடை
காம்பக்கடல்நுரை காட்டோரிடையதில்
நேம்பவரைத்து நிரையப்பொடிதூவே. (உசாO)

---

* விசை - தடவை, முறை.
† இணங்கன் - வெடியுப்பு.

பொடியானதஞ்சும் புகழ்பெற்றசோதனை
முடியாகக்கன்மசம் *மோசனமாய்ப்போகும்
மடியாதிவ்வொன்றும் மாற்றிடுந்தோடத்தை
ஓடியாதிவ்வண்ணம் உறப்போட்டுச்சோதியே. (உகூக)

சோதிக்கச்சத்தெல்லாஞ் சோதிமயமாகும்
சோதிக்கச்செம்பெல்லாஞ் சோதியருணனும்
சோதிக்கயங்காந்தந் துறைக்கெல்லாநன்மையாம்
சோதிக்கறியாட்டால் சூதத்தைக்கொல்லாதே. (உகூஉ)

களிம்பு நீங்காதசத்துக்கள் பயனில்லையெனல்

கொல்லாதுசூதத்தைக் கூடாதுவொன்றிலும்
வெல்லாதுவுப்புக்கு †வேடையுங்காணுது
வல்லாதுகாயம் மகாசித்தியாகாது
பொல்லாதகல்மசம் போக்கித்துறைபாரே. (உகூ௩)

பாரென்றுமீசன் பராசத்திக்கேசொன்னர்
ஏரென்றுவஞ்சுமே ‡லட்சந்தமிழினில்
வாரென்றூர்வண்ணத்தயிலத்திற்செம்பெல்லாந்
தாரொன்றுசத்தால் தனிச்சூதங்கட்டுமே. (உகூச)

கட்டும்விதங்கேளு கண்டுபலஞ்செம்பு
மட்டியசோதனைவாய்க்காட்டாலெல்லாம்பொய்
மட்டியமாண்பெர மயங்கிமலையாதே
ஒட்டியேசோதிக்க வொருகோடிவேதையே. (உகூரு)

கோடியென்றேசொன்னேன் கூறவொருகோடி
ஆடுங்குளிகைதான் ஐந்நூற்றிம்பது
தேடித்திரிந்து திகையாதேமாந்தரே
பாடினேனென்னுயிரத்தினிற்பார்த்திடே (உகூகூ)

நூற் கோவை

பார்த்திடுமெட்டால் பகிர்ந்ததுவைந்நூறு
கோர்த்திடுமஞ்சால் குலாவியமுந்நூறு

* மோசனம் - நீங்குதல்.
† வேடை - என்பது இடை, அதாவது ஊட்டம்.
‡ அஞ்சுலட்சமும் - எழுலட்சமும், என்க.

செர்த்திடுமூன்றுல் திரண்டதொருநூறு
வார்த்திடுவாயிர மைந்ததுமைம்பதே (உசுஎ)

அன்பதுமாத்திர மாயிரத்தெட்டொக்கும்
அன்பதுமாத்திர மகண்டம்விலாசிக்கும்
அன்பதுமாத்திர மதீதப்பொருள்காட்டும்
அன்பதுமாத்திர மறிந்தவர்சித்தரே. (உசுஅ)

உருவசித்தி பெற்றோர் வயது

சித்தர்வயதென்ன திரட்டியவாயிரம்
பத்தர்சிவயோகி பார்த்துப்பிழையுங்கள்
கொத்தாமசபையைக் கூடில்முடிகாட்டும்
வத்தாதபூரணம் *வத்தாமதுபாரே. (உசுகூ)

பாரென்றூர்கந்தி பரந்தவசபையை
வாரென்றீர்மூலத்தில் மானந்திவீட்டுக்குள்
தாரொன்றினலுந் தனிக்கண்டத்தேகூட்டி
†நேரெண்டியாச்சு நிறைந்தகதிராச்சே (உஎய)

கதிரேதுவென்றீர் கலங்காமுனைமூக்கில்
சதிரானயோகிக்குந் தன்னிடத்தேதோனும்
அதிரானஞானிக் கதுகாண்பராபரம்
எதிரேகிலோகத் திசைந்தமுறைகேளே. (உஎக)

கலைச்செலவு

முறையாம்புவியில் முழங்கியசீவர்கள்
நிறையானநித்திரை நெடுவீதியோட்டத்தால்
குறையாச்சையோகத்தால் கொட்டாவியேக்கத்தால்
வறையானமுப்பத் தறுபத்துமோடுமே. (உஎஉ)

ஓடும்‡புரியட்ட மொவ்வொன்றுய்க்குன்றியே
நாடும்பரத்தில் நமனுக்கிரையாவார்

---

* வத்தாம் - பொருளாம். அதாவது கடவுளென்னும் பொருள்.

† நேர் - முறையில், எண், நினை, தீயாச்சு, ஒளிவடிவாயிற்று. அதாவது முறையில் தியானிக்க ஒளிதோன்றும் என்பதாம்.

‡ புரியட்டம் - இவ்வுடம்பே கூடுவிட்டுவேறுகூட்டில் புகுதற்காக எட்டுப் பொருட்களால் ஆக்கியது, இதுவே சூக்குமஉடம்பு.

நீடும்பரமும் நிறைந்துள்ளேவாங்கிடில்
ஆடுந்திருநட்ட மம்பலங்காணுமே. (உஎ௩)

காணுங்குழிப்புக் கடுமேலோகீழதோ
காணுஞ்சபையடிப் பூதமேரண்டமோ
ஊணுமேயாறு மூடேசுழியோடப்
பூணுங்கபாலம் புகுங்குருபாதமே. (உஎச)

சமாதி நிலை

*குருமண்டிலத்திற் கூருயிரத்தெட்டுக்
கருமண்டலமுட்டிக் கவிந்தேபுருமையம்
மறுமண்டலக்கதி ரண்டமும்பிண்டமுந்
தருமண்டலத்தொடு தானென்றுய்நிற்குமே. (உஎரு)

நிற்குமேயொன்றென்றீர்கோர்பார்க்கில்ரெண்டாச்சு
தக்குமோநாதந் தனித்தமகாசத்தி
மக்குமோயீசன் மகத்தானவிந்துதான்
ஒக்குமோநேர்ந்து மொன்றுமதனுலே (உஎசு)

நாலேமுடிவென்றீர்நாலிரண்டேட்டாச்சு
காலேகாண்சூட்சங் கலந்தபுரியட்டங்
கோலேகுறியேகக் கூறுவார்சித்தர்கள்
மேலேதுமில்லை விரித்தநூல்பொய்யென்றே (உஎஎ)

பொய்யென்றீர் நூலைப் புகன்றமுறையேது
கையென்றயோகங் கடந்துகபாலத்தே
மெய்யென்றுவிண்டு விரைந்துபுகைந்தோடித்
தொய்யென்றுவாதஞ் சொல்லாச்சுதுபாரே. (உஎஅ)

தீர்க்கதரிசனம் (முற்றுணர்வு)

சொல்லானமார்க்கந்தான் சொன்னதுயோகிக்கு
வல்லாஞ்சபைமறித் தேமுகடேத்திடக்
கல்லாங்கபாலங் கடந்தணலேமூண்டு
எல்லாத்தெரிசன மேறவுங்காணுமே (உஎகூ)

---

* குருமண்டிலம் - வடநூலார், சப்தரிஷமண்டில மென்பர். அருள்வடிவு எழுமூர்த்தம் என்று கூறினுர் இதன் இரகசியம் வல்லார்வாய்க் கேட்டுணர்க.

யோகக்காக்ஷி

காணுமேயென்றீர் கண்மூக்குவேருச்சு
பூணுமேயோடிப் பூண்டமனத்தோடே
ஊணுமேயங்கே யுறும்பாழிற்பூரணம்
தோணுமேயப்பா சுடர்க்கோடிதீபமே. (உஅ௰)

தீபச்சுடரேதான் திக்கெல்லாங்காண்பது
தீபச்சுடரேதான் சேர்க்குஞ்சபையினில்
தீபச்சுடரேதான் தெவிட்டாமுனைநாசி
தீபச்சுடரேதான் சிறந்ததுநாலுமே. (உஅக)

சிறந்தவிதம்ரெண்டிற் செய்வதெதுநன்று
உறைந்திடும்யோகத்தி னாடியேமுட்டினால்
கறந்தகபாலங் கடந்*தெப்பொருள்காணும்
நிறைந்தேநெடுவுப்பு நின்றதுஞானமே. (உஅஉ)

ஞானந்தானல்லவோ நாலாம்பதவெளி
வானந்தானல்லவோ வடிவந்தயோகத்தில்
பானந்தானல்லவோ பாலத்தில்நல்†லூறல்
கானந்தான்முப்பாழ் கடந்ததுபார்த்திடே. (உஅங)

பார்த்திடப்பார்த்திடப் பாழும்வெளியாச்சு
ஏர்த்திடவேர்த்திட யெல்லாம்வெறும்பொய்காண்
தோர்த்திடுமண்டலஞ் சுத்தமனோன்மணி
பூர்த்திடும்பூவதும் பொய்யாச்சுநந்தியே (உஅச)

பெய்யாச்சுதையா புகுந்தபின்பூரணம்
வெய்யாச்சியாக வெருண்டவகைகாணேன்
சிய்யாச்சுமேனி சிறந்தநிராதரம்
தையாச்சுநித்தந் தனியோசைக்கூட்டமே. (உஅரு)

ஓசைத்திசைநாத மூண்டென்பாரெல்லாரும்
ஆசைக்காண்பாச மடங்காதவாசனை

---

* எப்பொருள் - எல்லாப் பொருட்களும்.

† ஊறல் - அமுதம், இது, தத்துவம், புவனம், மண்டிலம் கலை, மவுனம் என்றதைவகையமுதம், ஐந்தாவது அமுதமே இங்கு குறிப்பிட்டதென்க.

* கோசச்சினத்தொடு கோதா † முனையும்போய்
மாசற்றபூரண ‡ மடியிலடைந்தோர்க்கே. (உஅரு)

அடைந்தபின்முப்பா ழடைவாகத்தோன்றிற்று
முடைந்திடுஞானச் சரிதைமுதற்பாழாய்க்
கிடைந்திடுஞானக் கிரியையோகம்பாழாய்
விடைந்திடுஞான வெளியொளிப்பாழாச்சே (உஅஎ)

பாழானமூன்றில் பதித்திடும்யோகந்தான்
நீழாய்மனத்தாலே நின்றதுவெவ்வேறு
கோழாய்ப் ** பிடரிக் குழியில்மனமோடித்
தாழாமைநோக்கிடிற் றுயங்கேகாண்பளே. (உஅஅ)

காண்பளே தாய்தான் கவிந்தவிடமெல்லாம்
பூண்பாய்மனந்தான் புகழ்ந்தமனோன்மணி
ஏண்பாழ்வெளியெல்லா மெட்டாதபூரணம்
நான்பார்த்துக்கண்டு நலமுற்றேன்நந்தியே. (உஅகூ)

நந்திகொடுத்தது நல்லமதியொன்று
அந்தித்துவாங்க வகண்டவெளிகாட்டும்
வந்தித்துவாங்கிட வாசிவாவென்றோடும்
பந்தித்துக்கட்டாய் பரத்தினடியிதே. (உகூ0)

அடியிலேகட்டி யகண்டந்தைநீபாரு
முடியில்மனோன்மணி முன்நின்றுபேசுவாள்
பிடியில்மனந்தானே பேராச்சவள்ளாக
நெடிய †† வெழுத்தாக நின்றதும்பார்த்திடே. (உகூக)

பார்த்திடுநீதான் பகுந்திவ்வளியோட்டி
ஏத்திடுமேலே யிருக்கும்வகாரந்தான்
சேர்த்திடுரெண்டையும் தேசிமகாவாசி
காத்திடும்பாருங் கருது ‡‡ முனைநீயே. (உகூஉ)

---

* கோசம் - மறைப்பு. † முனை - சுட்டறிவு.

‡ மடியில் - சோம்பலில்லாது அதாவது முயற்சியால்.

** பிடரிக்குழி - சுழிமுனை நாடியின் நெறி.

†† எழுத்து - தோன்றி வெளிப்படுவதின்பொருளும்இடமும்ஐம்பூதவகையும் கண்டால்மனமடங்கும் அதாவதுசத்தி யதிகரிக்கும்இதனைக்குரு. வழியறிக

‡‡ முனை - அக்கினிக்கலை நான்கு மென்க.

முனையில்மனமோட்டி * முட்டிவிழிரெண்டும்
நினைவிலேநோக்கிட நின்மலங்கண்டிடும்
கனவிலேகண்டதுங் கண்ணாரக்கண்டதும்.
† சுனையிலேமூழ்கும் துறைபோலுமானதே. (உகூங)

துறையாமனமொன்றித் துலங்குமனோன்மணி
நிறையாமனதுக்கு நிலையாப்பிறப்பேது
கறைவாசனையாங் கருவிக்குத்தோல்மூடி
மறையாப்பிறப்பாச்சு மைந்தனேகண்டிடே. (உகூச)

கண்டபிறப்பின் கருவையறுத்திட
ஒண்டியுபதேச முரைத்திடாயென்னந்தி
தண்டியசித்தம் தனித்தபொறியஞ்சும்
அண்டாதடக்கி யகண்டத்தைப்பார்த்திடே. (உகூரு)

‡ கண்டத்தைப்பார்த்தால் கழலும்பிறவிதான்
கண்டத்தைப்பார்த்தால் ** கனகமாமுன்றேகம்
கண்டத்தைப்பார்த்தால் கருதெட்டுஞ்சித்தியாம்
கண்டத்தைப்பாக்கி லகண்டமுநீயாமே. (உகூசா)

நீயாமகண்டம் நிகரில்லைபின்னென்றும்
மாயாத்திசைக ளடங்கியதுன்னுள்ளே
ஓயாதபூரணத் தாடலாமாடலாம்
பாயிரத்தண்டம் பாயுமுறைகேளே. (உகூஎ)

பாயுஞ்சொரூபக் குளிகைவைப்பாய்வாயில்
காயுங்கமலினி கட்டிடுவுந்தியில்
வாயுவைப்போ †† லட்ட மாசித்திகைப்பிடி
தேயுவைப்போலச் சிறக்கநுழைந்திடே. (உகூஅ)

கேவனம்

நுழைந்திட்டேனானும் நோக்கினேன்பேரண்டம்
கிளைந்திட்டவண்டங் கெடியாயிரங்கண்டேன்

---

* விழி - இதனைக் கேசரிமுத்திரை யென்பர் வடநூலார்.

† சுனையில் - மூழ்கும் துறைபோலும், என்றது நீரில் ஒருவன் முழுகியிருந்தால் எல்லாக்கருவி கரணங்களிருப்பினும் பிறர்சத்தம் புலப்படாததும்பேசவியலாததும் போலவென்க.

‡ கண்டது - சகலத்தையும் பார்த்துக்கொண்டிருப்பது அதாவது சாட்சி.

** கனகமாம் - என்றது பொன்மயமாகும். அழியாது என்பது பொருள்.

†† அட்டமாசித்தி — ஓர்குளிகை.

இழைந்திட்டபுவன மிருநூற்றிருபதும்
அழைந்திட்டேனெல்லா மளாவித்திரிந்தேனே. (உகூகூ)

திரிந்தேசந்தோஷித்துத் தேகத்தைநோக்கினேன்
புரிந்தே * பதமும் புவனமுமண்டமும்
தெரிந்தேமயக்கற்றுச் சிந்தைதெளிவுற்றேன்
பரிந்தேன்குளிகையின் பாக்கியமெய்யாச்சே. (௨௱)

மெய்யாச்சுதாத்தாள் வெளியிலேபூத்தது
பொய்யாச்சுஞானம் புகட்டியேநோக்கிட
நையாச்சுபிண்டத்தை நத்தாதருளொடுந்
தையாச்சுகண்டாற் சகலமுங்காணுதே. (௨௱௧)

கற்பத்தின்னவயது

† காணாதசித்தர்க்குக் காயம்வலுநிற்க
ஏணாகத்தின்ன விசைந்தமுறைகேளு
ஈணாவயது இருபதில்மண்டலம்
பூணாவறுபதில் போல்ரெட்டிதின்றிடே. (௨௱௨)

திண்ணிடுதொண்ணூறில் சேர்மூன்றுமண்டலம்
பண்ணிடுநூறுண்டில் பலியாதுகற்பம்தான்
மண்ணிடைமாண்பரேவரும்மறிக்காமல்
எண்ணிடுமேனி யிளநரைப்பருவமே. (௨௱௩)

பருவமாய்வாழ்ந்தாற் பலனேதேன்றுன்னுதே
அருவமாய்வாழ வகண்டமகாயோகனு
சொருபமும்வாய்க்குஞ் சுகசித்தியாடலாம்
நிருபமுப்பாழும் நிலையும்வெளியாமே. (௨௱௪)

நூல்மகிமை

வெளியானகாலத்தில் ‡ மேருவைச்சுற்றலாம்
வெளியானகாலம் விளங்கிடுமண்டங்கள்

---

* பதம்புவன மென்றது - ஆறுவகையத்துவாக்களை யென்க, அதாவது மந்திரம் கலை வருணம் பதம் புவனம் தத்துவம் என்க.

† காணாத - உண்மையறியாதஇவர்களேஉடலழியாதிருக்கமுயர்ச்சிப்போர்.

‡ மேரு - உடலில் முதுகின் தண்டு இதனையே வீணாத் தண்டெனவும் மேருவென்றுங் கூறுவர் உலகில் மேரு இது வென்றறியப் படவில்லை. மற்றோ ஒளிவடிவாகியும் மூவுலகும் கலந்து நிற்கும் தூண் இதனை யோகிகளே அறிவர்.

வெளியானகாலத்தில் மேலெட்டுஞ்சித்திக்கும்
வெளியானஞானம் வெளியில்வெளியாமே. (௱௫)

ஆமேயிக்கற்ப மறிந்தவர்கொள்ளுவார்
காமேவிகாரத்தாற் கசப்பென்பார்காட்டாதே
தாமேபுளிப்பினைத் தள்ளாட்டாற்பொய்யாகும்
நாமேயிங்குண்டது நாட்டோர்க்குஞ்சொன்னேனே. ()

சொன்னேன்முன்வாதஞ் சுகமாங்குளிகைகள்
சொன்னேன்வசியம் துறைதோறுங்கற்பங்கள்
சொன்னேன்மாயோகம் துரியமாமெய்ஞ்ஞானம்
சொன்னேனறிந்த சுகயோகஞ்சித்தர்க்கே. (௱௭)

சித்தர்க்கிதைவிட்டால் * தேசத்துநூலெல்லாம்
ஒத்துக்கிடையாது உரையும்தெரியாது
கொத்துப்படவொன்றாய்க் கோவையும்கிட்டாது
வத்துநீகண்டு † வலையத்திதைப்பாரே. (௱௮)

பாரேயிந்நூல்தான் பட்டப்பகலொக்கும்
சேரேபலநூலைச் சேரிலிருட்டறை
யாரேனும்பாருங்க ‡ ளந்தாதிதப்பாபல்
சீரேதுங்கோணாது சேரவுஞ்சித்தியே (௱௯)

அறுதி கூறல்

சித்தியுமாகும் தேகமழியாது
முத்தியுமாகுமே மூலனுரைத்தது
மத்தியபூரண மாசற்றுக்கண்டிடுஞ்
சத்தியஞ்சொனனேன் தப்பாதுதப்பதே. (௱௰)

பஞ்சப் போறிவித்தை

தப்பாதுலகுதான் சாகின்றகூத்தாச்சு
ஒப்பாப்பெறினு முயர்ந்தமகாமேருங்
கொப்பானமாயக் ** கொடியினிறையாச்சு
வப்பாமனந்தா னறியாமல்கெட்டதே. (௱௧௧)

---

* தேசத்துநூல் - பதினெட்டுப் பாஷைகளிலும் உள்ள நூற்கள். அதாவது மிகப்பழைய காலமுதல் சித்தர்களுடைய கொள்கையும் செயலும் தனித்தமிழ் ஒன்றற்கேயுறியது.

† வலையம் - குவலையம், அதாவது பூமி.

‡ அந்தாதி - முதலிருந்து முடியுமளவும் என்று ஈண்டுபொருள்.

** கொடி - காக்கை.

கெட்டதினுலோகங் கேள்விமுயன்றது
பட்டதுமீன்றுன் பருந்திரைக்காசித்து
நட்டிதுவண்டு நற்றீபம்பூவேன்று
மட்டிதுமானிதான் மணியோசைக்குள்ளதே. (௩௧௨)

உள்ளானநெய்க்காக வொட்டியெறும்பூர்ந்துந்
தள்ளாதேபுக்கித் தலைசுற்றிமாண்டது
கொள்ளப்பரிசங் கொலைக்கரிபட்டது
விள்ளாதேயைந்தும் மீளாப்பொறியிதே. (௩௧௩)

* பொறியாலேகெட்டார்கள் பூமியிலுள்ளோர்கள்
மறியார்மனத்துக்கு வந்துமகாமாயை
நெறியாகநில்லாமல் நினைவையறியாமால்
சிறியாருடுத்தினசிற்றுடையானதே. (௩௧௪)

ஊத்தினக் குளிகை

சிற்றுடைகட்டுஞ் சிறுபெண்ணுள்வாதந்தான்
முத்தாரப்பெண்ணருள் மூதண்டமாத்திரை
வித்தாரப்பொன்னும் விளையுஞ் † சயத்தம்பம்
கற்றேயறிந்து கடந்ததுபார்த்திடே (௩௧௫)

பார்த்திடுமூத்துக்குப் பக்குவந்தப்பினல்
ஏர்த்திடநீருகு மில்லாட்டால்சிட்டமாம்
கோர்த்திட்டவாட்டுக் குமுறினல்வெற்றுகும்
மார்த்திடஞ்சொன்னேன் வளமாய்க்கடந்திடே. (௩௧௬)

கடந்திட்டால் ‡ காமநீர் காணுதுபொய்வாத
மிடந்திட்டால்சாரணை யெடுக்காதுமாத்திரை
புடந்திட்டம்தப்பினல் பொய்யாகும்கட்டெல்லாம்
தடந்திட்டரைப்பேரில் சிண்டிக்குஞ்செய்திடே. ()

துருசுகுரு

செய்ததுரிசி சிறந்தகுருவாகும்
பைதவமேவப் பசுமையுமெத்தானல்

---

* பொறி - மான்முதலியவிலங்கினங்களைப் பிடிக்கும் கருவி.
† சயத்தம்பம் - வெற்றிக்கொடி, அதாவது எமனை வென்றதன்மை.
‡ காமநீர் - கட்டியவெடியுப்புச் செய்நீர் காரமேறியது.

கைதவமென்னக் கலங்காதேமாண்பரே
வைதவக்காம்நீர் வளமாகவார்த்திடே (௧௧௮)

வார்த்துவெயிலில் வளமாய்த்தினம்பத்துக்
கோர்த்துக்கிளறிக் கொடியரவிமுகம்
ஏர்த்தியெடுத்திடு எல்லாக்குருவுக்குஞ்
சாத்தியநூல்முறை தப்பாதுநந்தியே. (௧௧௯)

தப்பாதுசெந்தூரஞ் சமைக்கும்பதம்தப்பில்
ஒப்பாகமுன்போலே யூட்டியெடுத்திடு
மெய்ப்பாகஞானம் விளங்குஞ்சிவசத்தி
நட்பாகப்பூசை நன்றாகச்செய்திடே. (௧௨௰)

வாதமும் நற்புத்தியும்

செய்திடில்வாதம் திடுமுடுபண்ணாதே
செய்திடில்வாதத்திற் சேர்த்திட்டலையாதே
செய்திடுவாதம் திறமாகப்பண்ணிவா
செய்திடுவாதநூல் சோரவுஞ்சித்தியே. (௧௨௧)

சேருமினங்கண்டு சேர்த்துநீசெந்தூரி
சேருமினத்திற் சிறக்கக்குருபண்ணு
சேருமினத்தோடு சிறக்கக்களங்காகும்
சேருமினந்தப்பிற் சேரவெறும்பொய்யே (௧௨௨)

பொய்யாகாதென்னால் போக்கோடேபார்த்திடு
கையாரவேசெய்து கண்டுகளித்தேனன்
மையார்ந்தகண்ணிக்கு மாவீசன்சொன்னது
ஐயா * முதனூல் அரையும்பொருளிதே. (௧௨௩)

பொருளேமூலட்சம் போக்கோடுநான்பார்த்து
அருளாலேநந்தி யடங்கிற்றெண்ணாயிரம்
மருளாதேநின்று வழியோடிதைப்பாரு
இருளே தொளியேது ஏகமுமொன்றாமே (௧௨௪)

மெய்ந்நெறி

ஒண்ணுகைக்கண்டிடு வுத்தமஞானத்தைப்
பண்ணும்பொறிகள் பதையாமல்வென்றிடு

...AMBARANATHA MUDALIAR
9 JAN 1929
SHIYALI.

---

* முதனூல் - சிவனார் உமைக் குபதேசித்தது.

கண்ணுனகற்பத்தால் காயஞ்செயம்பண்ணு
அண்ணுந்தலையாதே அடங்கலுஞ்சித்தியே. (கூஉ௫)

* அபக்குவர்

சித்தியேகாணச் செய்யார்முறைகேளு
பத்தியையக்கோபிப்பார் பரதூஷணமூடர்
மத்திமபுந்தி மருளன்மகாமோகி
எத்தியபொய்யோ னிடும்பர்க்குமாகாதே. (கூஉ௬)

ஆகாக்கொலைய னழும்பன்வெகுகோளன்
பாகாய்ப்பலபெண்ணைப் பார்த்தேங்கிப்பின்செல்வோன்
வாகானதர்ம வறைதப்புமாபாவி
சோகாவிகாரத்தன் சோம்பர்க்குங்காணுதே. (கூஉ௭)

காணுதழுத்தோர் கருதிடுதந்தைதாய்
கோணுதவைவோன் கொடுஞ்சினன்தூடணன்
வீணுப்பிறரை வெறுக்கும்வெகுதுட்டன்
பூணுக்குருதுட்டன் புல்லர்க்கும்பொய்யாமே. (கூஉ௮)

ஆமேகலப்பன் அடங்காதகாமத்தன்
தூமைத்துடக்கன் சுசியில்லாச்சண்டாளன்
சேமேசிவவேடந் தெரிசிச்கில்தூஷிப்போன்
வாமேவுசொல்லர்க்கும் வாதநூல்பொய்யாமே. (கூஉ௯)

நூலானநன்னூல் நூழைந்தவர்பார்த்தாலும்
காலாணிமாற்றுக் கனகம்பிறவாதே
சேலானசெந்தூரஞ் சேர்ந்தும்பழுக்காது
சூலாசைபோலச் சுழலுவார்துரோகியே. (கூகூ௰)

துரோகிக்குவாதநூல் சொல்லநரகெய்தும்
துரோகிக்குஞானநூல் சொல்லிடிற்றூடமாம்
துரோகிக்குக்கற்பத்தைச் சூட்டவெகுபாவம்
துரோகிக்குக்கண்காணுத் தூரத்தேபோய்விடே. (கூகூக)

---

* இந்தக் குணங்களையுடைய வர்களுக்கு வாதம் வைத்தியம் கற்பம் முதலியவை பலியாதெனல்,

பக்குவர்

துரத்தேபோவென்றாற் சொல்லுவதாருக்கு
பேரொத்தவேதாந்தி பிறவிக்குளலைந்தோர்
வாரொத்தபூச்சக்ர மகத்தாஞ்சிவயோகி
நேரொத்ததர்ம நிலைத்தோரைப்பார்த்திடே. (௧௧௨)

பார்த்திடுஞ்சாந்தன் பரதாரமிச்சியான்
கார்த்திடும்வாசியைக் கண்டுகளிப்புற்றோன்
ஏத்திடும்யோகத் திருக்கவிரும்பினோன்
சேர்த்துக் * கயிலாசச் சீர்மையைச்செப்பிடே. (௧௧௩)

செப்பிடில்பத்தி சிறக்கவேசோதிக்கில்
ஒப்பிக்குருமுன்னே உபசாரஞ்செய்பவன்
தப்பிலாமார்க்கன் தவத்தரைநேசிப்போன்
அப்பினிலுப்புப்போ லமர்ந்தவிதம்பாரே. (௧௧௪)

† சம்பிரதாயம்

அமர்ந்தால்பிழைப்பா னல்லாட்டாற்பேயாவான்
தமர்ந்தமயக்கமாம் தங்கத்தைக்கண்டுடன்
எமன்தானுமேதென்பா னென்முன்னேயாரென்பான்
சமைந்தான்பதம்பார்த்துத் ‡ தணலைக்கொடுத்திடே. ( )

கொடுத்தவழிசென்றாற் கூடிஞானத்தினால்
தடுத்தேமனந்தன்னைச் சாற்றிடுவாசியை
அடுத்தேயிதைப்பார்த்து அப்பால்நூல்பாரென்று
விடுத்தேதொழிலை விடுவித்துக்காட்டிடே. (௧௧௬)

காட்டிடுநூன்முறை கண்டதொழில்பாரு
பூட்டிடுவார்தம் புகழுக்கலையாதே
போட்டிடுவார்த்தை பொய்யர்பின்செல்லாதே
ஆட்டிடுநூல்கண்டும் அர்த்தமறிந்திடே. (௧௧௭)

---

* கயிலாசச்சீர்மை - கயிலாசவருக்கம் மூலவருக்கம் பாலவருக்கமென்னும் மூன்றில் கயிலாசவருக்கச் சித்தருக்கே எல்லா நலங்களும் உண்டென்று தெளிவாயாக.

† சமபிரதாயம் - குருகூறும்நற்புத்தி.

‡ தணல் - உபதேசம் தேசு ஒளி ஈகையன் கொடுப்போன். உள்ளொளியைக் கொடுப்போன் தேசிகனாகும்.

அறியாதகாலத்தி லறிந்தவர்பின்சென்றுஞ்
சிறியாரைப்போலே சிறக்கத்தொழில்பற்றி
மறியாமனத்திலே வைத்திடுநேசத்தை
நெறியாக * வாய்க்கும் நிலையும்தவறுதே. (௧௩௮)

வாய்க்குமேநாலென்று வார்த்தையால்போராடில்
வாய்க்குமோவாதந்தா னெம்மட்டும்பார்த்தாலு
காய்க்குமோகாய்தான் காயாதகாலத்தில்
நாய்க்குமேன்தேங்காய் நலமதுபார்த்திடே. (௧௩௯)

மூலாதாரம்

பார்த்திடுங்காலம் பரத்தின்முடியைப்பார்
ஏர்த்திடுவாசியி னிந்தமுறைகேளு
கோர்த்திடுமூலங் குமட்டிவகாரத்தைப்
போர்த்துச்சிகாரத்தைப் போகாமல்ரேசியே. (௧௪௰)

ரேசித்துப்பூசித்து நின்றிடிற்குண்டலி
மாசித்துநந்தி வசனிப்பார்நீபாரு
நீசித்தோடெட்டும் நினையாதஞானமும்
வாசித்துமந்திர † மார்க்கத்தைக்கண்டிடே. (௧௪௧)

சுவாதிட்டானம்

கண்டேகடந்துநீ கஞ்சன்பதிகூடி
ஒண்டேவகார மூறுதியாய்நோக்கிட்டுத்
தண்டேசிகாரத்தைத் தன்னுள்ளேரேசிக்கப்
பண்டேபிறப்பினைப் ‡ பாறிப்பான்கஞ்சனே. (௧௪௨)

மணிபூரகம்

கஞ்சனைத்தாண்டிக் கருமால்பதியூடு
மிஞ்சவகாரம் விரையவேபூரித்து
ஒஞ்சியகாரத்தை யுன்னுக்குள்ரேசிக்கப்
பஞ்சுநரையும்போம் பாரிப்பான்மாலென்னே. (௧௪௩)

---

* வாய்க்கும் - கிடைக்கும்.
† மார்க்கம் - செபம் பாவனை தோத்திரம் ஆராதனைமுதலிய வென்க.
‡ பறித்தல் - பாறித்தலென வந்தது.

அனாகதம்

மாலைக்கடந்து மகத்தானருத்திரன்
காலையுறத்தாக்கிக் கலங்காதேநோக்கிட்டுச்
சாலச்சிகாரத்தைத் தன்னுக்குள்ரேசிக்க
*மேலைச்சிவப்போடு விரிவெட்டுஞ்சித்தியே. (௪௪௪)

விசுத்தி

சித்தியாம்ருத்திரன் சேர்ந்தபதிதாண்டி
ஒத்திமகேசனுறையும் பதிக்குள்ளே
அத்திவகார மசையாமற் பூரித்து
ஒத்திச்சிகாரத்தை யுள்ளுக்குள்ரேசியே. (௩௪௫)

உள்ளும்மகேச னுறையும்பாத்தடி
தெள்ளியேகாணச் † சிறுபிள்ளைதாறுவான்
அள்ளுங்கனிபோலே யாகுஞ்சிவயோகம்
துள்ளியவாசி துடியாதுசித்தியே. (௩௪௬)

‡ ஆக்ஞை

துடியாமயேச்சுரன் சூழ்ந்தபதிதாண்டி
அடியாஞ்சதாசிவ மங்கேநீகாலூன்றி
மடிவாய்ச்சிகாரத்தை வைத்துநீபார்த்திடு
கெடியாக்கெவனமாம் கேளீர்மகாசித்தே. (௩௪௭)

நிராதாரம்

மகத்தாமனோன்மணி மாதாவின்பாதத்தை
அகற்றுமல்வாசியை யப்படியேபார்க்கச்
செகத்தானமெய்ஞ்ஞானஞ் சேரநிராதாரம்
மகத்தானவாசனை மின்னிநிமாய்த்திடே. (௩௪௮)

நீதான்குருபத நின்று பராபரன்
சூதானவாசியைச் சூட்டச்சிவயோகம்

---

* மேல் - உடம்பு. சிவப்பு. பொன்மயமாதல். (மெனியுஞ் சிவந்திடும்) என்றார்.

† சிறுபிள்ளை - வாலப்பருவம் இதனை (விருத்தர்களும் பாலராவர்) என்றார்.

‡ இவ்வாறும் - ஆதாரயோக மெனவும் பெயர் பெறும்.

தாதானபூரணந் தானேதெரிசனம்
வாதாம்வகார சிகாரத்தின்மார்க்கமே. (௫௪௯)

மார்க்க * முறையோடே வைத்துவைத்தங்கங்கே
ஏர்க்கவேபாரும் எடுத்ததெல்லாஞ்சித்தி
நீக்கவிடமற்று நின்றிடும்பூரணம்
பார்க்கமகாவித்தை பவஞ்சேரானண்டமே. (௫௫௰)

அண்டங் களைக்காணல்

அண்டமிருந்தவடைவு சொன்னார்நந்தி
தண்டியதஞ்சுந் தனித்தவடுக்காக
ஒண்டியிருந்தது வோடிநுழையென்றார்
கண்டிக்கமலினி காணீர்சொரூபமே. (௫௫௧)

சொரூபத்தைவாய் வைத்துச் † சூட்டிக்கமலினி
அரூபத்தசோதிபோ லண்டநுழைத்திட்டேன்
நிரூபத்தகற்பம் நிறைவுள்ளயாவருந்
தருவொத்தஞானச் சதாகோடிசித்தரே. (௫௫௨)

அண்டத்திலுள்ள இயற்கைச் சித்தரைக் காணல்

‡ சித்தரைக்கண்டேன் தெவிட்டாதே ** பாழித்தேன்
ஒத்தியசித்தி யுனக்கென்னவாச்சென்றார்
அத்தியகோடி யரூபதுமாச்சென்றேன்
எத்தியினஞ்சித்தி யின்னம்பாரென்றாரே. (௫௫௩)

என்றேநுழைந்தே னியலொருவண்டத்தில்
கண்டேனேசித்தரைக் கடிபதுமைப்போலத்
தண்டேகைகூப்பினேன் தடவினேன் †† கைக்கில்லை
அண்டநீர்காரத் தடைந்தபெரியோரே. (௫௫௪)

---

* முறையோடு - குருவுபதேசத்தோடு.

† சூட்டி - கழுத்திலணிந்து. ‡ அண்டங்களைப்படைக்குங்கால்முதலில் படைத்தவர்களே இயற்கைச் சித்தர்களாவர். இவர்கள் தேவருலகு படைத்த காலத்தில் உண்டாக்கியவர்களை ஆஜான தேவர்களென்பதுபோல.

** பாழித்தல் - சம்பாஷித்தல், அன்புகலந்துபேசுதல், இதுசித்தர்வழக்கு

†† கைக்கில்லை - என்றது, உடம்பு அருவாகியநிலை யென்க.

பெரியோர்தனைக்கண்டேன் பேருய்வலம்வந்தேன்
அரிதாய்விடைபெற்று மப்பால்நுழைந்திட்டேன்
பரிவாயடுக்கொன்றிற் பாய்ந்துமுடியேறி
விரிவாமடுக்கில் விரைந்து நுழைந்தேனே. (௧௫௫)

நுழைந்திடிலண்டத்தில் நூல்பார்த்தசித்தர்கள்
அழைந்திட்டு நூல்சொன்ன தார்தானெனக்கேட்டார்
தனஞ்செயவீசன் தாய்க்கன்றுசொன்னது
களைந்தேமூலட்சங் கணீரகண்டுபார்த்தோமே. (௧௫௬)

பார்த்தோமென்றீரே பாரபரசித்தர்காள்
கார்த்தேயிந்நூல்தன்னைக் கண்டுஞ்சுருக்காதேன்
சேர்த்தேசுருக்கச் சிவனாலுங்கூடாது
மார்த்தேயுண்டாகில் மகத்துவஞ்சொல்வீரே. (௧௫௭)

சொல்லிடுமென்றீர் சுகஞானசித்தரே
மல்லியகந்திதான் வைத்தார்கேளாயிரம்
பல்லுயிர்பார்க்கப் பகர்ந்தேமூலஞ்சமுங்
கல்லினில்வெட்டுப்போல் காட்டினார்பார்த்தேனே. ()

நூற்களிருக்கு மிடம்

பார்த்திடென்றீரேநீர் பார்த்தநூலெங்குண்டு
தேர்த்தநல் *மேருவின் தென்பாரிசத்திலே
ஆர்த்தறுநூற்றறு பத்தாகுமண்டத்தில்
கோர்த்திடுஞ்சித்தர் குலாவிப்படிப்பதே. (௧௫௯)

மாணவர் வினவுக்கு விடை

படிக்கின்றநூலிற் பயனெல்லாஞ்சொல்லுமோ
படிக்கின்றநூலிலே பீச்சுமோசாரணை
படிக்கின்றநூலிற் பரிதான்குருவாமோ
படிக்கும்பதினாறும் பாங்காமோசித்தியே (௧௬௰)

பாங்காமோவெட்டெட்டும் பலபலசித்தொடு
வாங்காமலாடலா மற்றோர்க்குக்கிட்டாது

* மேரு - சந்திர சூரியாக்கினி யென்னும் முப்பொருள்களும் கலந்து ஒளி வடிவாயெ தம்பம் இதுபூமிநடுவிலுள்ளது. இமயம் மேருவன்று

தேங்காமற் றேங்குஞ் சிவயோகபூரணம்
* தூங்காமற் றூங்குஞ் சொரூபத்தைக்காட்டுமே. (௧௯௧)

காட்டுமென்றீர் நூலைக் கைக்கொண்டபேர்சொல்லும்
நாட்டியவசிக் குருநாதனந்திதான்
கூட்டினார்சித்தர்க்குக் கொடுத்தார்தானிந்நூலை
ஆட்டியமூலர்தா னறைந்தநூலென்பாரே. (௧௯௨)

அறைந்துநீர்சொல்லிட லாமென்றிடமூலர்
மறைந்தேமயங்கிய வார்த்தையைநீர்சொன்னீர்
குறைந்திடுமோ நூலைக் கொடுத்தாக்கால்பூரணம்
உறைந்தேமூலட்சமு மொக்கவரிதென்னே. (௧௯௩)

அரிதல்லகாணு மகப்பட்டால்யாவரும்
புரிதல்லமூலத்திற் புகட்டினல்வாசியை
எருதல்லநந்தி யெழுநூறுமொன்றுகப்
பெரிதல்லநூலினைப் பேசவறிகிரே. (௧௯௪)

† மருந்துவகை

பேசாதநூலிலே பிறந்தமுறைசொல்லாய்
வாசாமல்சாரணை மருவியகட்டினம்
நேசாக்குடோரி நிலைக்குமெழுகினம்
ஆசாப்பரிக்குரு வகண்டசெந்தூரமே. (௧௯௫)

அகண்டகளங்க மடைவானசுன்னங்கள்
நிகண்டானசத்துக்கள் நேர்பலசெம்புகள்
பகண்டகுளிகைகள் பார்க்கிற் ‡ செய்நீருகள்
தகண்ட ** திராவகந் தானினிக் †† கூட்டமே. (௧௯௬)

‡‡ கூட்டமாமூலி குறை *** யுப்புடற்பொருள்
நீட்டியபத்து நிலையாமினங்களும்

---

* தூங்காமல்தூங்குதல்-நனவிற்சுழுத்தி இதனைச் சுத்தநிலை யென்பர்.

† மருந்து - மருப்பது அதாவது நோய் வராது மறுப்பது வந்ததை மறுப்பது உள்ளதை மறுப்பது சாவை மறுப்பது என்பதுபொருள் இதில் இரண்டு ரகரங்களுக்கும்பேதமில்லை. யென்றுணர்க.

‡ செய்நீர் - உண்டாக்கும் நீர்

** திராவகம் - தீநீர் புகைநீர் ஆவிநீர் என்று பெயர்கள்

†† கூட்டம் - யோகம் அதாவதுயோக சத்தியாலும்.

‡‡ கூட்டமாமூலி - க00அ மூலிகையென்பர்.

*** உப்புடற்பொருள்-உப்புக்களுடன். உடற்பொருள்களும். உடற்பொருளென்றதுகஸ்தூரிகோரோசனை அம்பர்முதலியனவுமாம்.

மாட்டியேசொன்னேன் மற்றுயிரத்துள்ளே
பாட்டிலேழ்லட்சமும் பாங்காய்ப்பிழிந் *தொண்ணே. ()

நூற்கோவை

ஒண்ணாய்ப்பிழிந்த துறுதியாமென்னூலைக்
கண்ணாரக்கண்டால் கவலையகன்றிடும்
† வண்ணானுரைத்த மதியேழுலட்சத்தில்
எண்ணாயிரமீதிலெஞ்சாது சொன்னேனே. (௫௬௮)

சொன்னேன்மூவாயிரஞ் சுருக்கதிலாயிரம்
முன்னேயென்னந்திதான் முந்நூறுமுப்பதாய்
பன்னேனெனமூன்றும் பகர்ந்தமுறையாகத்
தன்னேமுநூற்களைச் சாற்றினேன்சித்தரே. (௫௬௯)

சாற்றியநூலேழிற் றப்பாதோவங்கங்கே
போற்றியவீசனால் போய்க்காதுபோற்றுமின்
மாற்றிடுநன்றாக வல்லவர்காண்பார்கள்
வாற்றியேபோரேன் வாருங்காண்சித்தரே. (௫௭௰)

கேவுனம்

வாருங்காணொன்று வலிமாய்மருவண்டங்
கூருங்காணோடிக் கொடுந்தியால்வேகுற்றுத்
தாருங்காண் தப்பித் தனியண்டம்விட்டுநான்
பாருங்காண்பார்த்தே பலவாமடுக்கென்னே. (௫௭௧)

அடுக்கைக்கடந்து அதுமேலேதான்தோற்றும்
ஒடுக்கியேபாயி லுலாவுறுஞ்சித்தர்கள்
தடுக்கியமேனிதான் தங்கமுமொவ்வாது
வடுக்கியேபார்த்தென்னை வாவென்றார்சித்தரே. (௫௭௨)

சித்தரேயெவ்விடஞ் சேர்ந்தெங்கிருப்பது
பத்தித்தசித்தாலே பாய்ந்தீரோவண்டங்கள்
முத்திக்கும்புத்திக்கு முன்காயசித்திக்கும்
எத்திக்குநூலுமக் கேதென்றுகேட்டாரே. (௫௭௩)

---

* எண்ணே - கருதுவாயாக.
† வண்ணான் - அழுக்கு நீக்குதல்போல மனமாசகற்றுவோன் குரு.

என்றநற்சித்தர்கா ளெய்திய நூல்கேளும்
பண்டுசிவன்சொற் பராபரியென்றுய்க்குக்
கண்டேவகுத்த கமலினிவாய்வைத்துப்
பண்டேபடைத்த பலவண்டம்பார்த்தேனே. (கூஎச)

பார்க்கமுறைதான் பதினறல்லோ நூலில்
ஏர்க்கவொன்றேது யென்னையாசொல்லென்றுர்
சேர்க்கவேயாருங்கள் சேரேமூலட்சமும்
ஆர்க்கவேபார்த்தோம் அதிலொன்றைக்காணேமே. ()

காணப்பொருளொன்று கடந்த * சொரூபம்
வீணனவர்கூவி வெளியாகித்தோணுது
தோணப்பொருளொன்று தோன்றுஞ்சொரூபந்தான்
பூணகநந்திபுகழ்ந்த முறையொன்றே. (கூஎகூ)

ஒன்றேகுளிகையை உறுதியாய்நான்பார்த்துக்
கண்டேகளிக்கக் காத்திலேதாராயோ
பண்டேகுளிகையைப் பார்த்துநீ † சாபித்தால்
இண்டேபல்லண்டங்க ளேறவுங்கூடாதே. (கூஎஎ)

கூடாதேபோகக் குளிகைகெடுப்பாரேர்
ஆடோமாடோநா னழிவற்றசென்மமோ
நாடாங்குளிகையை நானிட்டுத்தாரேன்காண்
தேடாங்குளிகையின் சித்தியைப்பார்த்தென்றுன். ()

குளிகைத் திருட்டு

என்றவன்வாயிலே யிட்டான்குளிகையை
மன்றியபூரண மார்க்கத்திற்போய்விட்டான்
அன்றேயிருந்து மவன்பின்னேநீங்காது
தண்டிக்கமலினி தன்னால்தொடர்ந்தேனே. (கூஎகூ)

தொடர்ந்தண்டந்தோறுஞ் சுத்தியேயான்செல்லக்
கடந்தேனேபேரண்டங் கருதாயிரத்தெட்டும்
நடந்தான்புவனமும் நானும்பின்சென்றிட
அடந்தான்பதந்தாண்டி யப்பாற்பிடித்தேனே. (கூஅ0)

---

* சொரூபம் - குளிகை.

† சபித்தல் - என்பதுசாபித்தல் என நீண்டது. அதாவது சக்தியைக்கெடுத்[தல்

பிடிக்கில்பிறிந்தான் பெரியவெளியூடே
அடக்கியமுப்பாழு ம்ப்புறுந்தாண்டினன்
நடிக்குமனேனன்மணி நாயகிவாசலில்
இடிக்கிப்பிடிக்கையி லேகினன்சித்தனே. (௩அக)

குளிகை வாங்கினது

ஏகினனிஷ்கள யேகவெளியிலே
ஆகினன்மீட்டு மவன்பின்னேசுத்தினேன்
மாகியிளைத்தான் மறனென்கைசிக்கினன்
பாகியவன்கை பறித்தேன்குளிகையே. (௩அ௨)

பறிப்பாயோநீயென்று பாங்காகத்தர்க்கித்தான்
தெறிப்பாயோநானேறித் திரிந்துவருமுன்னே
கறிப்பானகள்ளனே கண்கெட்டமூடனே
குறிப்பாய்த்தொடர்ந்த குறிசொல்லீரென்றானே. (*)

குறியேதுனக்குக் குறிகெட்டசித்தர்நீர்
பறியாச்சோவண்டத்திற் பார்த்தோர்சிரியாரோ
அறிவாட்சியில்லா தறிவுகாண்யான்றந்தேன்
நெறியாச்சுதென்று நிமிடத்தில்வந்தேனே. (௩அச)

வந்தே * யடுக்கு வளமாகச்சோதித்துப்
பந்திக்கீழண்டம் பாய்ந்தேனடுக்கொன்றில்
அந்தித்தமேனி யதிகவெண்சங்குபோல்
சிந்தித்தசித்தர்கள் சேரச்சமாதியே. (௩அரு)

சமாதியைக்கண்டு சரணம்பணிந்தேகி
வமாதித்தவண்ட மதுவிட்டுமோடையில்
ஓமாதித்தசித்தர்களொளிபார்க்கில்ரத்நம்போல்
குமாதித்துலாவையில் கூடிமுன்னின்றேனே. (௩அ௬)

மணிக்குச் சாரணையறிதல்

நின்றவனைப்பார்த்து நீராரென்றார்சித்தர்
தொண்டனடியேன் சொற்பெறுமூலன்காண்

* அடுக்கு - அண்டவரிசைகள். (அண்டகோடிகளெலாங் கருப்பரை போலவே அடுக்கடுக்காயமைத்து) என்றும் (அந்தரத்திலகோடி தாளாமல்நில நிற்கவில்லையோ) என்றும் கூறியவற்றாலுணர்க.

அண்டையிருமென்று ரப்பனேவாவென்றார்
கண்டேனேசாரணை காட்டினார் *சித்தரே. (௬அஎ)

காட்டினீர்சித்தரே கடிமணிப்பேரேது
தாட்டியவட்டமா சித்திமணியிது
நீட்டிக்கமலினி நேருண்டோவில்லையோ
தாட்டிகம்பேசாது தன்மாத்திரையுண்டே. (௬அஅ)

உண்டென்றீர்மாத்திரை யுறமேன்புறக்காது
மண்டியதங்கம் வளமாய்க்குருக்காண
முண்டியேதொந்தனை மூட்டிட்டுச்சூதத்தைத்
தண்டியேகட்டிடச் சார்பையறியோமே. (௬அகூ)

அறியாததினாலோ வப்பனேமாத்திரை
மறியாச்சுருக்கு மகத்துவந்தானில்லை
குறியாகச்சொல்லிடிற் கூட்டுரேஞ்சாரணை
பிறிவானவண்டத்திற் பிறந்த † பரிகேளே. (௬கூ0)

இயற்கைத் தங்கம்

கேளேபரிதான் கெடியாயிரமாற்று
நாளேருறத்தங்க ‡ நாலாற்றின்மேற்றுண்டு
வாளேயுபரச மாற்றேவெகுவுண்டு
தாளேறக்காணலாம் தங்கக்குருசொல்லே. (௬கூக)

பரிக் குரு

சொல்லுறேன்சித்தரே சூட்சாதிசூட்சமாய்க்
கல்லும்பழுக்கக் கவனங்கொடுபோக
மல்லியதீயுநீர் மாருதமுண்டிட
நல்லுங்கமலினி நல்மருமங்கேளே. (௬கூஉ)

கேளீர்நற்கார்முகில் கெடியானமாசூத
மாளீர்புளியுப்பு மத்திக்கொளுத்திடு

---

* சித்தர் - சித்திபெற்றோர். சித்திகள் - ஞானசித்தி - யோகசித்தி - மந்திர சித்தி - கருமசித்தி - என்பன. சித்தியென்றால் நினைத்தபடியுலகில் அனுபவித்தல்.

† பரி - இயற்கைத் தங்கம். வாசி-குதிரை மணிக்கும்பெயர்.

‡ நாலாறு - மேருவின் நாற்புறத்திலுள்ளவை.

வாளீர் * விசைதான் வளமாகவொன்பது
நாளீர்தல † மித்திரம் நாட்டியுருக்கிடே. (௧௪௩)

குளிகைக்குச் சாரணை

உருக்கியசூதத்தி லாட்டியசாரணை
பருக்கும்பிரிக்கும் பகையெல்லாங் ‡ தீதானே
நெருக்கில்விடுவிக்க நிர்மலமாய்நிற்குந்
தருக்கியதங்கத்திற் றூக்குஞ்சரியிதே. (௧௪௪)

சரியாவிச்சூதம்போற் றூக்குநிமிளையை
வரிவாயுரிக்கி மணிபோலதைவாங்கித்
தரியானவீரஞ் சமனிடுவெண்கண்டர்
பிரிவாயிரத்தொடு பேணுங்குருவண்டே. (௧௪௫)

குருவண்டினேடு கூட்டிடுமண்டத்தோல்
மருவியசூத மகத்தானபூரமும்
தருவியவேழுந் தனிக்காமநீரினல்
பருவியரைத்துநீ பாச்சாய்மணிகட்கே (௧௪௬)

மணியைரவிபட வைப்பாய்தினம்பத்து
அணியவேகாமநீ ரப்பிவாநித்தலும்
பிணியாத்திரிவங்கம் பேருதுடைத்துளங்
கணியவரைத்துங் கவசத்துலர்த்திடே. (௧௪௭)

உலர்ந்தபிறகு வுரவாய்முடிவிலே
கலங்கேநால்திக்குங் காட்டிடாய் ** நாற்பீடம்
தலங்கேவெளியிலே தாக்குப்புடமொன்று
அலங்கேகுருவாகும் அற்புதஞ்சித்தரே. (௧௪௮)

அற்புதஞ்சொன்னே னடங்காப்பரிக்குரு
கற்பகமீடோ கலங்காக்குருமுன்னே

---

* விலைச - எண். † மித்திரம் - வெங்காரம்

‡ தீதானே - நெருப்பில் ஓடாத சூதமே மேலானது. அதுவும் பருத்திக்கி நின்றால் திருத்திக்கு நிற்கும்-திருத்திக்கு நின்றாலும்பருக்திக்கு நிற்காது. என்றமொழியின் பொருளை யோர்ந்துதெளிக.

** நாற்பீடம் - சித்தர்களுடைய இருக்கை. இதில் மற்றை யோரிருக்க வியலாது.

நிற்புதசங்கம் நிரைந்தேறுங்கிதாந்தனே
நற்புதஞ்சூத்தமைத நாட்டிக்குருபரே. (கூசுகூ)

பாரென்றீர்மூலர் பராபராவென்னையா
மாரின்றிப்பண்ணவு மற்றோர்க்குங்கூடாது
கூரென்றுல்வித்தை குருதெட்சணைகேளும்
தாரென்றதங்கமுந் தாக்குங்காண்ரத்நமே. (சா)

இரத்தினசாரணை

ரத்தினத்தோடே நலமானதங்கமும்
ஒத்தித்தசாரணை யோர்முன்குளிகைக்கு
மத்தித்தெடுத்தது வாய்ப்பேச்சிருக்கையில்
கொத்தித்தகாந்தியுங் கோடிரவியாச்சே. (காக)

அண்டங்களை க்காணல்

ஆச்சேகுளிகையா லப்பால்கடந்திட்டேன்
பாச்சேசலமாய்ப் பரவினதோரண்டம்
நீச்சேகடந்தே நிரைய நுழைந்திடில்
வாச்சேசமாதியில் வல்லோரிருந்தாரே. (சாஉ)

இருந்தோரைச்சுற்றி யெழிலாய்மறுவண்டம்
பரிந்தேனுழைந்தேனன் பட்டப்பகல்போலே
தெரிந்தேநல்வாயு திரண்டதுவவ்வண்டம்
அரிந்தேகடந்தே னடுக்கெல்லாம்போனேனே. (சாங)

நுழைந்தேனடுக்கெல்லாம் நுவலாயிரத்தெட்டும்
அழைந்தேதிரிந்தபின் * ஞசையும்மாற்றினேன்
முழைந்தேன்சகலமு மோடிஞேனுடினேன்
தழைந்தேசமாதியிற் ருனேனனந்தியே. (சாச)

சிவயோகமும் சித்திகளும்

தானேயவனுகத் தானவன்ருனுக
ஊனேநற்கோட்ட முறுதிமிகப்பண்ணு
வானேநல்வாசியை வைத்துவைத்தங்கங்கே
† பானுட்பழக்கமாய்ப் பார்த்துத்தெளிந்திடே (சாரு)

---

* ஆசையும் - மாற்றினேன்- என்பது கற்கவேண்டியதும் அனுபவிக்க வேண்டியது மின்மையால் ஆசையற்றது என்பதுபொருள்

† பலநாள்என்பது - பானுள் எனநீன்டது.

தெளியாதகாலத்திற் றேகத்தைவைக்காது
தெளியாதகாலத்திற் சித்தெட்டுமெய்தாது
தெளியாதகாலத்திற் சேராதுபூரணங்
தெளியாதமாண்பர்க்குச் சித்தர் *சொற்பொய்யாமே. ()

பொய்யாதுவாசிப் புணையாஞ்சிவயோகங்
கையாரவந்துங் கனியாமிதில்ஞான
மையார்ந்தகண்ணியு மாதேவன்பாழிப்பால்
எய்யாதுமெய்து மெடுக்குங்கவனமே. (௱௭)

கவனமெடுக்குங் களிம்பறுமுன்தேகம்
புவனத்துச்சித்தர்கள் பூசித்துப்பாழிப்பார்
தவனமுமில்லையே சாகாமொருநாளுஞ்
சிவனிவன்றனகுஞ் சேர்வார்சிவயோகம். (௱௮)

வாசிவாமென்று வாசியிலூடாடி
வாசியையங்கங்கே வைத்துநீசாதித்தால்
வாசியுமீசனு மருவியேயொன்றாகும்
வாசியைப்போற்சித்தி மற்றொன்றுமில்லையே. (௱௯)

இல்லையேசித்தி †யிதைப்போலெளிதாகப்
பல்லுகநாளெல்லாம் பார்த்தாலுங்கிட்டாது
சொல்லுயர்வாசி சுருதிமுடிந்திடம்
வல்லுயிர்வாதிகாள் வாசியைப்பார்த்திடே. (௱௰)

பார்த்திடச்சோம்பினல் பலியாதுபொய்வாதம்
பார்த்திடச்சோம்பினல் பாமுங்கிடையாது
பார்த்திடச்சோம்பினல் படுவார் ‡பிறப்புள்ளே
பார்த்திடவல்லோர்க்குப் ** பகலிரவொண்ணுமே. ()

---

* சித்தர் சொல் - ஞானம் யோகம் கற்பம் வாதம் வைத்திய மென்பன.

† இதைப்போல் - சித்தயோகத்தைப் போல்.

‡ பிறப்புள்ளே-என்றதால் சித்தவைத்தியமானதுபிறப் பிறப்பற்ற பீடுறு நிலையே முதற் கொள்கை யாகவுடையதென்க.

** பகலிரவு - சகலகேவலம். ஒண்ணுமோ பொருந்துமோ என்றதனல் பொருந்தாது என்பதுபொருள்.

வகார சிகாரப் பொருள்

ஒண்ணும்வகார மூருகும்மனோன்மணி
பண்ணுஞ்சிகாரம் பகர்ந்தசதாசிவம்
தண்ணுதியொன்றாய்த் தாக்கிடப்பூரணம்
கண்ணாரக்கண்டு களித்தேனன்பார்த்திடே. (௧௪௨)

பார்த்திடென்றேசொல்லிப் பார்க்காதமாண்பர்க்கு
ஏத்தியவாதத்தோ டெல்லாம்வெறும்பொய்யே
வார்த்தியமாத்திரை * வயத்தம்பவித்தையூண்
காத்திடப்பூனையைக் காவல்செய்தொக்கும். (௧௪௩)

ஒக்குமோவாத † முரம் பார்த்துச்சித்திக்கும்
தக்குமோதேகஞ் சதாகோடிகாலமும்
உக்குமேமேனி யுயர்வாம்பிறப்பிது
தொக்குமோகற்பஞ் சொல்லாதிக்கல்லுப்பே. (௧௪௪)

கல்லுப்புக்கட்டு

‡கல்லுப்போவென்று கசடரேயெண்ணாதே
நல்லுற்றவாரிதி நாயகிநாதங்காண்
ஒல்லுற்றநீரி லுருப்பட்டுப்பாரைபோல்
வல்லுற்றவுப்பால் வளர்ந்ததுவாதமே. (௧௪௫)

வளர்ந்திடுமுப்பை வளமாகக்கட்டிட
உளர்ந்துதிரிந்தாலு முருவாகக்கட்டாது
அளந்திதைக்கட்ட வறிந்தோருக் **கெல்லாஞ்சாந்
தொலைந்திடாமாத்துடன் சொர்னக்குருவாமே. (௧௪௬)

கல்லுப்புக் குரு

குருவாகவேயுப்பின் கூறுநான்சொல்லுவேன்
விரிவாகக்கேளுங்கள் வேதாந்தமூர்த்திகாள்

---

* வயத்தம்பம் - வெற்றிக்கொடிமரம். இது காலனைக்கடந்த குறியென்க.

† உரம் - பலம்-புண்ணியபலன்-அல்லது தவப்பலன் - பூஜாபலன்-என்பனவாம்.

‡ கல்லுப்பு - இதனைப்பாரையுப்பென்றுங் கூறுவர் (அனலுக்கு நீருக்கசையாத கல்லுப்பறிந்து கொள்ளே) என்றார்.

**எல்லாஞ்சாம் - எல்லாவுப்புக்களும்பாஷாணங்களுங்கட்டுப்படுமென்க.

பரிவாம்படிக்குப் பகர்ந்திடுகண்டரும்
தருவாஞ்சமபாகந் தர்க்கரைச்சூடனே. (௪௧௭)

சூடனரைக்குமுன் சொல்முதல்ரெண்டையும்
நீடவேவெண்கரு நேராயரைத்திட்டு
ஓடவே லேசா யுரவாகவில்லைசெய்
கூடரவியினிற் கூட்டுத்தினம்பத்தே. (௪௧௮)

பத்தாந்தினத்திற் பரிந்துகுருவாகு
மத்தானகல்லுப் புடைத்திடுபாக்குப்போல்
குத்தாக்குருபூசிக் குமட்டியில்வாட்டிடு
எத்தானஇந்துப் பிதன்மேலேலேபியே. (௪௧௯)

லேபித்துவாட்டி நிரையெல்லாம்வெண்கரு
தாபிச் * சவடு தனியாகநாற்சேரை
எபித்தகல்லுப் பினிற்போடுமுற்சேரை
யாபித்தசுண்ணும் பதுரண்டுஞ்சேரையே. (௪௨௰)

சேரையிடுநீ திரண்டயிரண்டையும்
பூரையரசு பொலியாவிரையுடன்
நேரொத்தசாம்பல் நிரையொன்றுக்கோர்சேரை
தாரையேபாருந் தனிவாரமுரியே. (௪௨௧)

அமுரியினாலே யரைத்திடுநன்றாகத்
திமிரியபாதியைச் சேர்த்திடுபூவோட்டில்
கமரியவுப்பைக் கலக்கப்பதித்திடு
வமரியபாதி வலமாகமேற்பூசே. (௪௨௨)

பூசிமேலோடு போட்டுநீசீலைசெய்
மாசிலாவிசனை வாழ்த்திப்புடம்போடு
ஆசிலாவுப்பை யடைவாயுருக்கிப்பார்
† தேசித்தெறித்தால் திரும்ப ‡ விடம்போடே. (௪௨௩)

போட்டேயெடுக்கப் புகழாங்குருவுப்பு
ஆட்டேசரக்கெல்லா மப்பனேகொன்றிடும்

---

* சவடு - பூநீரு. † தேசி - நெருப்பு.

‡ விடம் - குரு. அதாவது முப்பு. புடமெனவும் பாடமுண்டு.

நீட்டேநற்சினத்தில் நிரையாகலேபித்து
வெட்டேரவியி லுருவாகக்கட்டுமே. (சஉச)

சீனக் கட்டு

கட்டியசினமும் கல்லுப்புஞ்சேர்சமன்
ஓட்டியமுறி யுறவாகும்வெண்கரு
நட்டியிணங்கன் நலமாகமேற்பூசி
மட்டியவோட்டில் வளமாகவாட்டிடே. (சஉரு)

வாட்டு *முரிந்தால் மருவித்தெரித்திடும்
கோட்டுநற்கூடன் குருப்பூசுவெண்கரு
காட்டியகட்டுக் கரைக்கெலாமுள் †நஞ்சு
ஆட்டியும்பூசி யமளியாக்கட்டிடே. (சஉசா)

சாரக் கட்டு

அமளியிணங்க னடைவானகல்லுப்புக்
தமளியசினஞ் சமனுகவெண்கரு
கமளியரைத்துக் கலந்தவ்விடைச்சாரம்
உமளித்துப்பூசி யுறவாகவாட்டிடே. (சஉஎ)

வரட்டியுமுன்கரு வளமாகநீபூசு
ஆட்டியகட்டெல்லா மப்பாமறவாதே
நீட்டியகாரம் நிமிரவேவாட்டிடு
கூட்டியசுண்ணும்புக் கொட்டியெரித்திடே. (சஉஅ)

எரித்திடச்சார மிறுகுமெலும்புபோல்
மரித்தும்புகைந்தால் மறுபடிநீயெரி
தரித்திரம்போகுஞ் சகலமூங்கட்டுண்ணும்
வரித்திய ‡வாத மகப்பட்டதுபாரே. (சஉகூ)

வீரக் கட்டு

பாரேயிச்சாரம் பரிவான வெண்கரு
நேரேயரைத்ததை லேபித்துவீரன் மேல்

---

* முரிவு - அதிகரித்தல். † நஞ்சு - குரு- முப்பு.

‡ வாதம் - தவத்தாலும் யோகத்தாலும் குருவருளாலும் கிடைப்பதால் ஒரு பொருளைச்சிருட்டி செய்வதுபோலென்க.

காரே தணல்மேலே கைம்முறையாய் வாட்டு
தாரே *யிணங்கன் தசைசுடங்கல் லுப்பே. (௪௱௰)

உப்போடுமூன்று முறவாக மேற்பூசிசிச்
செப்பிட்டு மூடியுஞ் சீலையொன்றின்பினே
தப்பாதேதீயில் தவறாதே வாட்டிட
ஒப்பிடுவீர முருகியசையுமே, (௪௱௧)

சாரக் குரு

அசைகின்றவீர மணியில் நவலோகம்
இசைகின்றமாற்று மெட்டரை தப்பாது
பசைகின்றசாரத்தின் மேலேபரவிடத்
தசைகின்றசாரந் தவளக்குருவாமே. (௪௱௨)

குருவானசாரங் குறிப்பாயிடைரெண்டு
மருவானவீரமு மாட்டதிலோரிடை
தருவானசூதமுந் தானுமிடைரெண்டு
பெருகா †மித்ரத்தொடு பேருங்குருவண்டே. (௪௱௩)

துருசுக் குரு

போரகக்கட்டின சாரமுமோரிடை
வாரானகுக்குடம் வளமானவெண்மலம்
தாரானவேழும் தனியரைவெண்கரு
ஓராந்துரிசியு மோரேழ்வாரகனே. (௪௱௪)

ஓரேழ்வாராக நெருகட்டியாய்வாங்கி
ஆரேழிதைப்பூசி யடர்ந்தரவியில்வை
தாரேசலாசத்துத் தனிச்சுன்னமேற்பூசு
வாரேநற்சீலை வளமாக்செய்திடே. (௪௱௫)

செய்திட்டுலர்த்தித் திரமாகமூன்றுநாள்
பைதிட்டவங்கம் பருகியுருகையில்
கைதிட்டமாகநீ கலங்காமல்தோய்த்துவா.
மைதிட்டமாக வடைவாய்ப் பதினென்றே. (௪௱௬)

---

* இணங்கன் - வெடியுப்பு.
† மித்ரம் - கலப்பிப்பது. அதிவெங்காரம்.

பதினோர்தரந்தானும் பாங்காகத்தோய்த்திடில்
மதியோவிதுவென்ன வளமாய்க்குருவாகும்
*அதியாஞ்சரக்கு அறுபதுங்கட்டுண்ணும்
நிதியாய்ப்பிறந்திடும் நிமிஷத்தில்கற்பமே. (சகஎ)

கற்பமுஞ்சொன்னேன் கனத்தகுருவாக
அற்பங்காண்சொல்லே னருமையாமிந்நூலில்
நிற்பகத்தங்கம் நிலையுற்றுருகையில்
தற்பரிமிளை சமபாகந்தாக்கிடே. (சகஅ)

தாக்கிடைரெண்டின் சமனாகவீரத்தைத்
தூக்கிக்குகையைச் சுழட்டுமணியாக
ஆக்குந்துரிசோ வதில்பாதிகல்வத்தில்
†நேக்குநற்சூதம் நிறைமணிப்பாதியே. (சககூ)

பாதியாஞ்சூதத்திற் பாதியிடுவீரம்
நேதியாம்வெண்கரு நீட்டியரைக்கையில்
கோதிக்குருவண்டு கொட்டதி‡லைம்பது
ஏதியாம்பூரமு மெட்டொன்றுகூட்டிடே. (சசய)

கூட்டியரைத்துக் குழுறமணிமேலே
ஆட்டியுலர்த்து அடைவாகமூன்றுநாள்
நீட்டுங்கிளிஞ்சில் நிலவுஞ்சலாசத்து
பூட்டியும்பூசிக்கப் புடத்திற்குருவாமே. (சசக)

பூசித்திடீசன் புகழாம்பராசக்தி
ஆசிக்கணேச னடைவாங்கிசைதேவர்
மாசித்தவாணி மகத்தாங் **குருவொடு
நேசித்துப்பூசிக்க நீயாங்குருவாமே. (சசஉ)

குருவானதங்கத்தின் கூறுகேள்தொந்தனை
பருவானதங்கத் தகட்டிலேபத்தொன்று
விரிவாந்துரிசிக் குருவவ்விடைப்பூசு
தருவானவண்டப் பொடிக்கீழ்மேல்தாக்கிடே. (சசங)

---

* அத்தி - என்பது அதியெனவந்தது. அத்தியென்றால் யானை - யானை போல் அடங்காதசரக்குகளைக்கட்டுப்படுத்துமென்பது பொருள்.

† நேக்கு - நெகிழ்வு. ‡ ஐம்பது - ஒருயிடை.

** குரு - தெட்சணாமூர்த்தி. அல்லது மானவருருவாகவந்தவர்-

தாக்குகளங்கத் தயங்கிப்புடத்தைநீ
போக்குப்புடமெட்டும் போயேறுங்கொத்தனே
ஆக்குமேசூதத்தி லேயிரண்டுக்கொன்று
போக்குந்துரிசிக் குருபத்துக்கொன்றிடே. (சசச)

சூத மணி

இட்டேவாய்நீரா லிழையவரைத்திடு
கட்டேயுருளுங் கபளித்து *மத்தங்காய்
மட்டேபுடந்தான் வளமாய்பதினென்று
நட்டேகுளிகை நலமாயிறுகுமே. (சசரு)

இருகும்குளிகைக்கு ரெட்டிப்புச்சூதம்வார்
மறுகியரைத்திடு வாய்நீராலுண்டைசெய்
குறுகுந்துரிசிக் குறுப்பூசிச்சற்றேநீ
ஆறுகுமத்தங்கா யதுக்குள்புடம்போடே. (சசசு)

போட்டுவாயிப்படிப் புடந்தோறுமட்டாக
ஆட்டுந்தொழிலி லாருக்குநான்சொன்னேன்
நீட்டுநல்வாசியில் நின்றுநல் †வேதாந்தங்
கூட்டிடுஞ்சித்தர் குழாத்துக்கொளித்தேனே. (சசஎ)

ஒளித்தேகுருமுன்னே யொருகுருவடல்ல
அளித்தேனேயாயிர மதுக்குஞ்சுறுக்கிது
தெளித்தேனேஞானத் தெளிவுள்ளார்க்கேசித்தி
பழித்தகசடர்கள் பார்த்தால்பலியாதே (சசஅ)

இவருக் காகாதெனல்

பலியாதுபாவி பரதூஷமூடர்க்குப்
பலியாதுஞானத்தைப் பார்க்காச்சண்டாளர்க்குப்
பலியாதுவாசிப் பருவமறியாட்டால்
பலியாதுஈசன் பதம்போற்றுமாண்பர்க்கே. (சசகூ)

தங்கக் குருவினால் காயசித்தி

போற்றியசொர்னக் குருதான்தினங்குன்றி
ஆற்றியேயுண்பா யமர்ந்தொருமண்டிலம்

---

* மத்தங்காய் - ஊமத்தங்காய்.

† வேதாந்தம் - தமிழ் வேதத்தின் முடிவினையென்க. அல்லது வேதாந்த சூத்திரமும் பத்துஉபனிடதமு மென்றுணர்க. சங்கரர்மதமன்று.

மாற்றியேமேனி வளமாகச்சட்டைபோம்
தோற்றியபானு சுடராகுஞ்சித்தியே. (௨௫௰)

சித்தியாஞ்சொர்னக் குருவால்சரக்கெல்லா
* மத்திப்புரட்ட வசையாமல்கட்டுண்ணும்
வத்தித்தலோக வகைகண்டு நூலுடன்
சித்தித்தவாயிரத் தொன்றிடிலேமமே (௨௫௧)

நற் புத்தி

ஏமத்தைக்கண்டு இருமாந்துபோகாதே
வாமத்தைத்தொட்டு வளமரகப்பூசைசெய்
காமத்தைவிட்டுக் கண்டுகொள்வாசியைச்
ஊமத்தன்சாரணை யூட்டாய்குளிகைக்கே (௨௫௨)

குளிகையைவாயிட்டுக் குன்றுமலைதோறும்
அழிவில்லாச்சித்தர்க ளங்கங்குபோய்ச்சென்று
தெளிவுறக்குட்டெலாந் தெளிந்தபின்நீகேட்டுக்
கழிவுருங்கால்தன்னைக் கட்டாய்சமாதியே. (௨௫௩)

சமாதியுரைத்தக்கால் தக்க †ரிஷியென்பார்
அமாதிக்குளிகையி லாடினற்சித்தனும்
கமாதித்தவாசியைக் கண்டோர்சிவயோகி
புமாதித்தமூன்றும் பொருளொத்தஞானமே. (௨௫௪)

கெந்தகச் சத்து

ஞானமயமான நல்லோர்கள்கேளுங்கள்
மானமாங்கெந்தியை வாங்கிநீகைம்முறை
கானமாங்கட்டிய கல்லுப்புமோர்பலம்
ஓனமாங்காரக் குருவோர்பலம்போடே. (௨௫௫)

போடுவாயோர்பலம் புகழ்கட்டுச்சாரத்தை
ஓடுநற்கெந்தியு மொன்பதுவேப்போடு
தேடுந்தொகையது தீர்க்கப்பணிரெண்டும்
நீடுங்கலுவத்தில் நீபழச்சாரிடே. (௨௫௬)

---

* மத்தித்து - என்பதின் கடைக்குறையாக மத்தியெனவந்தது.

†ரிஷி-மந்திரம் வெளியிட்டோர், இவர்களே ஆரியர்களுக்குத்தலைவர்கள். சித்தர்கள் தமிழர்களின் தலைவர்கள் - அதாவதுசித்தயோகமும் ஞானமுங் கைவந்தவர்கள். சித்தயோகமாவது மருந்து மணி மந்திரங்களைத் துணை கொண்டது.

பழச்சாற்றிற்பூவெலாம் பாங்காய்ப்பிசைந்தி
இழைத்தேகலந்து இமூத்தரைகெந்தியை
தழைத்தேதினமொன்று தப்பாதரைத்துவா
பிழைத்தேபூவரசன் பூச்சாறுவார்த்திடே. (சருஎ)

வார்த்திட்டரைமூன்று நாளும்வளமாகக்
கோர்த்திட்டுநிற்குங் குமரிப்புமூன்றுநாள்
சேர்த்திட்டுமொன்பான் தினமுங்கடந்தபின்
வார்த்திட்டவில்லைபோல் வாகாயுலர்த்திடே. (சருஅ)

உலர்த்தியேவன்னியி லூட்டாய்சிவயோகி
மலர்த்தியசத்து வருங்காணுமோர்பலம்
குலர்த்தியிதைவாங்கிக் கொட்டுமறுகுகை
அலர்த்தியுருக்கி யடைவாகச்சோதியே. (சருக)

சத்து உருக்க மித்திரம்

சோதிக்கமித்திரஞ் சூட்டிமைல்காரத்தை
ஆதி *வளைய லதில்போடுமூன்றிடை
காதியவீரமுங் காத்திடவோரெடை
பேதித்துரைத்துப் பிலக்கப்பொடிசெய்யே. (சகூய)

பொடியையுருக்கைகயிற் போட்டுவாசோதனை
வடிவாகவித்தை வாங்கிர்விகாட்டி
மடியுமளவு மடைவாகச்சோதித்தால்
கெடியரவிகாணுங் கேளீர்நற்சித்தரே. (சகூக)

தங்கச் செம்பு

கேணுரிடுசெம்பு கெடிநூறிடுதங்கம்
† வானீருருக்க மகத்தாம்பரிச்செம்பு
வானீரிரத மடைவாய்க் குழைத்திடு
ஆணிவேர்கண்டுநீ அப்பாய்குளிகையே. (சகூ௨)

குளிகையெடுத்துக் குமட்டிவலக்காரங்
தெளிவாகவேகட்டிச் சிந்தித்திவாசியை

---

* வளையல் - கருவளையலுக்கும். வளையல் நஞ்சுக்கும் பெயர்.
† வானீர் - சுத்தகெங்கை, இதற்குப்பல பொருளுண்டு.

தெளிவாகப்போக்காமல் நிறுத்தியேயுள்ளுக்குள்
ஒளிவாகவாயிட வோடுங்கவனமே. (௪௬௩)

ஓடலாமெங்கு முலாவலாமண்டத்தில்
தேடலாம்பூரணந் தெளிவாமதிவாச்சு
தேடலாஞ்சித்தர் திரட்டெல்லாம்பாவித்திக்
கூடலாம்ஞானக் குறிப்பங்கெளிதாச்சே. (௪௬௪)

*பரிச்செம்பினால் காயசித்தி

ஆச்சேயிச்செம்பு வாத்தாளிடநாதம்
போச்சேவெகுதூரம் பூட்டல்லதொந்தனே
மாச்சேமதிமேலே வைப்பாயிரத்தொன்று
காச்சேகனகங் கனமானமாற்றிதே. (௪௬௫)

மாற்றும்பரிச்செம்பை மாட்டிக்குருபண்ணு
ஆத்தாளுந்தந்தை யறைந்தரகசியம்
ஏத்தாங்குரு †வீச மேழுநாள்தின்றிடே
‡ஊத்தாமுன்தேக மொளிபார்க்கில்கூசுமே. (௪௬௬)

கூசுமேகண்களுங் கொடிரவிக்கொப்பாய்
மாசுமேதேகமு மதனுக்கிணையாகும்
பேசுமேபூரணம் உம்மைப்பிரியாது
வாசிமேல்வாசி வாசியவனுமே. (௪௬௭)

அவனாகவேவ்வாசி யவ்வாசிதானாகச்
**சிவனாகவேநின்ற சித்தர்மகத்துக்கள்
மவுனசமாதியில் வாழ்வர்வெகுகோடி
புவனத்தில்வேதாந்தப் புண்ணியர்க்கெய்துமே. (௪௬௮)

எய்திடுங்கல்லுப்பா லெட்டெட்டுமாடலாம்
கைதிடுமேருக் கவனமுமோடலாம்
வைதிடுஞானத் தகண்டத்திலூடலாம்
பைதிடுவாசி பலிக்கின்றகாலமே. (௪௬௯)

---

* பரி - தங்கம். † வீசம் - ஓரிடை.
‡ ஊத்தை - அழுக்கு - ஊத்தை யென்பது ஊத்தாயென நீண்டது.
** சிவனாக - சித்தனுசிவமாக்கி. என்றார்மணிவாசகர்.

காலமேதென்று கலங்காத * வல்லோரைக்
கோலமேயாறு குறிப்பானசக்கரம்
நூலமேயங்கங்கே சொன்னேனதன்தெய்வம்
பாலேயேயட்சரம் பாங்காயறிந்திடே. (௪௭௰)

அண்ட வுற்பத்தி

அறிந்துநீயங்கங்கே யடைவாய்ப்பழகிவா
வறிந்துநீபுத்தியில் வைத்திடுவாசியை
எறிந்துநீயேறில் யெடுத்ததெல்லாஞ்சித்தி
பறிந்துநீயண்டத்திற் பாயுமுறைகேளே. (௪௭௧)

கேளேநீயண்டங் கொடியானவுற்பனங்
கேளேபிருதிவி தெண்ணீரதன்மேலே
கேளேமூள்வன்னிக் கெடுங்காலதின்மேலே
வாளேவெளிவானம் வளர்ந்ததிவ்வண்டமே. (௪௭௨)

அண்டத்தின்மேலே யடர்ந்ததுபூமிதான்
பண்டுத்தபூமிமேற் படர்ந்ததுவப்புனல்
தண்டப்புனன்மேற் றளர்ந்ததுவன்னிதான்
கண்டத்தழல்மேற் கலந்ததுவாயுவே. (௪௭௩)

அண்ட பிண்ட வேற்றுமை

வாயுவுமேலே மருவினதாகாசம்
காயுமோரண்டத்தில் கண்டகுறிப்பிது
பாயுமோராயிரத் தெட்டுக்குமிப்படிப்
பாயுமோர்பிண்டம் பரிந்துநீபார்த்திடே. (௪௭௪)

உடலில் பஞ்சபூதம்

பார்த்திடுமாங்கிஷம் பரித்தபிருதிவி
வார்த்திடுரத்தம் வழலையுநீராச்சு
தோற்றிடுவாய்வு சுழண்டேறிப்புக்கிற்று
காற்றோடுதீயும் கலந்தவிசும்பென்னே. (௪௭௫)

கல்ந்தேசெவிக்குள்ளே கண்டதுவாகாசம்
மலந்தே † யிடைபி னிரண்டாச்சுவாயுவு

* வல்லோர் - மாருத சக்திபெற்றோர். இவர்களே காலத்தையும் கருமத்தையுங் கடந்த பெரியோர்.
† இடைகலை பின்கலை சுழிமுனை.

குலங்தேசுழிமுனை கூடிற்றுமேருவாய்த்
தலங்தேபிண்டத்திற் சார்ந்தமுறையாச்சே. (சஎகூ)

ஆச்சேயிப்பிண்டத்துக் காதாரம்பூமிதான்
வாச்சேபூமேலே வளர்ந்ததுநற்புனல்
காச்சேபுனலுக்குள் கடுங்திகாண்பானுவுங்
தோச்சேயீதைஞ்சிற்சுழல்வாய்வுமேல்விண்ணே. (சஎஎ)

அண்டபிண்டம்

விண்ணுற்ற *வண்டம் விரைந்ததன்பிண்டத்திற்
கண்ணுற்றுற்போலவே கண்டிடுசிற்றண்டம்
பண்ணுற்றபேரண்டம் பார்த்ததுமிப்படி
தண்ணுற்றமேரு தலையிற்றுருவனே. (சஎஅ)

துருவன்றலைக்குள் சுழண்ட விதங்கேளும்
மருவவிமதி மற்றுள்ளகோள்ராசித்
தருவியிருபதுங் தானேழாம்ரோகணி
பருவிப்பரவும் பலபலமீன்களே (சஎகூ)

பலபலபேரால் பகர்வார்பெரியோர்கள்
வலவிய †செக்குப் போலாடிற்றுவவ்வண்டம்
நிலவித்துருவனும் நின்றதமரோடும்
கலவிக்கவனங் கலங்தோடுமண்டமே. (சஅ௦)

அண்டத்துட்புக்க மசையாமலேயோடும்
வண்டுற்றுப்பாய்ந்தாலும் வாகாயழியாது
உண்டுற்றுமேலோ டுலாவியறிவார்கள்
பண்டுற்றசித்த ரிதைக்கண்டுபாருமே. (சஅக)

கண்டுகண்டண்டங் கடங்தோடிநீபாரு
பண்டுவுரைத்த பழக்கத்துடனேநீ
அண்டிடுமாத்திரை யாருக்குங்காட்டாதே
ஒண்டிறலண்ட முகங்துநீயோடிடே. (சஅஉ)

---

* அண்டம் - உலகு. இதுகடவுளுடம்பு. இவற்றைச்சிற்றுடம்பு பேருடம்பு எனலும்பொருந்தும். அதாவதுசீவேச்சுரர்களுக்கு.

† செக்கு - இழுப்புக்க வர்ச்சியாலும் ஒட்டக்கவர்ச்சியாலும் சுழலுவதைக் குறிததென்க.

* மூலாதாரம்

ஓடிடும்போது வொருமித்துவாசியை
நாடிடுதிக்கை நலமா † யிதத்தெண்ணி
கூடிடுமார்க்கத்திற் கோடிகாண்சித்தர்கள்
ஆடிடுமார்க்க மறிந்துகொள்மூலமே. (௪௮௩)

மூலமிருந்த முறைகேளுமண்டம்போற்
கோலமதின்மேலே குலாவியநாலிதழ்
சீலநடுவேசிறந்திடு முக்கோணம்
ஆலயமூன்றி லமர்ந்தசிகாரமே. (௪௮௪)

சிகாரமேமூலஞ் சிறந்தமுனையொன்றில்
ஓகாரவடிவாகி யோமென்னுங்குண்டலி
நகாரமுதலாக நற்சக்கரமயம்
அகாரக்குருதா ளளாவியிரங்கிற்றே. (௪௮௫)

இரங்கிப்புருவ மிடைக்குள்ளேநின்றது
தரங்சித் ‡ தமர்வாசல் தாளாகிநின்றது
மரங்கித்தமூல மருவுமிதழ்நாலில்
அரங்கத்தவர்முத லறிவானவர்க்கிடே. (௪௮௬)

இட்டதுநாலு மிருந்தசிகாரமும்
ஒட்டியேபார்க்க வொருமுனைவல்லபை
கட்டிமுனையொன்றிற் கணபதியேநிற்பார்
மட்டானகுண்டலி வாய்க்குள்ளேநந்தியே. (௪௮௭)

சுவாதிட்டானம்

நந்தியைப்பார்த்திடு நாட்டுசிகாரத்தை
அந்திவகார மடைவாகவேபூரி

---

* ௩௪ம் பாட்டு - முதல்யோகத்தைக் கூறியும் இங்குங் கூறியதும் வேறுவித சாதனங்களைக் கொண்டென்க.

† இருதயம் - என்பது இதயமெனவும் இதமெனவும் குறைந்தது.

‡ தமர்வாசல் - குண்டலிசத்திவாய், அல்லது மேல் மூலமாகிய உள்நாக்கினடியில் உள்ளதுளை.

பந்திய * வேதம் பலபல நூலெல்லாஞ்
சிந்திக்கத்தோன்றிடுஞ் சேர்த்திடுவாசியே. (௪அஅ)

சேருந்தினந்தான் றெளிவாகக்கண்டிடு
பாருவிடாமலே †பாழிப்பானென்னந்தி
கூறிதுதாண்டக் குலாவியசக்கரம்
சேறிதழாறுஞ்சுவா திட்டானமென்பரே. (௪அகூ)

என்பாரிதழாறி லிருக்கின்றவட்சரம்
வன்பர்ம்வகாரம் வகுத்தலவ்வோடாறும்
தன்பால்நடுவே சதுராம்நகாரங்காண்
இன்பாகவாணி யிருக்கும்பிரமனே. (௪கூ0)

மணிபூரகம்

பிரமனைப்பார்த்தும் பேணிற்றெளிந்துநீ
அரமனைக்குள்ளே யந்தித்துவாசியை
உரமனைத்தாக்கு வோடினுமோடாது
திரமனையோடுஞ் சிவயோகியாகுமே. (௪கூக)

ஆகின்றசக்கர மதின்மேல்மணிபூரம்
பாகின்றிநிற்கும் பாய்ந்தவிதழ்பத்தாய்
வாகின்றபத்தினில் வரைந்தவெழுத்துக்கேள்
போகின்றவாமுதல் புகழாம்வகாரமே. (௪கூ௨)

புகலானதானம் பொலிந்துநடுவூடே
மகலாமகார மருவியிருந்தது
நிகழானமாலும் நிறையானலட்சுமி
அகலாதிருப்பார்க ளப்பனேபார்த்திடே. (௪கூ௩)

பார்த்திடு மேலே பாலிக்குமாயோகம்
காத்திடுநீதான் கருமேகவண்ணனைக்
கோத்திடுவாசி குமட்டியதிற்பாரு
ஆத்திடுமப்பா லநாகதங்கண்டிடே. (௪கூ௪)

---

* வேதம் - வேய்தல்மறைத்தல் என்றபொருளால் மறைவாகிய பொருளை யுடையது, ஞானிகளால் உண்மைப்பொருள் காண்பது, இதுதமிழிலும் ஆரியத்திலு முள்ளது.

†பாழித்தல் - பேசுதல்இதுதமிழ்வழக்கு, ஆரியர் இதனைக் குசலப்பிரசன மென்பர்.

அனாகதம்

கண்டிடுசக்கரங் காணிதழீ ராறில்
தண்டியெழுத்தினைச் சாற்றமுறைகேளு
அண்டிடுசக்கர மம்முதலாகவே
ஒண்டிப்பனிரெண்டு முறுதியாய்நின்றதே. (சகரு)

நின்றநடுமையம் நேராகமுக்கோண
மண்டிச்சிகார மதுக்குள்ளேநின்றது
தண்டியருத்திரன் தாயானபார்வதி
அண்டித்தொழுதுநீ *யாட்டிடாய்வாசியே. (சகசு)

வாசியையாட்ட மகத்தாமனத்துடன்
ஓசியேபானு வொருகோடிபோலொளி
தேசியின்தேசு சிறக்குமதிற்பாரு
ஆசியைத்தாண்டிய தன்மேல்விசுத்தியே. (சகஎ)

விசுத்தி

விசுத்தியிதழ்தான் விளங்கப்பதினாறு
வசுத்தியவட்சர மாமுதலீரெட்டும்
பசுத்தியிதழ்க்குள் பரவியேநின்றது
ஓசித்துநடுமைய மோரறுகோணமே. (சகஅ)

கோணநடுவே குவிந்தவகாரங்காண்
ஆனமயேச்சுர மாத்தாள்மயேஸ்வரி
பேணியிருந்தது பேரானகண்டங்காண்
பூணப்பரத்தின் புகழாமடியிதே. (சகக)

அடியிலேவாசி யசையாமல்வைத்திட
முடியிலேகொண்டுபோய் மூட்டுமதுபாரு
† கொடியிலேயோடிடுங் கூப்பிடும்பூரணம்
மடியிற்கனிபோலே வாய்க்குங்காண்யோகமே. (ருா)

---

* ஆட்டிடாய் - மேலே செலுத்துவாயாக.

† கொடி - வீணாத்தண்டாகிய கொடிமாத்திரனைச் சுற்றியிருக்கும் கொடி போன்றதே சுழிமுனைநாடியென்க, இக்கருத்தினையே கொடிநிலை கந்தழி வள்ளி யென்று, கூறியது, தொல்காப்பியம்.

ஆக்கினை

வாய்க்குந்தலமேல் வளமாகக்கண்டிடும்
காய்க்குமிதழ்ரெண்டு காணருமாக்கினை
பாய்க்குநடுவே பகுந்ததைகாரங்காண்
வாய்க்குஞ்சதாசிவம் வட்டமணியெண்ணே. (ருாக)

மணியாமனோன்மணி மாதாவைநேசித்து
அணியாயதற்குள் ளடைவானவாசியைப்
பணியாகவேபூட்டிப் பார்த்திடும்யோகியே
தணியாதசித்தர் தலைவன்காண்தப்பாதே. (ருாஉ)

ஆறாதாரநிறமும் இடமும்

தானாகநின்ற தலமாறின்வர்னங்கள்
கோனாகுமூலங் குமட்டியபொன்னிறந்
தானமதுமேலே நாலங்குலந்தாண்டில்
வானனகஞ்சன்றன் வர்னம்வெளுப்பென்னே. (ருாங)

வெளுப்பானகஞ்சன்றன் மேலாறுவங்குலம்
விளுப்பானமால்தான் விரைந்தகருநிறந்
தளுப்பாதிமேலே தானெட்டுவங்குலம்
மளுப்பானருத்திரன் வர்னஞ்செவப்பென்னே. (ருாச)

செவந்தபதிமேலே சேர்பத்துவங்குலம்
நவந்தான்மயேச்சுர னதனுமைபச்சை
அவந்தானுமங்கே யதின்மேற் *பனிரண்டில்
தவந்தான்சதாசிவன் தானஞ்சுவர்னமே. (ருாரு)

வன்னங்கள்சொன்னேன் வளரங்குலஞ்சொன்னேன்
தன்னங்கெழுத்தொடு சார்ந்தவிதஞ்சொன்னேன்
பன்னங்கள்வாழ்ந்த பதிதேவதைசொன்னேன்
உன்னங்கள்வாசியை யூட்டிடுந்தப்பாதே. (ருாசு)

ஆயிரமிதழ்க் கமலம்

தப்பாதேதாண்டிடத் தானங்குருபதம்
ஒப்பாயிதழ்காணு மோராயிரத்தெட்டுங்

* பனிரெண்டு - பனிரெண்டங்குலமென்க. அங்குலம்ஒருவிரல்.

கொப்பாகடுவே குறிப்பதுவைங்கோணம்
அப்பா அகார உகாரமகாரமே. (ருாஎ)

மகாரத்துடனே மருவியநாதங்கேள்
பகாரத்தவிந்து பரிவாயிதுவஞ்சும்
ஒகாரத்துச்சோதி யோளிபோல்வெளியாகி
நிகாரத்தநின்மலம் நின்றவடிவாமே (ருாஅ)

வடிவாமிடத்திலே வைத்திடுவாசியை
நெடிவாய்ப்போகாமல் நிறுத்தியதிற்பாரு
*குடியாம்பிலக்குங் கொண்டிடும்பூரணம்
வடிவான †வேதாந்த மன்னும்பொருளிதே. (ருாசு)

பொருளுணர்தல் (ஞானம்)

பொருளாமதில்நின்று போக்கோடேமேல்நோக்கச்
சுருளாங் ‡துவாதசங் தோற்றுமதிலேறும்
அருளாலுனேமுற் றழிந்தால்மகாஞான
மருளாய்ப்பிடரியில் வைத்திடல்யோகமே (ருகம)

யோகமாங்குண்டலி யோகத்தைநோக்கிடப்
பாகமாய்க்கீழே பதிமூன்றுகண்டிடும்
நாகமாய்நின்ற நடுமையீம்நோக்கினல்
ஆகமாய்ருத்திர னழல்கோடிபானுவே (ருகக)

பானுவுக்குள்ளே பகருமுறையஞ்சும்
நானும்படியாக நாசியிற்பாயாது
**தேனுமீதூறுந் தெளியாதுஞானங்கள்
வானுவாய்வாசியை வைத்துநீபார்த்திடே (ருகஉ)

பார்த்திட்டேன்யானும் பழகியிம்மார்க்கத்தைக்
கோர்த்திட்டவண்டத்தில் கூசாமலோடினேன்
ஆர்த்திட்டவண்ட மடங்கப்புவனமும்
போர்த்திட்டவற்றெடும் பூரணங்கண்டேனே (ருகங)

---

* குடியாம் - இருப்பிடமாகிய உடல்.

† வேதாந்தம்- தமிழ்வேதமுடிவு, அதாவது உடல்சித்தியும் உயிர் முத்தியும் அடையும் உளவு கூறும் நூலெனக. அதுசித்தர் நூற்களே.

‡ துவாதசம் - பனிரெண்டங்குலம்.

** தேன் - அமுதம் இது தத்துவம் புவனம் கலை மண்டிலம் மவுனம் என்று ஐந்து வகைப்படும், இதனையேபஞ்சாமிர்தமென்பர்.

கண்டேனேகாட்சியைக் காரணர்காட்டிட
விண்டேனேசித்தர்க்கு வெளியாய்த்தொழிலெல்லாம்
பண்டேகுளிகைப் பருவமெல்லாஞ்சொன்னேன்.
கொண்டேமுன்னூயிரங் கூறினேனைந்நூறே (௫௧௪)

ஐந்நூறுசொன்னே னடைவானசித்தர்க்கு
ஐந்நூறுசொன்னே னகண்டமெய்ஞ்ஞானிக்கு
ஐந்நூறுசொன்னே னடியேன்சிவன்சொல்ல
ஐந்நூறும்பார்த்தவர்க் காதிமகாசித்தே (௫௧௫)

சித்தாகவேண்டினாற் சேர்ந்துண்ணுங்கற்பத்தை
வத்தானவாசியை வைத்துவைத்தேபாரு
* கொத்தானவாசையும் கோபமும்விட்டிடு
உத்தாருனக்கு மொருகோடிசித்தரே. (௫௧௬)

கோடிதுறைசொன்னேன் குலாவியவாதந்தான்
ஆடியேபார்த்து அழியாதேபொன்னாலே
நாடியேநாவின்ருசியாலேவண்டுபோல்
ஊடிக்கமலத் தொடுங்காதேசித்தரே (௫௧௭)

ஒடுங்கிச்சகமெல்லா மொக்கவிறந்தார்கள்
அடுங்கியசாங்கத் தகண்ட நானென்பார்கள்
எடுங்கியகாலை னெறிந்தவலைசிக்கி
நடுங்கித்தளர்ந்து நலிவார்களெய்தாதே. (௫௧௮)

எய்யாதுசாங்கத் தெளிதாகமெய்ஞ்ஞானம்
மையாகமூலத்தில் வாழ்ந்தேயிருக்கையில்
பொய்யர்மோகண்டது புத்திதான்கெட்டதே
கையாறவாசிதான் கண்டபின் †சாங்கமே. (௫௧௯)

சாங்கமாயான்சொல் சடாதாரமார்க்கமும்
ஓங்காக்குருபத முயர்வோடுமாறிலும்
பாங்காகப்புத்தியாற் பகுத்தேமனமுன்னி
வாங்காமற்பார்க்க மகத்தானசித்தியே. (௫௨௰)

---

* கொத்தான ஆசை - கூட்டமாகிய ஆசை, அது மண்ணாசைபெண்ணாசை பொருளாசையென்க.

† சாங்கம் - அங்கமுடையது அது உருவத்தியானமென்க. அன்றி உடம்பின் அபிமானமும், தோற்றமுமென்க.

மனம் புத்தி இயல்கூறல்

சித்தஞ்சிவன்காண் சேர்மனஞ்சத்திகாண்
ஓத்தநற்புந்தி யுறுதிமகாயோகம்
கொத்தாகமூன்றுக்கும் கோனுகுமாங்காரம்
பத்திநல்லாங்காரம் பாவத்துக்கேதுவே. (ருஉக)

சூதசுத்தி

ஏதுவாய்நின்ற வெழிலானசூதத்தில்
கோதுவாய்நின்ற குடில *மயலேழுங்
கேதுவாய்ப்போகாட்டால் கெவனமெடுக்காது
வாதுவாம்வாதத்துக் காகாதுவாகாதே. (ருஉஉ)

ஆகாதசன்மச மகற்றமுறைகேளு
வாகானகல்லுப்பு மாட்டுசமபாகந்
தாகாக்குமரிப்பூச் சாரொருமூன்றுநாள்
பாகாய்க்கழுவிப் பதனமாய்வாங்கிடே. (ருஉங)

சூதக்கட்டு

வாங்கிட்டசூதம் வளமாய்ப்பலமிரெண்டு
தாங்கிட்டசட்டியில் தானேயதைவார்த்து
ஓங்கிட்டவண்டோடுள்சூடங் †கண்டரும்
பாங்கிட்டசாரமும் பாரிருகாரமே. (ருஉச)

காரத்துடனே கடுகியிரண்டுப்பு
வாருற்றவப்பிரகம் வாங்குநவநீதம்
நேரொத்திடவே நிறையாகவொன்பதும்
தாரொத்தமுரியால் தாக்கியரைத்திடே. (ருஉரு)

அரைத்தேகலக்கா ‡ய்முரிபடிநாலில்
விரைத்தேசூதத்தில் விளங்கச்சுருக்கிடு
தரைக்கேயிரக்கிநீ தான்வாங்குபிட்டினை
துரைத்தேபடிநாலு சூட்டாயமுரியே. (ருஉசா)

---

* மயல் - திரை அதாவது எழுதோடம்.

† கண்டர் - துருசு

‡ அமுரி என்பது - பலபொருளைக் குறிக்குஞ் சொல்லானதால் இது வென்று கூறவியலாது. அவரவர் அனுபவப்படி புரிவதுநலம்.

சூட்டிக்கலக்கிச் சுகமாய்மறுவிசை
ஆட்டிச்சுருக்கிடு வப்படிச்சூதத்தில்
தீட்டிப்படிக்கே திரமாச்சுறுக்கஞ்சு
மாட்டியேபூட்டி வளமாகவாங்கிடே. (ருஉஎ)

வாங்கியேகல்வத்தில் வைப்பாய்பனிப்பட
ஓங்கி *ருதுவாயொழுகுஞ் † செயனீரைப்
போங்கிக்கலுவத்தில் போட்டரைகற்பூரம்
பாங்கிலசூதத்திற் பாய்ச்சிச்சுருக்கிடே. (ருஉஅ)

சுருக்கிடச்சூதந்தான் றுள்ளாதுவாலையாம்
மருக்கிப்புகையாது மகத்தாங்கனலுக்கு
உருக்குந்தொழிலுக்கு மோடுங்குளிகைக்குஞ்
செருக்குமிதைவிட்டாற் சித்தெல்லாம்பொய்யாமே. ()

திரட்டுந்தொழிலுக்குஞ் சேர்ந்தகுளிகைக்கும்
மருட்டியசூதத்தை வளமாகச்சுத்திசெய்
தருட்டியேசுத்தித்துச் சத்துநீபூட்டினல்
பிரட்டாகுமோதான் பேரானசித்தரே. (ருகய)

பேரானசுத்தியிற் பெலப்படுமேசூதந்
தாரானதீபனந் தானுகுஞ்சாரணை
‡ காராணைப்போலே கவனங்கொடுபோகும்
ஆரார்கள்பார்த்தாலு மப்பனேதப்பாதே. (ருகக)

தப்பாமலிப்படிச் சரக்கானதெட்டெட்டும்
ஒப்பாய்ச்சுருக்கிடு வூறல்போய்ச்சுத்தியாம்
கொப்பானவேதை கொடுக்குமிகன்று
இப்பாலிதைவிட்டா லெய்தாதுவாதமே. (ருகஉ)

இரும் புருக்க (சத்து)

வாதம்பிறந்தது மகத்தாமிரும்பிலே
போதவிரும்புண்டால் புகழ்காயசித்தியாம்
தாதாவிரும்பு தனியொன்பதாங்கற்பம்
மாதாவிரும்பை வளமாயுருக்கிடே. (ருகக)

---

* ருதுவாய் - செந்திறமாக. † செயல் நீர் - உண்டாக்கு நீர்.
‡ காராணை - இந்திராணை.

உருக்கமுறைகேளு வுள்ளொளியோகிகாள்
பருக்கியசாரம் பரிவாம்பொரிக்காரஞ்
செருக்கியவீரஞ் சிறந்தசொருலிங்கம்
மருக்கியதாளக மன்னுநற்சூதமே, (ருகச)

சூதத்தோடாறையுந் தூக்காறுகாசிடை
வேதத்தோடொத்த வெடியுப்புநீர்வாரு
வாதத்தைப்பூசித்து வூகாயரைத்திடு
நீதத்தோடாறும் நிலையாகக்கட்டுமே. (ருகரு)

கட்டுஞ்சரக்கொடு காசிடைபூநாக
மட்டுறுவாளம் வளருமுட்காவேளை
எட்டுங்கலந்துட னெந்தாய்பதமுன்னி
வெட்டுருவேம்பின் விரையின்பருப்போடே. (ருகசு)

பருப்புடனஞ்சும் பகுந்தஞ்சுகாசிடை
அருப்பொடுமுன்னூறு மாகப்பதினென்றும்
விருப்பொட்டரைநீ வெடியுப்புநீர்வார்த்து
தருப்பொடரப்பொடி தானும்பலம்ரெண்டே. (ருகஎ)

ரெண்டையுங்கூட்டி நிமிரவைப்பாய்குகை
உண்டையுருக்கி யுறவாகக்கிண்டினால்
தண்டியுருகியுந் தானேமணியாகும்
அண்டிமணியை யடைவாய்நொருக்கிடே (ருகஅ)

அடைவாய்முன்போலே யளவாய்ப்பதினென்றும்
படைவாகக்கூட்டியே பாய்ச்சியுருக்கிடு
கடைவாகவேழ்தாங் கவளித்துருக்கிடு
தடைவான *சோதனை தாக்கிநீசோதியே. (ருகக)

சோதிக்கலோகந்தான் சொர்னம்போல்நின்றுடும்
மாதித்திரையில்லை மற்றுஞ்சவடில்லை
ஆதித்தபாடாண மறுபதுமுட்கொள்ளும்
†பேதிக்குந்தேகம் பிறக்குமிதிற்பொன்னே. (ருசய)

---

* சோதனை - மித்திரங் கூட்டியுருக்குதல்.

† பேதிக்கும் - நரைதிரைமாற்றும்.

சத்துச் செந்தூரம்.

பொன்னாகவேண்டினல் பூட்டுநல்லிங்கத்தைப்
பொன்னாகவேண்டினல் பூட்டதில்நாகத்தைப்
பொன்னாகவேண்டினல் பூட்டுநிமிளையைப்
பொன்னாகவேண்டினல் பூட்டுநீ *துத்தமே. (ருசக)

பூட்டுரசத்தைப் புகழானலோகத்தில்
நீட்டுநீதங்கமு நேராமிடையொன்று
ஆட்டுமணற்குள்ளே யக்தயிடைகெந்தி
கூட்டிப்பொடிசெய்து குப்பிக்கெடுத்திடே. (ருசஉ)

எடுத்தேளறித்திடு இயல்பாயறுசாமம்
படுத்தேசெந்தூரம் பவளநிறமாகும்
அடுத்தேநாட் †குண்ணி யமர்ந்துண்ண ‡மண்டிலம்
கடுத்தேயுன்றேகங் கல்லுச்சமன்மே. (ருசங)

கல்லாகுமுன்றேகங் கரத்தால்மலைகுத்திற்
சில்லாகும்தூளாகுஞ் சித்துமனேகம்பார்
வெல்லாவிரும்பினை வேண்டும்போதுண்ணலாம்
வல்லானசித்தரே வச்சிரதேகமே. (ருசச)

உடற் சிறப்பு.

தேகமிருந்தல்லோ சித்தெல்லாமாடலாம்
தேகமிருந்தாக்காற் சேரலாம்பூரணம்
தேகமிருந்தாக்காற் செயலெல்லாம்பார்க்கலாம்
தேகமிருந்தாக்கால் சேரலா ** முத்தியே. (ருசரு)

தேவி பூசை.

சேரவேகற்பஞ் செலுத்தியகாலத்தில்
ஆர ††மதிமேலேயாத்தாளைநீபாரு

* துத்தம் - துருசு. † குண்ணி - குன்றி.

‡ மண்டிலம் - வளைவு - ௪அ நாள்.

** முத்தி-மூன்றுதீ- அதாவது இரவி மதி அங்கிமூன்றுங் கலந்ததேமுத்தி யென்க. இக்கருத்தினை, பதஞ்சலியோகசூத்திரமும், கூறும்.

†† மதிமேலே-நிராதாரத்தில்.

12

தாரவேமூலத் தணலைப்பிறப்பிக்கும்
கோரவேகாமங் குமட்டிச்செரிக்குமே. (ருசசு)

செரிக்கின்றகாலத்தில் சேருஞ்சமாதியைத்
தரிக்கின்றமாயையுட் சாராதேவிட்டிடு
மரிக்கின்றவார்த்தைதான் வாராதொருநாளும்
துரிக்கின்றமோனத் துரியங்கைச்சிக்குமே. (ருசஎ)

வாம பூசை

சிக்கவேயாத்தாளைச் சீராக *வாமத்தில்
ஒக்கவேயண்ட முடன்மாங்கிசமது
பக்கம்பலகாரம் பாயசம்பாத்திரம்
திக்கெட்டிற்பூசையுஞ் செய்திடீர்சித்தரே. (ருசஅ)

சித்தாகுமீசற்குஞ் சேர்நிருவாணிக்குங்
கொத்தாய்வடையுங் குடத்தில்மதுவும்வை
பத்தான †தூபம் பரிமளம்பூச்சாந்து
முத்தானதீபத்தால் முன்னிட்டுப்பூசியே. (ருசகூ)

பூசித்துமன்பாய்ப் புகழ்ந்தேத்தியர்ச்சித்து
மாசித்துத்தாவென்று மாதாவைநீகேளு
‡ காசித்தியாகுங் கவனங்கொடுபோகும்
வாசித்துவாதமும் வந்துவணங்குமே. (ருரு0)

வணங்காம லாத்தாளை வாதத்தைப்பார்ப்போர்கள்
பிணங்கானவர்கட்குப் பேசாதேயிந்நூலை
இணங்காதவரோடே யெய்தாதுசித்தெல்லாம்
தணங்காள்நிருவாணி சண்ணுவாள்தப்பாதே. (ருருக)

தப்பாமல்நாதாக்கள் சகலபெரியோரும்
ஒப்பாமுனிவோ ருயர்ந்தமெய்ஞ்ஞானிகள்
எப்பானவேதாந்தி **எவ்வகைச்சித்தரும்
அப்பாவிவர்தா னருச்சிக்கும்பூசையே. (ருருஉ)

---

* வாமம் - விரைவில் சித்திக்கும்வழி " நாமிவளைப் பூசைசெய்ய நினைந்தவாறு நாட்டிலே சொல்லவென்றால் நகைப்பர்காணே " என்றார். கருவூரார்

† தூபம் - தசாங்கப் பொடியினையே பத்தான தூபமென்றார்.

‡ காசித்து - காயசித்தி யென்பது குறைந்து காசித்தெனவந்தது.

** எவ்வகைச்சித்தர் என்றதால் - தமிழ்நாட்டிலுள்ள சித்தர்களும் சமண மதத்திலுள்ள சித்தர்களையும் இராசேசுர தரிசன வழியொழுகுஞ் சித்தர்களையும் கூட்டியென்க.

பூசையறியாட்டாற் பூட்டாதேசூதத்தை
பூசையறியாட்டால் போட்டாதேவேதையை
பூசையறியாட்டாற் புருமையம்பாராதே
பூசையறியாட்டாற் பொய்யாகும்நூலெண்ணே. (௫௫௩)

நூலேதுசெய்யும் நுழையாட்டால்வாமத்தில்
பாலோடுமன்னம் படைத்தாலும்பாங்கல்ல
கோலோடுசூலமுங் கொண்ட *நிருவாணி
மேலோடுமண்டம் விளங்கஅுரைவாளே. (௫௫௪)

நாக சுத்தி

அறையாமலீச னகலாமல்வாதங்
குறையாமல்யோகத்தின் கூறோடுபூசைசெய்
நிறைவாகநில்லு நிமிஷத்திற்சித்தியாம்
துறையாமுறையெல்லாஞ்சொன்னார்கள்சித்தரே (௫௫௫)

சித்தானநாகம் திரமாகக்கட்டுண்ண
†வத்தானசித்தரே வகையாகக்கேளுங்கள்
கொத்தானநாகத்திற் குத்து ‡நுணலைநெய்
சத்தானசாரந் தனக்குள்ளேசாய்த்திடே.. (௫௫௬)

சாய்த்திடுங்காலம் தணல்வைத்துருகையிற்
பாய்த்திடுநெய்யைப் பருவமாய்க்குத்திவா
காத்திடவாருங் கலக்கும் பதினொன்றும்
ஆத்திடுவில்லைபோ லாகுங்காண்சுத்தியே. (௫௫௭)

நாகக் கட்டு

சுத்தித்தநாகத்தைச் சூட்டிக்குகைவைத்து
பத்தித்தகல்லுப்பும் பாங்காம்வெடியுப்பும்

---

* நிருவாணி - தேவிதசவித்தைகளுள் ஒன்றாகிய சின்னமஸ்த்தா, அல்லது காளி. சமணர் வணங்குஞ் சரஸ்வதியாகிய தாரையை நீலசரஸ்வதியென்றும்கூறுவதுண்டு. தமிழ்நாட்டிலுள்ளசித்தர்கள் "சிறுபெண்ணாத்தாளென்று" சிறுபெண்வடிவத்தினையே வழிபட்டுவந்ததாக அறியப்படுகின்றது. எனையோர் கலப்பால் இவை கலந்திருக்குமென்று யூகிக்கஇடனாகின்றது.

† வத்து - வஸ்த்து- தமிழில்-பொருள்-என்றுபெயர். வத்து என்பது பாலிமொழிச்சொல்.

‡ நுணலையென்பது- தவளையில் ஒருபேதம், இதனைமணற்காடையென்றுங் கூறுவர்.

ஒத்தித்தகார மொருமூன்றுங்கட்டினம்
அத்தித்தநாகத்துக் கந்தவிடைமூன்றே. (௫௫௮)

மூன்றும்பொடித்து முழுங்கவே தூவிவா
ஊன்றியேவாங்கி யுறவாகக்கட்டுண்ணும்
நீன்றியநாகம் நிலைத்தாடுங்கண்விட்டு
தான்றிப்புகையாது தாக்குமுறைகேளே. (௫௫௯)

முறையானநாக முதற்றரக்கட்டிது
அறையானசூத மதனிடைகூட்டிநீ
துரையானசாரமுஞ் சூழ்கட்டுங்காரமும்
நிறையாப்பொடிசெய்து நீட்டிவார்சூதமே. (௫௬௰)

நாகக்களங்குசேந்தூரம்

சூதமும்நாகமுஞ் சூழ்ந்தேயுருக்கையிற்
போதநற்சாரப் பொடிதூவக்கட்டுணுங்
கோதவிரண்டுங் குழறியுருகையில்
மாதையதங்கத்தை மாட்டிடுபாதியே. (௫௬௧)

பாதியையிய்க்தும் பருவத்தில்வாங்கிநீ
கோதிமணியைக் குழறப்பொடியாக்கி
நீதியாங்கெந்தகம் ரெட்டிப்பதிற்கூட்டி
ஆதியாம்வீர மதுவெட்டுக்கொன்றிடே. (௫௬௨)

ஒண்ணுகவஞ்சு முறவாகக்குப்பியிற்
பண்ணுயடைத்துப் பதித்திடுவாலுகை
தெண்ணுனதீமூட்டிச் சிவந்தபதம்பாரு
கண்ணுனசெந்தூரங் காட்டிற்பசும்பொன்னே. (௫௬௩)

பொன்னுன *லோகத்திற் பூட்டுவாய்நூற்ரென்று
பண்ணுனநாகம் பழுக்குஞ்சுகம்பாரு
எண்ணுதுறைக்கெல்லா மேற்றமிதுவாகும்
வண்ணுனிருவாணி வந்தித்தபீடமே. (௫௬௪)

பீடமாய்நின்ற பிலத்தமகாநாதம்
நாடவேவேண்டில் நலமாக்ப்பூசைசெய்

* ஈண்டு-லோகமென்றது செம்பினை. வடநூலார் இரும்பையும் லோகமென்பர்.

தேடவேவேண்டாஞ் சித்தியாமெட்டெட்டும்
ஆடவேநாகத்தி னுண்மையினுங்கேளே (௫௬௫)

சூதநாகச்செந்தூரம்

கேளேமுந்நாகம் கெடியாய்ப்பலமொன்று
வாளே*யிரும்பு வளமாய்ப்பலமொன்று
தாளேநற்றங்கம் தானும்பலமொன்று
ஏளேநற்சூத மிடுமுப்பலமிதே (௫௬௬)

பலமாகுமாறும் பருகியுருகையில்
தலமானகெந்தகச் சத்தினிலோர்பலம்
குலமாயுருக்கியே கொட்டிப்பொடியாக்கி
நலமாகரெட்டிப்பு நாட்டதிற்கெந்தியே. (௫௬௭)

கெந்தியுடன்கூடக் கே †யிருபத்தொன்றும்
அந்தித்துக்குப்பி யடைத்தேற்றுவாலுகை
பந்தித்தெரித்திடு பயிரவர்பூசைசெய்
கொந்தித்தசெந்தூரங் கோடியருணனே (௫௬௮)

அருணனுஞ்செந்தூர மாயிரத்தொன்றிட
வருணனைப்போலே வருடிக்குஞ்சொர்னந்தான்
தருணத்தினம்பார்த்துச் சண்ணிடக் ‡குண்ணிதான்
கருணைப்பராசத்தி காந்தியாங்தேகமே. (௫௬௯)

தேகத்தின்காந்திதான் சிற்பரத்தோடாக்கும்
வாகொத்தபூரணம் வாவென்றேகூவிடும்
ஆகந்திரமல்ல அண்டநிராகாரம்
பாகொத்தசித்தரே பாரீர்தாண்மையே. (௫௭௰)

நாகச் **செய்நீர்

ஆண்மைதான்சொல்ல வடங்காதநாகத்தை
வூண்மையாய்ப்பார்த்து மதிசூடிவாஞ்சையால்

---

* இரும்பென்றது-சத்தினையென்க. காந்தச்சத்தும் அப்பிரகச்சத்தும்கூட்டு வதும் மரபே.

† இருபத்தொன்று என்பது தமிழில் உகரமாகையால், உகாரநீரையுணர்த் தும். வெடியுப்பு நீரினையுங் குறிக்கும்.

‡ குண்ணி, குன்றி, குன்றுமணி என்க.

** செய்நீர்உண்டாக்குநீர், செயல் நீர், இயல்நீருக்குவெறுயது, இதையுண ராது வடமொழியென்பர்.

நீண்மையாய்த்தாய்க்கு நிமலைநன்னத்திக்கும்
வண்மையோசித்தரே என்வழிக்கொவ்வாதே. (௩எக)

ஒவ்வாதுநாகத் துதிக்குநீர்தான்கேளு
செவ்வாகச்சுத்தித்த நாகம்பலமொன்று
சிவ்வானசூதத்தைச் சேர்த்திடுபாதிகாண்
நவ்வாய்ப்பொடிசெய்து நாட்டிடாய்கல்வமே (௩எஉ)

கல்வப்பொடிமேலே கண்டவிடைவீரம்
வல்லொக்கத்தூவியே வைத்திடுமூலையில்
செல்வச்செயனீர் திரண்டோடும்வெண்மையாய்ச்
சொல்லொத்தவேதை துதிக்கநாவில்லையே. (௩எ௩)

காடிக்காரக்கட்டு.

நாவில்லாநீரின்பேர் நாகச்செயனீர்காண்
காவில்லாநற்காடிக் காரத்தின் வேதைகேள்
தாவில்லாநீருக்குள் தானேதுவைத்ததை
மேவில்லாத்தங்கத் தகட்டைமேற்சுற்றிடே. (௩எச)

சுற்றியேதோய்த்துச் சுகமாகவாட்டினுல்
பற்றியேயுள்ளீர்க்கும் பாரீரிதனுண்மை
அற்றிப்பரிதா னதற்குநாற்கொண்டேற்றி
மற்றிமயிர்சுற்றி மாட்டிடாய்தீபமே (௩எரு)

காடிக்காரச்சேந்தூரம்

தீபத்தில்வாட்டச் சிவப்பாகுமட்டுமே
கோபத்தைவிட்டிடு கொட்டுமதுமச்சை
ஆபத்தைநீக்கிட வரத்தாளைப்பூசைசெய்
சோபத்தைநீக்கிடுஞ் சொர்னவருடமே. (௩எசு)

*வருடம்பொருந்திடும் மாதாவைபூசித்தால்
அருடெறுமாங்கார மருணன்பனியாகும்
பொருடரும்லோகத்திற் போட்டிடுநூற்றென்று
புருடமுற்காரம்போற் †பொட்டிலைவாட்டிடே. (௩எஎ)

---

* வருடம். ஈண்டு மழைவினையுணர்த்தினுங் கருணைமழை பொழிகின்ற தாய் என்றுகருத்து.
† பொட்டில், வெடியுப்பு.

இணங்கன்செந்தூரம்

வாட்டுமிணங்கன் வள்மாய்ச்செந்தூரிக்கும்
ஓட்டுநவலோகத் தொருநூற்றில்வேதைதான்
காட்டுந்துரிசுடன் கட்டினசாரமும்
நீட்டுமுன்தீபம் நிலையாய்ச்செந்தூரமே. (ருளஅ)

துருசுசாரம் கல்லுப்பு செந்தூரம்

செந்தூரமுன்போலே செய்திடுகல்லுப்பைப்
பந்தூரமஞ்சுமே பாங்காகுஞ்செந்தூரம்.
எந்தூரமோடு மெனக்கேட்கில்நூறோடும்
கந்தூரும்வேதையைக் காணீர்பெரியோரே. (ருளகூ)

நாகக்குரு

பெரியோரேநாகம் பிலக்கக்குருபண்ண
* பரியோமுன்னுகத்திற் பாய்ச்சிடுநேரிடை
சரியோநற்சூதமும் தாக்குமதர்க்குள்ளே
வரியோடுகல்வத்தில் வைத்துப்பொடிசெய்யே. (ருஅ௦)

பொடிக்குச்சமனுகப் பூட்டுசெவ்வீரத்தைப்
பொடிக்குச்சமனுகப் பூட்டுவெண்கண்டரைப்
பொடிக்குச்சமனுகப் பூட்டுவெருக்கன்பால்
பொடிக்குத்துவளப் பொலிவாயரைத்திடே. (ருஅக)

அரைத்தேயுருட்டி யடைவாகமெல்லிதாய்த்
தரைத்தேநல்வில்லையைச் சாரவுலர்த்திடு
புரத்தேநல்லண்டப் பொடிபோடுகீழ்மேலும்
துரத்தேபுடமொன்று சூழக்குருவாமே. (ருஅஉ)

குருவானநாகங் கொடுக்குமுறைகேளு
அருவான †வொன்பதி லந்திப்பாய்நூற்றொன்று
திருவாகுமாற்றுச் சிறக்கப்பதினறு
மெருவாகுந்தங்கத்தின் மேற்பூசிப்போட்டிடே. (ருஅ௩)

---

* பரி - தங்கம்.

† ஒன்பது - நவலோகம்.

தங்கக்குரு

போட்டிடிற்றங்கம் புடத்திற்குருவாகும்
ஆட்டியவேதைக் களவில்லையான்சொல்லேன்
நீட்டியபூரணம் நிர்மலச்சித்தரே
காட்டியநாகங் கரைசொல்லக்கூடாதே. (௫௮௪)

சாரச்செய்நீர்

கூடாதசாரச் செயனீர்க் குணங்கேளு
தாடாங்கிளிஞ்சி சமனிடைகாரமும்
நீடாய்ப்பொடித்து நிறுத்திவைமூன்றுநாள்
வாடாக்குகைக்குள்ளே வைத்திடாய்காரமே. (௫௮௫)

காரமுருகையிற் காட்டிவாமுன்பொடி
தாரவேதீயினிற் றண்ணீர்போல்நின்றாடும்
ஓரவேகொட்டி யுரவாய்ப்பொடிசெய்து
ஆரவேகல்வத் தமர்த்திப்பனிவையே. (௫௮௬)

வைத்திடநீராகு மகத்தாஞ்செயனீரு
கைத்திடநாகங் *கருலோகஞ்சுத்தியாம்
பைத்திடப்பாடாணம் பலமற்றுமூறல்போம்
பொய்த்திடவாட்டு முதற்றாரநீரிலே. (௫௮௭)

வேஷயுப்புச் செயல்நீர்

நீராகியுப்பு நிலைக்குமுறைகேளு
ஆராங்கிளிஞ்சிற் சதையையுலர்த்தியும்
பாராய்கரண்டியிற் பாங்காய்வெடியுப்புத்
தாராயுருகையிற் றாக்காய்சதையென்னே. (௫௮௮)

சதையுண்டிணங்கன் றம்பித்துநின்றிடும்
அதையுண்டுவாங்க வரிதாஞ்செயனீராம்
கெதையுண்டபாணம்போற் கெடியாகக்கட்டிடும்
பதையுண்டநீர்தான் பகரமுடியாதே. (௫௮௯)

முடியாதநீருடன் முன்சாரநீறும்
பிடியாய்ச்சரிகூட்டிப் பேதித்தால்வெண்ணையாம்

---

* கருலோகம்-செம்பு. அல்லது இரும்பு.

வடிவானவீரம் வழங்கியகற்பூரம்
கடியாம் *வெண்கண்டர் கலந்தங்குவைத்திடே. (ருகூ0)

சரக்குக் கட்டு

வைத்தேயிதற்குள்ளே மாட்டிடுவெண்காரம்
கைத்தேசவுக்காரக் கடுஞ்சுன்னத்தோடஞ்சும்
ஒத்தேயிடைதா னென்றுக் கொருபலம்
பைத்தேயிணங்கனும் பாய்ச்சாய்பலம்ரெண்டே. (ருகூக)

ரெண்டோடுவஞ்சும் நிலையாகமத்திக்கத்
தண்டாதிருண்டுந் தயிர்வெண்ணெபோலாகும்
கண்டேசரக்கெல்லாங் கட்டுமேவாட்டிடப்
பண்டேகதையல்ல பார்க்கையிற்கொல்லுமே. (ருகூஉ)

கொல்லுமேபாடாணக் கூட்டவினமெல்லாம்
கொல்லுமேசாரக் காரக்குலமெல்லாம்
கொல்லுமேயொன்பான் கொடிதானலோகத்தைக்
கொல்லுமேசூதம் கோபத்திலானையே. (ருகூங)

செயல்நீரின்மகிமை

ஆனையைப்போலே யசைந்தாடுஞ்சூதந்தான்
பூனையைப்போலே புலம்பித்தவித்திடுஞ்
சேனையைக்கட்டும் தெளிவாம்நவநீதம்
வானைக்கடந்தோடி வாழ்கின்றசித்தரே. (ருகூச)

துரிசின் சுன்னம்

சித்தானசாரச் செயனீரில்சவ்வீரம்
கொத்தாய்க்கரைத்துக் குழப்பியேகண்டர்மேல்
நித்தாரப்பூசி நிலையொருமண்டிலம்
வித்தாரவெய்யில் விளங்கநீபோட்டிடே. (ருகூரு)

போட்டிடப்பச்சை பொருமிக்கழண்டோடும்
நீட்டிடச்சூதம் நிலைத்தாடும் வெண்ணெய்போல்
ஆட்டிடக்காண்பா யகண்டநவநீதம்
கூட்டிடவேமார்க்கங் கொண்டார்க்குச்சித்தியே. (ருகூசு)

* வெண்கண்டர்-பால்திருசு-வெண்துத்தம், மடையன், எனவும்பெயர்.

சீரக் கட்டு

சித்திவெடியுப்புச் சேர்ந்தசெயனீரில்
பத்தியசாரத்தைப் பாங்காய்த்துவைத்துநீ
அத்தியமண்சிலை அப்பா வெயிலில்லை
முத்தியசார முதற்றரக்கட்டிதே. (ருகூஎ)

கட்டு வகை

கட்டிடுமிந்தக் கடியதோர்சீனத்தை
ஒட்டிடுமிப்படி யுறவாகவெண்காரம்
மட்டிடுமிப்படி வளமானகல்லுப்பும்
பட்டிடுங்கண்டாய் *பச்சைக்கிளிக்கட்டே. (ருகூஅ)

கட்டுந்துரிசுங் கடியதோர்காரமும்
வெட்டுநற்சார முடன்சேர்ந்த்சினமும்
விட்டுநற்பூரம் விளங்கியகல்லுப்பும்
கொட்டுமமுறிமனத் தினீரின் கூர்மையே. (ருகூகூ)

கூர்மையோடேமூங் குறிப்பாய்ச்சமபாகம்
வார்மையாய்வாய்நீரால் மத்தித்துவீரன்மேல்
தார்மையாய்க்கட்டுந் தணல்வாட்டுதிபத்தில்
ஓர்மைசெய்சிலை யுயர்வேவாட்டிடே. (சூா)

வீரக்கட்டு

வாட்டிடவாட்டிட வளமாகச்சவ்வீரம்
வாட்டிடவாட்டிட மணிபோலுருகிடும்
நீட்டிடத்தங்கம் நிமிஷத்தில்நீறுகும்
பூட்டிடவேதையும் போகுங்காண்தூரமே. (சூாக)

தூரமுமோடிடுஞ் சூதத்தைக்கொன்றிடும்
பாரமுமல்ல பலகாரஞ்சாரங்காண்
நேரமுமில்லை நிமிடத்திலுப்புநீர்
ஆரமும்பூண்டநம் மாத்தாளறைந்ததே. (சூாஉ)

அறைந்தாளேயாத்தா ளவளைநான்பூசிக்க
நிறைந்தாளேயுள்ளே நிலைத்த †மதுவாலே

---

* பச்சைக்கிளி - துருசு.
† மது - மதியமுதம்.

அறைந்தாளேமூலத்தி லாமென்றுமேலோடிக்
குறைந்தவள்காலுக்குள் கூடினள்பார்த்தேனே. (கூாக)

பார்த்தேனேஞானத்தைப் *பட்டப்பகலாகக்
கோர்த்தேனேவாசி குறிப்பாகவொன்பதில்
தேர்த்தேனேராசனுஞ் சூதத்தைக்கட்டிநான்
போர்த்தேனேசாரணை பூட்டினேன்கண்டிடே. (கூாச)

உபரசச் சத்து

கண்டிடுகட்டிய சாரமுமோரிடை
தண்டிடுவெண்காரந் தன்னோடுவீரமும்
பண்டிடத்தாளகச் சத்தும்பரிந்திடு
மண்டிடும்கண்டர் வளமான †ரங்கியே. (கூாரு)

ரங்கொடுமாறும் நிறைதான்சரிகூட்டிப்
பங்கானவுப்புநீர் பாங்காயரைத்திடு
மங்காவுபரசம் வாங்கிடச்சத்ததில்
தங்காமல்நாளொன்று தாக்கியுருக்கிடே. (கூாசு)

உருக்கிடச்சத்தாகு முபரசமெல்லாந்தான்
பருக்கிடலோகம் பரிந்தாடும்தண்ணீர்போல்
நெருக்கிடரத்தினம் நிமிஷத்தில்நீராகும்
சொருக்கிடுசாரணை சூதத்திற்சோதியே. (கூாஎ)

சோதித்துச்சூதத்தைச் சூட்டாட்டாற்சாரணை
ஆதிக்கெவன மடைவாயெடுக்காது
பேதிக்கமாட்டாது பெலமானகாயத்தை
வாதிக்கேயாகும் வகுத்ததோர்ஞானமே. (கூாஅ)

அருட்சத்தி கருணை

ஞானங்கொடுப்பாளே நாடினல்மாதாவை
பானங்கொடுக்கையில் பரத்துக்கென்றேகொடு
தானங்கொடுக்கையில் தாய்க்கென்றேயுன்னுயிர்
வானந்திறக்குமே வாதமுஞ்சித்தியே. (கூாகூ)

* பட்டப்பகல் - எவ்வகையிருளு மணுகாத சுத்தநிலே.
† ரங்கு வளையல நஞ்சு.

அமுத சித்தி

சித்தியாம்பானத்தால் சேர்ந்திடுமெட்டெட்டும்
முத்தியாம்பானத்தால் முப்பாழுஞ்சூனியம்
பத்தியாம்பானம் பரத்திலேசேர்த்திடும்
சத்தியாம்வேதாந்தத் தாயவள்கண்டிடே. (கூ௱ய)

தேவி பூசையின் பலன்

கண்டவர்சித்தர்கள் கவனிகள்ஞானிகள்
உண்டவர்யோகிக ளொளியா *மறையோர்கள்
ஓண்டவமாற்று மோரைந்துபேர்களும்
மண்டியேபூசித்து மகத்துவமானரே. (கூகக)

மானரேயாயினர் மாதாவைப்பூசித்து
தேனரவேயுண்டு சேர்ந்தார்பதிதோரும்
வானறைத்தாண்டலா † மாயமும்போக்கலாங்
‡ கோனறுகூடுங் குறிக்கெய்தும்பானமே. (கூகஉ)

**அமுரி தாரணை

பானத்தைவாங்கயிற் பூங்காய்வகாரத்தை
ஊனத்தைவிட்டு உறிஞ்சியேபூரித்து
தேனைத்துநின்ற சிகாரத்தையூதிட
வானைத்துநின்ற மனோன்மணிகாண்பளே. (கூகங)

காண்பாள்மனோன்மணி கண்டிடும்பூரணம்
வீண்பாழாய்நாளை விட்டுமறவாதே
ஏண்பாகநித்த மெய்துமென்றெண்ணுதே
பூண்பாகச்சொல்லுவேன் பொலிவாகச்சித்தியே. ()

---

* மறையோர் - மறைமொழியுடையோர் அதாவது பொருள் விளங்காத சொல்லுடையார், இதனை நிறைமொழி மாந்தர் ஆணையிற்கிளத்த மறைமொழி தானே மந்திரமென்ப. எனத்தொல்காப்பியம் கூறும். ஆரியரையன்று.

† மாயம் - மயக்குவது அதாவது மண், பெண், பொன்.

‡ கோனறு - கோன் தலைவன் ஆறு-கூடும்வழி- கடவுளைக்கூடுமோர்க்கம்என்றுயிற்று.

** அமுரி - மூத்திரம். இரகசிய முண்டு குருவாலறிக.

சமாதி *இளகியம்

† சித்தியாமூலிகை சேருபலமொன்று
ஒத்தியவண்ட மூரப்பொடுமூன்றதில்
மத்தியபத்திரி வழங்கியசாதிக்காய்
அத்தியசிரக மதனில்கிராம்பிடே. (௬௧௫)

இட்டேகசகசா வியல்சிறுநாகப்பூ
மட்டான ‡சாரப் பருப்புடனேழையும்
தட்டேயிடைதான் சரிதூக்குகால்பலம்
மட்டாகவார்நெய் மணக்கவறுத்திடே. (௬௧௬)

வறுத்துமோரேழு மறுமுன்னிரண்டையும்
விரைத்தாவின்பாலில் மெழுகிலரைத்திடு
தரைத்தேகொதிக்கையில் சர்க்கரையீர்பலம்
நிரைத்தேகுழம்புக்குள் நீட்டிழதுவாரே (௬௧௭)

வாரேயுருட்டிடு வைத்துவை வத்துவில்
வாரேயுதயத்தில் வாசமெல்லாந்தீர்த்து
பாரேசமாதியிற் பாக்களவேயுண்டு
யாரேனும்பிற கெல்லாம்புசித்திடே. (௬௧௮)

பத்தியம்

புசிக்குமுறையெல்லாம் பூரணிக்கேயென்னில்
மெசிக்குநற்றூடமு மிங் **கிழைவாராது
†† வசிக்குள்மறவாதே மகத்தானசித்தரே
தசிக்கவேமந்திரந் தாக்காய்ச்சமாதியே. (௬௧௯)

சமாதியையுன்னிடு தாயாரைப்பூசித்து
‡‡ அமாதிக்கிரிகையா யாகத்தைச்செய்யாதே

* இளகியம் - இளகியது இதனைப்பிற்காலத்தில் லேகியமெனக் கூறுவதாயிற்று.

†சித்தியாமூலி - கஞ்சா அல்லது செகப்புச் சித்திரமூலவேர்.

‡ சாரப்பருப்பு - காட்டுமாம் பழத்தின் பருப்பு.

** இழை - நூல் அளவு அதாவது கொஞ்சம்.

†† வாசிக்குள் என்பது வசிக்குள் எனக்குறைந்தது.

‡‡ அமாதி - உடலிறத்தல்.

*கமாதிப்பொறிவழி கண்டுநீயோடாதே
புமாதிப்பொன்னுசை பூட்டாதேபொல்லாதே. (கூ௨0)

பொல்லாதவானந்தம் பூட்டிடுங்காலத்தில்
மல்லாடாதேநின்று வார்த்தைகள்பேசாதே
சொல்லாதேயொன்றையுங் கூடாதேபெண்ணொடுஞ்
செல்லாதேதீ †யினிற் சேர்வாயகண்டமே. (கூ௨க)

அகண்டஞ்சிவமாச்சு வாத்தாள்விளக்காச்சு
தகண்டவிரண்டுஞ் சமனடுச்சீவர்க்கு
உகண்டவுன்மனியு முபாயப்பதிதோன்றும்
‡ சிகண்டியுந்தாண்டிடிற் சின்மயங்காணுமே. (கூ௨௨)

சித்தமார்க்கச் சிறப்பு

காணுமேஞானங் கடுகப்பலித்திடுங்
காணுமேயோகங் கடுகப்பலித்திடுங்
காணுமேவாதங் கடுகப்பலித்திடுங்
காணுமேகாயங் கடுஞ்சித்திமுத்தியே. (கூ௨௩)

முத்திக்கிதைவிட்டால் மூவுலகுப்யாது
சித்திக்கிதைவிட்டால் தேடியுங்கிட்டாது
பத்திக்கிதைவிட்டால் பரத்துக்குவாழ்வல்ல
கத்திய **வேதங் கடைசியிலுண்மையே. (கூ௨௪)

உண்மையிதைவிட் டுசாவவுமொன்றில்லை
வண்மையாய்ப்பார்த்து மகிழ்ந்தார்பெரியோர்கள்
தண்மையாய் நாயேனுந் தக்கபடிசொன்னேன்
நன்மையாய்கந்தி நாட்டுமுறைப்பாடே. (கூ௨௫)

முறைபாடுகேளு முநூற்பனிரண்டும்
மறைபாடுலகில் வைத்தியம்நான்சொன்னேன்

---

* கமாதி - காமாதி. காமமுதலியதீயகுணங்களை.

† தீயில் - நரகத்தில்-

‡ சிகண்டி - மயில். இதுசோடகலா தரிசனத் தொன்று. இதுயோகக் காட்சி.

** வேதம் - மறை- கடைசி-முடிவு அதாவது வேதாந்தம் இது தமிழ் மறைமுடிபையே. உபயவேதம்உபயவேதாந்தம்எனவைணவர்ஒப்புகின்றார்கள்

நிறைபாடத்தாயருள் நின்மலஞ்சித்தர்க்குத்
துறைபாடு *மைந்நூற்றில் சூட்டுமுறைகேளே. (௫௨௬)

தோகுப்பு

கேளேமுன்சித்தி கிடைத்திடச்சோதனை
வாளேநற்கற்ப மகத்தானமெய்ஞ்ஞானந்
தாளேகுளிகை சமைத்திடச்செந்தூரம்
நாளேபரிக்குரு நற்கட்டுமார்க்கமே. (௫௨௭)

மார்க்கங்கவனம் வழங்கும்புரியட்டம்
ஏர்க்கவேயண்ட மெழிலாகவுற்பனம்
பார்க்கவேமேருவின் பட்டினந்தெய்வங்கள்
சேர்க்கமனோன்மணி சித்துக்கள்சொன்னேனே. (௫௨௮)

சொன்னேனேசாரணை சொர்னரவிக்குரு
சொன்னேனேசார காரத்தின்சூட்சத்தைச்
சொன்னேனேயாத்தாளைச் சுகமாகப்பூசிக்கச்
சொன்னேனேயாத்தாள் சூழ்பூசைமார்க்கமே. (௫௨௯)

மார்க்கமாய்ச்சக்கரம் வழங்கியவட்சரம்
மார்க்கமாய்வாசியை வைக்குமுறைப்பாடு
மார்க்கமாய்மூக்கில் மனோன்மணிமெய்ஞ்ஞானம்
மார்க்கம்பிடரி மகத்தானயோகமே. (௫௩௰)

யோகமாய்மூலத் துதிக்கின்றவென்னந்தி
பாகமாய்நெஞ்சிற் பகிர்ந்தாவியேகமாம்
ஆகமாய்நின்ற வசபையினுண்மையும்
தாகமாய்முப்பாழுந் தப்பாமல்சொன்னேனே. (௫௩௧)

நூற்பலன்

சொன்னேனேஐந்நூறு சூட்டுமுன்னுயிரம்
பன்னப்பலந்தான் பகருவேன்வல்லோரே
சின்னஞ் †சிறுபிள்ளை தேசுநாலெஞ்ஞாறும்
மன்னுஞ்சிவஞான வாசிக்குள்வாள்வரே. (௫௩௨)

---

* ஐந்நூறு - என்று இரண்டுபாட்டில் குறிப்பிடுவதால் மூலர்செய்தது 500ம் பிற்காலக்கலப்பு மீதியோ வெனவுஞ் சந்தேகிக்கலாம். அன்றியும்-நாடியந்தாதி நூறும் சேர்த்ததோ வென்றும் ஐயுறலாம்.

† சிறுபிள்ளை - பரதேவதை. பாலை,

சித்தர்களுக்குஇடம்

வாழ்வார் *மலைதோறும் வாதத்தோடேட்டெட்டும்
தாழ்வாவதில்லை சகலமகாசித்தி
கேழ்வாமுன்னுயிரங் கேளிந்தவைக்நூறுஞ்
சூழ்வாகநித்தஞ் சுகமாகப்பார்த்திடே. (௬௯௩)

பார்த்திடுமாயிரம் பாட்டினுமெத்தவே
கோர்த்திடுமறுநூறு கோட்டினேன்ஞானத்தை
சேர்த்திடுரெண்டுந் திரட்டையுமொன்றாகக்
கார்த்திடுஞ் †சித்தைக் கடைந்தெழும்வெண்ணையே. ()

வெண்ணைகடைந்தேன் விளைரந்தேழுலட்சத்தில்
எண்ணெயைப்போலே யிதையுமுருக்கினேன்
கண்ணைத்திறந்தே கடுஞானவேதாந்தி
எண்ணைக்கும்பார்க்கலா மிந்தநூல்முற்றுமே. (௬௯௫)

---

* மலையில் இயற்கைச்சத்தி மேனேக்குந்தன்மையுள்ளதால் சித்தர்களுக் இருக்கையாயிற்று.

† ஈண்டுச் சித்தையென்றது - சித்தர்களுடைய கருத்தை யென்றுணர்க

திருமூலர் கருக்கிடை வைத்தியம் அறுநூறு.

முற்றிற்று

அன்புவாழ்க.

சித்தர் வாழ்க.

ஓம்

சித்தர் துணை

பொருட்பிறிவு அகராதி.

பொருள்.		பக்கம்.
அண்டநிலை		35
அண்டங்களைக்காணல்	59	67
அண்டத்திலுள்ள இயற்கைச்சித்தரைக்காணல்		59
அண்டஉற்பத்தி	30	78
அண்டபிண்டஒற்றுமை		78
அண்டபிண்டம்		79
அபக்குவர்	42	55
அமுதசித்தி		100
அமுரிதாரணை		100
அருவசித்தி		32
அருளொளி		43
அருட்சத்திகருணை		99
அறுதிகூறல்		52
அனுகதம்	58	82
அன்னமே சாவிக்கும் பிழைப்பிக்குமெனல்		11
ஆக்ஞை	58	85
ஆண். பெண். அலி.		2
ஆண்பெண்அலிஇரட்டைப்பேறு		3
ஆயிரமிதழ்க்கமலம்		83
ஆறுதாரம்		30
ஆறுதாரநிறமும் இடமும்		83
ஆறுதிங்களிலும்உடனேயும்சாகுங்குறி		9
ஆறுநாளில்சாகுங்குறி		9
இணங்கன்செந்தூரம்		95
இயற்கைத்தங்கம்		65
இரத்தமூலம்		14
இரத்தமேகம்		16
இரத்தமலடு		19
இரத்தினசாரணை		67
இரும்புருக்க (சத்து)		87
இலங்கணமிடுதல்		12
இவருக்காகாதெனல்		78
உடற்குறை		3
உடலைம்பூதம்	6	74
உடற்சிறப்பு		89
உபதேசம்	32	34
உபரசச்சத்து		99
உமிநீர்க்குறியாற்சாவு		11
உருவசித்தி		32
உருவசித்திபெற்றோர்வயது		46
ஊத்தினக்குளிகை		53
ஐம்பூதங்களின்குணம் இடம்		8
ஐயகுணம்		8
ஐயகுன்மம்		17
ஐயசூலை		18
ஐயபித்தசூலை		18
ஐயமதுமேகக்குணம்		16
ஐயவாதசூலை		18
ஐவகைமேகம்		16
ஒருமாதத்தில் சாகுங்குறி		10
ஓராண்டிலும் ஈராண்டிலும் சாகுங்குறி		9
கட்டுவகை		98
கண்ணோய்வருங்காரணம்		20
கண்ணோய்தீருமருந்து		21

பொருள்.	பக்கம்.
கபவாதமேகநிறம்	15
கடசோதனையின்பலன் ...	29
கருப்பக்கோள்	1
கருப்பச்சன்னி	20
கருங்கரிசாலை	26
கலைச்செலவு	46
கல்லுப்புக்கட்டு	69
கல்லுப்புக்குரு	69
களிம்புநீங்காதசத்துக்கள் பயனில்லையெனல்	45
கற்ப முண்ணும்போதுண்டாமவத்தை	25
கற்பத்துக்கனுபானம் ...	25
கற்பம் தின்னவயது ...	51
கன்னிப்பெலன்	43
காடிக்காரக்கட்டு... ...	94
காடிக்காரச்செந்தூரம் ...	94
காயசித்தி	12
கிராணியின்குறி	14
குட்டநோய் பதினெட்டின் விபரம்	21
குமரிக்கற்பம்	25
குளிகை எட்டின்பெயர் ...	40
குளிகையின் அனுபவம் ...	41
குளிகைத்திருட்டு.... ...	63
குளிகைவாங்கினது	64
குளிகைக்குச்சாரணை ...	66
குன்மம்வருவிதம் ...	17
குன்மம்,குட்டம்,கிராணி மூலங்களுக்கு	22
கெந்தகச்சத்து	75
கெவனம் ,... 50	62
கோபமேபாவம்	40
சகலநோய்களும் தீரக் குருச் செந்தூரம்	22
சதைமலடு	19
சத்துக்கள்சோதிக்க ...	44
சத்துஉருக்கமித்திரம் ...	76
சத்துச்செந்தூரம் 27	89
சமாதிநிலை	47
சமாதிஇளக்கியம்	101
சம்பிரதாயம்	56
சரக்குகளும்தேவர்களும்	38
சரக்குக்கட்டு	97
சாகுங்குறிசாகாக்குறி 10	11
சாதிகள்	2
சாரக்கட்டு ... 71	98
சாரக்குரு	72
சாரச்செயனீர்	96
சிக்குநீர்மேகம்கல்லடைப்பு மேகம்	15
சித்தமார்க்கச் சிறப்பு ...	102
சித்தர்களுக்கு இடம் ...	104
சிவயோகமும் சித்திகளும்	67
சீழ்மேகம் வாயு சூலை பலமேகம்	12
சீழ்மலடு	19
சினக்கட்டு	71
சுகசன்னிவருங்காரணம்...	13
சுரத்துடன்வாயு (பிளேக்)	13
சுரம் தோஷம் சன்னி வாயு கற்பசூலைதீர	21
சுவாதிட்டானம் ... 57	80
சூதக்கட்டு	87
சூதமணி	86
சூதசுத்தி	94
சூதநாகச்செந்தூரம் ...	16
சூலையின்வகை	93
செயல்நீரின்மகிமை ...	47
சோதனை	3
தங்கக்குருவினால்காய சித்தி	6 7
தங்கக்குரு	69
தங்கச்செம்பு	74
தமரேரிமேகம்நீர்த்துளி மேகம்	1
தாபச்சுரமும் சீதச்சுரமும்	58

பொருள்.	பக்கம்.
தீர்க்கதரிசனம் (முற்றுணர்வு)	47
துரிசின்சுன்னம்	97
துருசு குரு ...	53 72
துருசுசாரம் கல்லுப்புச் செந்தூரம்	95
தேவிபூசை	89
தேவிபூசையின்பலன் ...	100
தொகுப்பு	103
தோஷநிறக்குறி	8
நரகசொர்க்கம் ...	39 40
நற்புத்தி	72
நன்மார்க்கம்	54
நாகக்கட்டு	91
நாகக்களங்குச்செந்தூரம்	92
நாகக்குரு	95
நாகசுத்தி	91
நாகச்செய்நீர்	93
நாகத்தின்பேதம்	39
நாகவேதை	39
நாடிகளுக்குமாத்திரையளவு	5
நாடிகளேதாதுக்கள் ...	5
நாடிகளேவாயுக்கள் முக்கியம் மூன்று ஆறுதாரம் மும்மண்டலம்	4
நாடிநடைக்குவமானம் ...	6
நாடிநிறம்	6
நாடியிடம்	6
நாடி எஉகூ த்தில்பத்துமுகியம்	4
நாள்மூன்றிலும்பதினேந்திலும்சாகுங்குறி	9
நிராதாரம்	58
நீரிழிவு மதுமேகம் ...	15
நூற்களிருக்குமிடம் ...	60
நூற்கோவை ...	45 62
நூல்தொகை	30
நூற்பலன்	103

பொருள்.	பக்கம்.
நூல்மகிமை	51
நோய்கள்வருங்காரணம் ...	11
பக்குவர்	56
பஞ்சகற்பம்	29
பஞ்சபூதபிண்டோற்பத்தி	3
பஞ்சபூதவொடுக்கம் ...	33
பஞ்சப்பொறிவித்தை ...	52
பஞ்சமூலிகைக்கற்பம் ...	27
பத்திடங்களில்நாடிகாண	10
பத்தியம்	28 101
பரம்பரைமேகம் ...	16
பரிக்குரு	65
பரிச்செம்பினைல்காயசித்தி	77
பித்தகுணம்	7
பிறக்கும்போதேநோயும்பிறந்தது	4
பூழுவால்மலடு	19
பூசையின்பலன்	42
பேசிக் கொண்டிருக்கையிற்சாகுதல்	13
பொருளுணர்தல் (ஞானம்)	84
பொறிகளிலேம்பூதம் ...	7
பொற்றலேவல்லாரை ...	26
மகாதோஷக்குறி	10
மணிபூரகம் ...	57 81
மணிக்குச்சாரணையறிதல்	64
மந்தன், ஊமை, குருடன்	3
மந்தம் வருதல்	11
மருந்துவகை	61
மலடு அறுவகை	19
மனம் புத்தி யியல்கூறல் ...	86
மாணவர் வினு வுக்குவிடை	60
மாதோஷம் காயமழிதல் ...	13
மிளகுகற்பம்	26
மூளைமூலம்	14
மூலத்தின்பயன்	14
மூலம்வருங்காரணம் ...	13
மூலாதாரம் ...	57 80
மூலிகைகருப்பாக ...	20

பொருள்.		பக்கம்.
மூலிகைக்கற்பம் ...	...	24
மூவகைநாடியறிய...	...	5
மூவகைவாயுநாடி ...	...	5
மூவாண்டிலும்ஆறுதிங் களிலும்சாருங்குறி		9
மெய்ந்நெறி ...	...	54
மேககுன்மம் ...	....	17
மேகத்தாலுடல்நிறம்	...	15
மேகநோய் இருபத் தொன்றும்தீர		21
மேகமுண்டாகும்விதம்	...	12
மேகம்(உக)ல்பித்தமேகநிறம்		14
யோகக்காட்சி ...	...	48
யோகம் ...	24	36
வகார சிகாரப்பொருள்	...	69
வயதுண்டாங்காரணம்	...	3

பொருள்.		பக்கம்.
வாதக்குணம் ...	...	7
வாதகுன்மம் ...	...	17
வாதசூலை ...	...	18
வாதபித்தசூலை ...	...	18
வாதமும்நற்புத்தியும்	...	54
வாமபூசை ...	...	90
வாயுவின்சிறப்பு ...	...	8
வாயுவேசகலத்துக்கும் மூலமெனல்		13
வாயுமலடு ...	...	19
விசுத்தி ...	58	82
வீரக்கட்டு ...	71	98
வெளிக் காணாது எலும் புருக்கும் மேகம்		51
வைத்தியர்க்குறுதி	...	10

பொருட்பிறிவு அகராதி முற்றிற்று.

சித்தர் வாழி.

திருவருள்

வாழி.

சித்தர் துதி

நந்தியகத்தியர் மூலர்புண்ணாக்கீசர்-நற்றவத்துப் புலத்தியரும் பூனைக்கண்ணர்-கந்திடைக்காடரும் போகர் புலிக்கையீசர் கருவூரார் கொங்கணர் காலாங்கியன்பிற் - சிந்திலமுகண்ண ரகப்பையர் பாம் பாட்டி-தேரையருங்குதம்பையருஞ் சட்டைநாதர் - செந்தமிழ்ச்சிர் சித்தர்பதினெண்பேர் பாதஞ் சிந்தையுனிச் சிரத்தணியாய்ச் சேர்த் தி வாழ் வாம்.

அன்புவாழ்க

அருள்நெறி

வாழ்க,